பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 03 சனிக்கிழமை (20-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 196

## ஆலோசனைகளுடன் அரசு-புலிகள் சந்திப்பு ஒரு வரலாற்று நிகழ்வு என்கிறார் ஹெல்கிசன்

கொழும்பு,செப்.20

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசின் ஆலோசனைகளுக்கு மாற்றீடாக விடுதலைப் புலிகள் தயாரித்த ஆலோசனைகள் தொடர்பாக இரு தரப்புகளும் கூடிப் பேச இருப்பது ஒரு வரலாற்று நிகழ்வு ஆகும் என்றார் நோர்வேயின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் விடர் ஹெல்கிசன்.

1985 இல் பூட்டான் தலைநகர் திம்புவில் மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து விடுதலைப் புலிகள் அரசிடம் கூடாக ஆலோசனைகளை முன்வைத்ததற்குப் பின்னர் இப்போதே முதல் தடவையாக அவர்கள் தமது ஆலோசனைகளைச் சமர்ப்பிக்க முன்வந்திருக்கிறார்கள். அதுவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் மேலும் சொன்னார்.



அடுத்த மாத நடுப்பகுதியில் விடுதலைப் புலிகள் தமது ஆலோசனைகளை எங்களூடாக அரசிடம் சமர்ப்பிக்க விருக்கிறார்கள். அது நடந்ததும் அரசும், விடுதலைப் புலிகளும், நோர்வேயும் அநேகமாக ஐரோப்பிய நாடு ஒன்றில்கூடிப் பேசி இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

அரசும் புலிகளும் தூர விலகித்தான் நிற்பார்கள். ஆயினும், அந்தத் தூரம் பேச்சுக் (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் நிலாவெளியில் கைதான இரு பொலீஸாரும் நேற்று விடுவிப்பு

திருகோணமலை, நிலாவெளிப் பகுதியில் வைத்து கடந்த புதன் இரவு கைதுசெய்யப்பட்ட இரு பொலீஸாரையும் விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை விடுவித்தனர்.

காலை 10.30 மணியளவில் கும்புறுப்பிட்டி பகுதியில் வைத்து இரு பொலீஸாரும் விடுவிக்கப்பட்டனர் என்று திருகோணமலை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உடாலி ஹேவகே தெரிவித்தார். கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள், பொலீஸ் அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையிலேயே அவர்கள விடுவிக்கப்பட்டனர்.

குச்சவெளி பொலீஸ் நிலையத்தில கடமையாற்றும் இரு பொலீஸாரும் கடந்த புதன்கிழமை வீதிக் கடமையின் பின்னர் பொலீஸ் நிலையம் திரும்பிக்கொண்டிருக்கையிலேயே புலிகளால் கைதுசெய்யப்பட்டனர்.

புலிகளின் திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக்குக்கும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹேவகேக்கும் இடையே திருகோணமலை கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பேச்சுக்களை அடுத்தே, இரு பொலீஸாரும் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் நிபந்தனை எதுவுமின்றி விடுவிக்கப்பட்டனர் என்று பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

### தமது இடைக்கால நிர்வாக ஆலோசனைகள் நிராகரிக்கப்பட்டால்

# கொழும்பைத் தாக்க புலிகள் தயார்; பொ.ஐ.முன்னணி அபாய அறிவிப்பு!

## 1,500 போராளிகள் ஆயத்த நிலையிலாம்

கொழும்பு,செப்ரெம்பர்20

**தமது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகள் அரசினால் நிராகரிக்கப்பட்டால் கொழும்பைத் தாக்க விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அபாய அறிவிப்பு விடுக்கிறது. இதற்கென கொழும்பில் ஆயிரத்து 500 புலிப் போராளிகள் நிலை கொண்டுள்ளனராம். திருகோணமலை, மட்டக்களப்பு உட்படப் பல கேந்திர இடங்களிலும் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்துவார்களாம்.**

பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளரான கலாநிதி சரத் அமுனுகம, மற்றொரு சிரேஷ்ட தலைவரான மங்கள சமரவீர ஆகிய இருவருமே இந்த அபாய அறிவிப்பை நேற்று விடுத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவல (16ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமர் இன்று அமெ.பயணம்

கொழும்பு,செப்.20

நியூயோர்க்கில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. சபையின் 58 ஆவது சம்மேளனக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

23 ஆம் திகதிய ஆரம்ப விழாவில கலந்துகொள்ளும் பிரதமர், 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஐ.நா. சம்மேளனப் பொதுச்சபைக் கூட்டத்திலும் உரை நிகழ்த்தவுள்ளார். (ஓ-12)

### வவுனியாவில் சடலம் மீட்பு!

வவுனியா,செப்.20

உடல் எரியுண்ட நிலையில் வவுனியா அரசமுறிப்புக்குளம் கிராமத்தில் இனம் தெரியாத ஆணின் சடலம் ஒன்று நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உடல் எரியுண்ட நிலையிலும், கழுத்து வெட்டப்பட்ட நிலையிலும் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலம் 35 வயது மதிக்கத்தக்க ஓர் ஆணினுடையது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளாம்பழம் பொறுக்கச் சென்ற ஒருவராலேயே இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டு பொலீஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. (ஓ-12)



தன்னைச் சந்திக்க வந்த கனேடியத் தூதர் வலேரி றேமன்டை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்கிறார்.



கனேடிய தரப்பினரும், புலிகள் குழுவினரும் பேச்சு நடத்துகிறார்கள்.

### உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை:

## நாடாளுமன்றக் கூட்டங்களை பகிஷ்கரிப்பாராம் மகேஸ்வரன்

கொழும்பு, செப்.20

யாழ்மாவட்ட மக்களுக்குப் பெரும் இடையூறாக இருக்கும் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் நாடாளுமன்றச் செயற்பாடுகளைப் பகிஷ்கரிக்கப்போவதாக இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

இது விடயத்தில் எனது அமைச்சுப் பதவியை ராஜினாமாச் செய்யவும் தயாராக இருக்கிறேன் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

செய்திநிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தீவிர எதிர்ப்பின் மத்தியில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினை குறித்து ஆராயும் கூட்டத்தை (நேற்றுமுன்தினம்) கூட்டியிருந்தேன். எனினும், அதன்மூலம் எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

குருநகர், கொழும்புத்துறை, பாஷையூர், மணியந்தோட்டம், அரியாலை முத (16ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவை பெற்றவருக்கு நிவாரணம் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,செப்.20

குடாநாட்டில் மீளக் குடியமர்ந்தவர்களில் மீள் குடியமர்வுக் கொடுப்பனவைப் பெற்ற குடும்பங்களுக்கான உலர உணவு நிவாரணத்தை கொடுப்பனவு பெற்றுக்கொண்ட ஒரு வருட காலத்தின் பின் நிறுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் மீளக் குடியமர்ந்த 45 ஆயிரம் குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா வீதமும் -

அதற்கு முந்திய காலத்தில் மீளக் குடியமர்ந்த 60 ஆயிரம் குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா வீதமும் -

மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த மீள் குடியமர்வுக் கொடுப் (16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுக்கு விரைவில் திரும்புங்கள்!

### கனடா தூதர் வேண்டுகோள்

கிளிநொச்சி,செப்.20

ஸ்ரீலங்கா அரசுடன் விரைவில் நேரடிப்பேச்சுக்கு திரும்புமாறு இலங்கைக்கான கனடா தூதர் வலரி றேமன் விடுதலைப் புலிகளிடம் கோரியிருக்கின்றார்.

கனடா தூதர் வலரி றேமன் நேற்று முற்பகல் கிளிநொச்சியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப்பேசினார்.

முற்பகல் 11.45 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு நண்பகல் 1.15 மணிவரை நீடித்தது.

தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து இச்சந்திப்பின் போது கனடா தூதர் வலியுறுத்தினார் (16ஆம் பக்கம் பார்க்க)



Lend a Hand

இன்று போலியோ சொட்டு மருந்து - மறந்துவிடாதீர்கள்!

இம்முறை பத்து வயதுக்குட்பட்ட உங்கள் பிள்ளைகள் அனைவருக்கும்...

அருகே உள்ள நிலையத்துக்கு விரையுங்கள்!

PolioPlus

Rotary International



திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகிய யாழ். மாவட்ட விவசாய கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்கள் நடத்தும் விவசாயக் கண்காட்சியின் சில காட்சிகள். (படங்கள்:அலுவலக செய்தியாளர்)

# ஜப்பானின் விசேட தூதர் மீது ஈ.பி.டி.பியினர் பாய்ச்சல்!

கொழும்பு,செப்.20

இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி ஜனநாயக ரீதியில் செயற்படும் தமிழ்கட்சிகள் தொடர்பாக எதிர் மாறான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறார்.

- இவ்வாறு கண்டனம் தெரிவித்திருக்கிறது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி).

ஜப்பானிய விசேட தூதரின் விஜயம் தொடர்பாக அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போர்நிறுத்த உடன்படிக்கையானது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் சாதாரண மக்களின், குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதில் வலுவற்றதாக உள்ளது. இது அரசியல் பன்மைத்துவம் மற்றும் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளுக்கு இடமளிப்பதாக இல்லை. போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்தானது முதல் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதற்காகவும், ஜனநாயக மற்றும் அரசியல் பன்மைத்துவம் என்பவற்றை நிலைநாட்டுவதற்காவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் வெகு சிரமங்களுக்கு மத்தியில் முன்னின்று தலைமைதாங்கி வருகின்றோம். இந்த இலக்கை நிறைவேற்றுவதற்காகவே இங்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசி வருகிறோம்.

இந்த வகையில் உங்களைச் சந்தித்த சந்தர்ப்பங்களில் எல்லாம் எமது நிலைப்பாட்டைத் தங்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். இதற்காகவே கடந்த செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியைச் சந்தித்து பேசுவதற்காக நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். கடந்த செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி புலிகளின் இரண்டாம் மட்டத்தினரை சந்திப்பதற்காக கிளிநொச்சி வரை விசேட தூதுவர் யசூசி அகாசி சென்றார். அதைத் தொடர்ந்து கல்முனை மற்றும் அம்பாறை பகுதிகளுக்கும் விஜயம் செய்தார். அங்கு இடம்பெற்ற சந்திப்புகளின போதும் ஈ.பி.டி.பி. மற்றும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) பிரதிநிதிகள் திட்டமிட்டவகையில் தவிர்க்கப்பட்டுள்ளனர். இக்கட்சிகள் புலிகளின் பயங்கரவாதப் போக்குகளுக்கு எதிராக துணிவுடன் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதியன்று நாம் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எழுதிய கடிதத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் சாதாரண மக்களின் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்று கேட்டிருந்தோம். எனினும், விசேட தூதுவர் யசூசி அகாஷியின் விஜயம் புலிகளைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே திட்டமிடப்பட்டதாக எமக்குத் தோன்றுகிறது. கொழும்பில் எமது கட்சித் தலைவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்டதோடு கிழக்கில் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்பும் திட்டமிட்டு தவிர்க்கப்பட்டுள்ளது.

இதனால் மனித உரிமைகள், ஜனநாயகம், அரசியல் பன்மைத்துவம் என்பன பற்றி ஜப்பான் போன்ற நாடுகள் பேசுவது வெறும் வாய்ச்சொற்கள் தானா என்ற சந்தேகம் எம்மவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிறுவர் அரங்கு பற்றிய இரு நாள் கருத்தரங்கு

## செயற்றிறன் அரங்க இயக்க ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்ப்பாணத்தில் சிறுவர் அரங்கு வளர்ச்சிக்கு உதவும் வகையில் செயற்றிறன் அரங்க இயக்கம் இந்த மாத இறுதியளவில் குடாநாட்டில் சிறுவர் அரங்க கருத்தரங்கு ஒன்றை இருநாள்களுக்கு நடத்தவுள்ளது.

'விளையும் பயிருக்கு முளையில் உதவுவோம்' என்ற மையப்பொருளின் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் நல்லூரிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

சிறுவர் அரங்க செயற்பாடுகளை குடாநாட்டில் விருத்தி செய்வதும் அரங்கூடாக சிறுவர்களின் கல்வியை எப்படி முன்னெடுத்துச்செல்வது என்பது தொடர்பாகவும் இந்தக்கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

# பிரதேச செயலர் தமதுபிரிவிலேயே குடியிருப்பது அவசியமென வலியுறுத்து

பிரதேச செயலர்கள் தமது பொறுப்பில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுக்குள்ளேயே குடியிருக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்.அரச அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஒரு பிரதேச செயலகப் பிரிவில் பிரதேச செயலருக்கென அரச குடிமனை கட்டப்பட்டிருப்பின் அக்குடிமனையிலேயே அவர் நிரந்தரமாகக் குடியிருக்க வேண்டும். அவ்வாறு குடியிருப்பவர்களுக்கு அவர்களுடைய வேதனத்திலிருந்து வாடகை அறவிடப்படும்.

அரச குடிமனை இல்லாத பிரதேச செயலக பிரிவுகளில் பிரதேச செயலர்கள் குடியிருக்க தனியார் வீடுகளை வாடகைக்கு பெறுவதற்கு மாதத்தில் 2 ஆயிரம் ரூபாவை வீட்டு வாடகைப்படியாக அரசு வழங்குகின்றது. எனினும் வீட்டு வாடகைப் படியைப் பெறும் சிலர் அக்குறிப்பிட்ட பிரதேச செயலக எல்லைக்குள் வருவதில்லை எனக் கூறப்படுகின்றது. ஆதலால், இதனை உடனடியாக தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-76)

## வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச்சென்ற

# 37 இலங்கையர்களின் பிரேதங்கள் ஜூலை மாதத்தில் அனுப்பப்பட்டன!

மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில்களுக்குச் சென்று அங்கு இறந்த 37 இலங்கையரின் பிரேதங்கள் கடந்த ஜூலை மாதத்தில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது.

இந்த 37 பேரில் 22 பேர் பெண்களாவர். அவர்கள் அனைவரும் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாகளுக்குச் சென்றவர்களாவர்.

இறந்த இந்த 37 பேரில் 16 பேர் சவூதி அரேபியாவுக்குச் சென்றவர்கள்; 9 பேர் லெபனான் நாட்டில் தொழில் செய்தவர்கள்.

ஹொங்ஹொங்கில் கொலை செய்யப்பட்ட ஒரு பணிப்பெண்ணின் சடலமும், தற்கொலை செய்துகொண்ட மூன்று பணிப்பெண்களின் சடலமும் திள் விபத்துக்களில் இறந்த 8 பேரின் சடலமும் இவற்றில் அடங்கும் என்று பணியகத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

# குடிவரவுச் சட்ட விதிகளை கனடா அரசு தளர்த்தியது!

## தேர்ச்சிபெற்ற தொழிலாளரை வரவழைக்க நடவடிக்கை

ஒட்டாவா,செப்.20

கனடாவுக்கு வருவோருக்கான குடிவரவுச்சட்ட விதிகளை கனடா சமஷ்டி அரசு தளர்த்தியிருக்கிறது. இதனையடுத்து, கனடாவில் குடியேற விண்ணப்பித்திருக்கும் ஆயிரக்கணக்கானோரின் நீண்டகாலக் கஷ்டங்கள் முடிவுக்கு வரவிருக்கின்றன.

கனடாவுக்குள் நுழைய ஒருசில தடைகளை மட்டுமே விதிக்கும் பழைய சட்டங்களின் கீழ் விண்ணப்பிக்க சுமார் ஒரு லட்சம் குடிவரவு விண்ணப்பதாரிகள் அனுமதிக்கப்படுவர் என்று கனடாவின் குடிவரவு அமைச்சர் டெனிஸ் கொட்றி நேற்றுத் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு வசந்தகாலத்தில் கனடாவில் கடுமையான குடிவரவு சட்ட விதிகள் நடைமுறைக்கு வந்தன. இப்புதிய சட்டங்கள் நடைமுறைக்கு வரமுன்னர் சுமார் ஒரு லட்சம் பேர் விண்ணப்பித்திருந்தனர். புதிய சட்டம வருமுன் அவர்கள் விண்ணப்பித்திருந்தாலும் புதிய சட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படவேண்டியவர்களாக இருந்தனர்.

மொழியறிவு, தொழில் தேர்ச்சி ஆகியவற்றை அளவிடும்போது விண்ணப்பதாரிகள் 67 புள்ளிகளையே இனி பெறவேண்டும். முன்னர் இது 75 புள்ளிகளாக இருந்தது.

கனடாவுக்கு தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை கூடுதலாகக் கவர்ந்து இழுப்பதற்கு இம்மாற்றம் உதவும் என்று கனடா அமைச்சர் மேலும் கூறியிருக்கின்றார்.

## மதகுரு முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.20

நீதிமன்றப் பிணையில் விடப்பட்ட இளைஞன் தன்னை முறைத்துப் பார்த்ததாக சென்.ஆன்ஸ் தேவாலய வண. பிதா இமானுவேல் நேற்றுமுன்தினம் யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

டி.ஈ.ஏ. ஜெயக்குமார் என்ற இளைஞரே வேறு இருவருடன் வந்து தன்னை முறைத்துப் பார்த்ததாக மதகுரு தனது முறைப்பாட்டில் தெரிவிததுள்ளார்.

தனது சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசியைத் திருடியதாக மதகுரு இமானுவேல் ஏற்கனவே செய்திருந்த முறைப்பாடு தொடர்பாக இந்த இளைஞன்மீது யாழ்.நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமார் ஒருசில தினங்களுக்கு முன்னரே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (ம-ரி)

# யாழ். நகரம், தென்மராட்சியில் சொட்டு மருந்து வழங்கும் இடங்கள்

வடக்கு - கிழக்கில் 10 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கும் பணிகள் இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென மாவட்டத்தில் உள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 150 இற்கும் மேற்பட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

'யுனிசெவ்'வின் போலியோ தடுப்புப்பிரிவு சுகாதார அமைச்சு மற்றும் றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தப் பணி இடம்பெறுகின்றது.

பெற்றோர்கள், 10 வயதுக்குட்பட்ட தமது பிள்ளைகள் அனைவருக்கும் இன்று சொட்டு மருந்தை ஏற்றிக்கொள்வதுடன் அடுத்த மாதம் 18 ஆம் திகதியும் சொட்டு மருந்தைப் பெற்றுக்கொளளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபைப் பகுதியில் 22 நிலையங்களும் தென்மராட்சிப் பிரதேசத்தில் 20 நிலையங்களும் இதற்கென அமைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய பிரதேசங்களிலும் பல நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபைப் பகுதியில் சொட்டு மருந்து வழங்கும் இடங்கள் வருமாறு:

கொழும்புத்துறை - சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம், ஈச்சமோட்டை சனசமூக நிலையம், திருநகர் சனசமூக நிலையம், குருநகர் சிகிச்சை நிலையம், ஆவே மரியான் பாலர் பாடசாலை, யூபிலி மகப்பேற்று நிலையம்.

ஆயுர்வேதக் கல்லூரி, நாவலர் வீதி சிகிச்சை நிலையம், கொட்டடி பாலர் பாடசாலை, நாவாந்துறை றோ.க. பாலர் பாடசாலை, அரியாலை மகப்பேற்று நிலையம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் -

ஞானக்குழந்தை பாலர் பாடசாலை (சிவப்பிரகாசம் வீதி), அங்கர் பார்மஸி முன்பாக, கந்தர்மடம் சிகிச்சை நிலையம், செட்டித்தெரு சனசமூக நிலையம், நல்லூர் சிகிச்சை நிலையம், மூத்த விநாயகர் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், ஞானக்குழந்தை பாலர் பாடசாலை (இராமநாதன் வீதி), நீராவியடி நாவலர் பரிபாலனசபை,

தென்மராட்சியில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் இடங்கள் வருமாறு:-

உசன் ஆரம்ப சுகாதார நிலையம், தவசிக்குளம் பாலர் பாடசாலை, கொடிகாமம் மத்திய மருந்தகம், கொடிகாமம் பிரதேச சபை, கச்சாய் அம்மன் கோயில், மீசாலை வடக்கு கமநல சேவை நிலையம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை -

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, வரணி மத்தி மகப்பேற்று மத்திய மருந்தகம், வரணி வடக்கு மகப்பேற்று மத்திய மருந்தகம், கணபதிப்பிள்ளை வித்தியாலயம், மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையம், பிரதேச சபை உப அலுவலகம் சரசாலை மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை சனசமூக நிலையம் -

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையம், கணேசா வித்தியாலயம், கைதடி அம்பிகா மாதர் சங்கம், கைதடி மத்திய மருந்தகம், பிரதேச சபை உப அலுவலகம் (நாவற்குழி) முகமாலை சோதனைச்சாவடி.

இதேவேளை, வடமராட்சிப் பிரதேசத்தில் 51 நிலையங்களில் 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இவ்வாண்டுக்கான முதலாம் கட்ட போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

பதிவுசெய்த, பதிவுசெய்யாத இடம்பெயர்ந்த பிள்ளைகள் அனைவருக்கும் ஏதாவது, ஒரு நிலையத்தில் வைத்து காலை 7 மணி முதல் போலியோ சொட்டு மருந்து பெற்றுக்கொள்ளலாம் என பருத்தித்துறை பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை தெரிவித்தார். (ஒ-10-30-31-173ரி)



.....எமது எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக எமக்கொரு நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப் போல்தான் நாளைய எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும்; வருத்தப்படும்....

தியாகி திலீபன்.

## ஈராக் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் சரணடைந்தார்




பக்தாத்,செப்.20

ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாம் ஹூசைனின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சுல்தான் ஹாசிம் அஹமட் தமிடம் சரணடைந்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா வெளியிட்ட ஈராக்கில் தேடப்படுவோர் பட்டியலில் 27 ஆவது இடத்தில் இவர் இருந்தார்.

## தியாகியாக சாகவிரும்பாத பலஸ்தீனன் இருக்க முடியுமா?

# “என் துப்பாக்கி மூலம் என்னை நான் காப்பாற்றிக் கொள்வேன்”

### பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் சூளுரை



இஸ்ரேல்,செப்.20

“இஸ்ரேல் என்னைக் கொல்லவோ அல்லது கடத்தவோ முயன்றால் என் துப்பாக்கி மூலம் என்னைக் காப்பாற்றிக்கொள்வேன்” என்று அரபாத் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

என்னைக் காப்பாற்றிக்கொள்ள எனனிடம் இயந்திரத் துப்பாக்கி உள்ளது. அதைப் பயன்படுத்தித் தற்காத்துக்கொள்வேன்.

நான் ஒரு பலஸ்தீன வீரன். என்னைக் காப்பாற்றிக்கொள்ளமட்டும் அல்ல ஒவ்வொரு பலஸ்தீனக் குழந்தையையும் பெண்ணையும் ஆணையும் காப்பாற்றுவேன்; என் உயிர் உள்ள வரை நான் போராடுவேன்.

நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்வதை நான் விரும்புகிறேன். தியாகியாகச் சாகவிரும்பாத பலஸ்தீனன் இருக்கமுடியுமா?

பலஸ்தீனத்துக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை அமெரிக்கா பயன்படுத்துவது இதுவே முதல் தடவையும் அல்ல கடைசியும் அல்ல.

என்னைக் கொல்ல நினைப்பதற்காக இஸ்ரேல் வெட்கித் தலைகுனிய வேண்டும். 1993ஆம் ஆண்டு இஸ்ரேல் பிரதமராக இருந்த ரொபினுடன் சேர்ந்து அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டவன் நான்.

என்னைத் தவிர வேறுயாருக்கு அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட தைரியம் இருந்தது. கையெழுத்திட்டு பதது ஆண்டுகள் ஆனபோதிலும் நான் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கிறேன். இது என் தாய் மண். இதைவிட்டு நான் எங்கேயும் போக சம்திக்கமாட்டேன். இங்கு தான் பிறந்தேன்; வளர்ந்தேன் - என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

மேற்படி கருத்தையடுத்து இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோனுக்கும் அரபாத்துக்கும் இடையே பலப்பரீட்சை ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேலிய அமைச்சரவை தன்னை நாடுகடத்த தீர்மானித்திருப்பது குறித்தும், அரபு நாடுகளின் பிரேரணையை அமெரிக்கா வீட்டோ செய்தது குறித்தும் 'ரொய்ட்டர்' நிருபருக்கு பேட்டி வழங்கும் போதே அரபாத் இவ்வாறு கூறியுள்ளார்.

# ஐ. நா. படைகளைத் தாக்க தலிபான்கள் சதித்திட்டம்

### அமெரிக்கா அச்சம் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானில் ஐ.நா.படைகள் மீதும், அமெரிக்கா தலைமையிலான படைகள் மீதும் தாக்குதல் நடத்த தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர் என்று அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது.




இரு மாகாணங்களில் இத்தாக்குதல்களுக்கு அவர்கள் தயாராகி வருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

தெற்கு கந்தகார், ஸ்கன் மாகாணங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவரும் படைகள் தெரிவித்த தகவலின் அடிப்படையில் காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இதுகுறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா. பணியாளர்கள், அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள், வெளிநாட்டு தனியார் தொண்டு நிறுவனங்கள், ஆப்கானிஸ்தான் அரசு அலுவலகங்கள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று அது கூறியுள்ளது.

காபூலுக்கு வெளியேயும் அமெரிக்கக் கூட்டணிப் படைகள் வலுப்படுத்தப்படவேண்டும் என்று தனியார் தொண்டு நிறுவனங்கள் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளன.

ஓராண்டுக்கும் மேலாக நிவாரணப் பணியாளர்கள் மீது இரண்டு நாள்களுககு ஒருமுறை தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் தலிபான்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே நடந்த மோதலில் மூன்று தலிபான்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். காயமடைந்த இரண்டு தலிபான் படைத்தளபதிகள் கைதுசெய்யப்பட்டனர். (ம)

# ஆப்கான் வெடிச் சம்பவத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர்

காபூல்,செப்.20

ஆப்கானிஸ்தானின் பக்ராம் நகரிலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்துக்கு அருகே நேற்று இடம்பெற்ற பெரும் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 8பேர் உயிரிழந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பு ஒரு விபத்தாக இருக்கலாம் என அயலவர்களும் சம்பவத்தை நேரில் கண்டவர்களும் தெரிவிக்கின்றனர்.

பக்ராம் விமானப் படைத்தளத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருந்த வெடிமருந்துகளை விற்பனை செய்யும் ஒருவரின் வீட்டின் முன்பாகவே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

குண்டுவெடிப்பால் சிதைந்து போன அந்தக் கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் இருந்து 6சடலங்களை அப்பகுதி குடியிருப்பாளர்கள் மீட்டுள்ளனர். ஆனால், எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர் என்று உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கவில்லை.

அந்த வீட்டில் இருந்த வெடிமருந்து வியாபாரி, அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் என அயலவர்கள் தெரிவித்தனர். (ம)

# ஆங்சான் சூகிக்கு சத்திர சிகிச்சை



சூகியின் ஆதரவாளர்கள்

ரங்கூன்,செப்.20

காவலில் வைக்கப்பட்டிருக்கும் மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகிக்கு கடந்த புதன்கிழமை அறுவை சிகிச்சை நடைபெற்றது. அவர் தற்போது ஆரோக்கியமாக உள்ளார்.

ரங்கூன் நகரில் ஆசியாராயல் கார்டியாக் மருத்துவ மையத்தில் இந்த அறுவை சிகிச்சை நடந்தது. அது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை. அறுவைசிகிச்சை வெற்றி கரமாக நடந்தது என்று மட்டும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதயத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே சத்திரசிகிச்சை நடைபெற்றதாக கூறப்படுகிறது.

# அமெரிக்காவை சூறாவளி தாக்கியது! லட்சக்கணக்கானோர் இடம்பெயர்வு!

### தூண்களை இறுகப்பிடித்தபடி மக்கள் பிரார்த்தனை

வாஷிங்ரன்,செப்.20

அமெரிக்காவின் கிழக்குக் கரையோரப் பகுதிகளை சூறாவளி தாக்கி வருகிறது. சூறாவளியால் கார்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன; வீடுகளின் கூரைகள் தூக்கியெறியப்பட்டுள்ளன; மரங்கள் சாய்ந்துள்ளன; மின்சாரம் முழுமையாகத் தடைப்பட்டுள்ளது.

லட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். சூறாவளி தூக்கிச்செல்லாமல் இருக்க அவர்கள் தூண்களை இறுகப் பிடித்தபடி பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

அட்லாண்டிக் கடற்பகுதியில் கடந்த நான்கு நாள்களுக்கு முன்பு இந்தச் சூறாவளி உருவானது.

இது அமெரிக்காவின் வடக்கு கரோலினா, மேரிலேண்ட் மற்றும் வேர்ஜினியா ஆகிய கடலோரப் பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

160 கிலோமீற்றர் வேகத்தில் சூறாவளி வீசியது பலத்த மழையுடன் தொடர்ந்து சூறாவளி வீசிக்கொண்டிருக்கிறது.


சூறாவளியால், பொதுமக்கள் வீதிகளில் நடமாட முடியவில்லை. வீதிகளில் சென்றவர்கள் சுவர்களையும் தூண்களையும் இறுக்கமாகக் கட்டிப் பிடித்தபடி நகர்ந்து வந்ததால் உயிர் தப்பினார்கள். ஏராளமான வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன.

சூறாவளிக் காற்றால் விமானங்களும் சேதமடையும் சூழ்நிலை ஏற்பட்டதால் கடந்த இரண்டு நாள்களில் 700 மேற்பட்ட விமானங்கள் தமது சேவையை ரத்துச் செய்திருந்தன. விமான நிலையத்தில் இருந்த விமானங்கள் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுவரப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த மாகாணங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் 10 லட்சம் பேர் கடந்த இரண்டு நாள்களாக மின்சாரம் இன்றி இருளில் மூழ்கிக்கிடக்கிறார்கள்.

கடலோரப் பகுதிகளில் உள்ள 55 ஆயிரம் பேர் ஏற்கனவே வீடுகளை காலிசெய்துவிட்டு வேறு ஊர்களுக்கு சென்று விட்டனர். புயலால் பாதிக்கப்பட்டு இருக்கும் மாகாணங்களில் நெருக்கடி நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு கரோலினாப் பகுதியில் உள்ள வைத்தியசாலையில் உள்ள நோயாளிகள் அனைவரும் வேறு ஊர்களுக்கு கொண்டுசெல்லப்பட்டுவிட்டனர்.



அமெரிக்காவின் கிழக்குக் கரையோரப்பகுதியில் வீசி வரும் கடும் புயலால் தூக்கி வீசப்பட்ட வாகனம் ஒன்று.

# கெரில்லாக்களின் கண்ணியில் சிக்கி அமெரிக்க வாகனம் சுக்குநூறாகியது!

### எட்டுப் படையினர் பலி; பலர் காயம்!!

ஈராக்கில் கெரில்லாக்கள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி அமெரிக்க இராணுவ வாகனம் ஒன்று சுக்கு நூறாகியது. இதில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

தலைநகர் பக்தாத்தின் புறநகர் பகுதியான கால்டியா என்ற இடத்தில் இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

படையினரை ஏற்றிச்சென்ற இந்த வாகனம் கண்ணிவெடியில் சிக்கியதும் அதில் காயமுற்ற படையினரை காப்பாற்ற முயன்ற ஏனைய படையினர் மீதும் கெரில்லாக்கள் மோசமான தாக்குதல்களை நடத்தினர்.

இச்சம்பவத்தையடுத்து தலைநகர் பக்தாத்திலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் முகாமிட்டுள்ள படையினர் ஆவேசங்கொண்டவர்கள் போல் செயற்படுகின்றனர் என்று அங்குள்ள சி.என்.என். இணையத்தள நிருபர் கூறியுள்ளார்.

மற்றொரு சம்பவத்தில் திருமணத்தை முன்னிட்டு வெடிக்கப்பட்ட பட்டாசு சத்தத்தை கேட்ட படையினர் அதனைத் தாக்குதல் என்று கருதி அப்பகுதியில் சரமாரியாக சுட்டதில் பதின்னான்கு வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான்.

பலூஜா நகரில் நடந்த இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தை கேள்வியுற்று அப்பகுதிக்கு விரைந்து வந்த மேலதிகப் படையினரை நோக்கி கையெறி குண்டுகளை வீசியும், மோட்டார் தாக்குதல்களை நடத்திவிட்டும் கெரில்லாக்கள் தப்பியோடினர்.

இந்தச் சம்பவத்தில் குறைந்தது எட்டுப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கான வாகனம் முற்றாக எரிந்து நாசமானது. தாக்குதல் நடைபெற்ற பகுதி சதாமின் ஆதரவாளர்கள் அதிகமுள்ள பகுதி என்று கூறப்படுகிறது.



சேதமடைந்த வாகனத்தைப் பார்வையிடும் அமெரிக்கச் சிப்பாய்

# எங்களுடைய தாயக மண்ணும் வடக்குத்தான்; சொந்த இடத்தில் வாழவே நாமும் விரும்புகிறோம்

## ரிசாத் பதியுதீன் எம்.பி. கூறுகிறார்

புத்தளம், செப்.20

"எமது தாயகமும் வடக்குத்தான். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை எமது தாயக மண்ணுக்குச் சென்று வாழ்வதையே நாம் விரும்புகின்றோம். எனினும், எமக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு அனைத்து உரிமைகளும் கிடைக்கப்பெற்று பூரண பாதுகாப்பு வழங்கப்படும்போது இதுபற்றி முடிவுசெய்ய வேண்டி வரும்!"

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மீள்குடியேற்ற செயலணித் தலைவருமான ரிசாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

புத்தளம் நகரிலுள்ள மன்னார் மாவட்ட இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத் திட்டமான தம்பன்னி கிராமத்தில் அமைக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தை சமீபத்தில் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு ஆசிரியர் நவ்பர் தலைமை தாங்கினார். சிறப்பு அதிதிகளாக முசலி தொகுதி இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் மௌலவி பைருஸ், நாடாளுமன்ற உறுப்பினின செயலாளர்களான முஹம்மது இப்றாகிம், அப்துல்பாரி, மன்னார் மாவட்ட முன்னாள் உறுப்பினர் என்.எம்.ஐயூப், பத்திரிகையாளர் நிஹ்மத் ஆகியோருடன் பெருந்திரளான இடம்பெயர்ந்த மக்களும் கலந்துகொண்டனர்.

சுமார் 25 யுவதிகள் முதற்கட்ட பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

ரிசாத் பதியுதின் எம்.பி. இங்கு மேலும் கூறியதாவது:-

"என்னதான் சோதனைகள் ஏற்பட்டாலும் இடம்பெயர்ந்தவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியை எக்காரணம் கொண்டும் நிறுத்திவிடக்கூடாது. சுமார் 12 வருடங்களுக்கு முன்பு நாம் அனைத்து பொருள்களையும் சொத்துக்களையும் இழந்து இங்கு வந்து சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் எதைத்தான் இழந்தாலும் கல்விச் செல்வத்தை இழந்துவிடவில்லை. அதன் மூலம் எமது வளமான வருங்காலத்தை மேம்படுத்த முயலவேண்டும்.

என்னதான் சோதனைகள் ஏற்பட்டாலும் நாம் மாணவர்களுக்கு கல்வியைத் தொடர்ந்து வழங்க உதவ வேண்டும். தற்சமயம் திறந்துவைக்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சி நிலையத்தின் மூலம் வேலையற்ற யுவதிகள் பயிற்சியை பெற்றுக்கொள்ளலாம் - என்றார்.

# சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட கிணறு, பொது மலகூடங்கள் பற்றிய விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,செப்.20

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த தனியாரின் காணிகளில் உள்ள கிணறுகள், பொது மலகூடங்கள் ஆகியன பற்றிய விவரங்கள் நகர சபை உத்தியோகத்தர்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த பொதுக் கிணறுகள், பொது மலகூடங்கள் மற்றும் தனியாரின கிணறுகள், மலகூடங்கள் ஆகியவற்றின் விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ்.செயலகம் சாவகச்சேரி நகரசபை செயலாளரைக் கேட்டிருந்ததை அடுத்து மேற்படி விவரம் சேகரிக்கும் பணியில நகர சபை உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சபையின் 11 வட்டாரங்களிலும் உத்தியோகத்தர்கள் நேரில் சென்று விவரங்களை படிவங்கள் மூலம் சேகரித்து வருகின்றனர்.

சபையின் எல்லைக்குட்பட்ட நான்கு முதல் 11 வரையிலான வட்டாரங்களில் முழுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.20

தென்மராட்சி தெங்கு பயிர்ச் செய்கையாளர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10மணிக்கு கொடிகாமம் அரசினர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (எ-8)

## பல் வைத்தியர் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் மற்றும் பல் வைத்தியர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த வினைத்திறமை காண் தடைப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்களத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# அரிசி, அரிசிமா பாவனையை அதிகரிக்க அரசாங்கம் திட்டம்

## முப்படையினருக்கு அரிசிமா பாண்

கொழும்பு,செப்.20

உள்ளூர் அரிசி மற்றும் அரிசி மா பாவனையை அதிகரிக்க அரசாங்கம் திட்டம்வகுத்துள்ளது. மேற்படி திட்டத்தின்படி முப்படையினருக்கும் கோதுமை மாவுடன் அரிசி மாவையும் கலந்து பாண் முதலான உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் திட்டத்தை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு அமுல்படுத்தவுள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சும் முப்படைகள் மற்றும் பொலீஸ் திணைக்களமும் இணைந்து இத்திட்டத்தை அமுல்படுத்தவுள்ளன.

இதன்படி, இதன் ஆரம்பக் கட்டமாக இன்று 19 ஆம் திகதி காலை முப்படை மற்றும் பொலீஸ் திணைக்களங்களும் சம்பந்தப்பட்ட பிரிவின் முக்கியஸ்தர்களுக்கு தொழில்நுட்ப நிறுவனத்தில் கோதுமை மாவையும் அரிசி மாவையும் கலந்து பேக்கரி உற்பத்திகளைத் தயாரிக்கும் செயலமர்வு நடைபெறும்.

நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களில் ஒரு லட்சம் ஹெக்ரெயர் நிலத்தில் நெல் பயிர் செய்யப்பட்டுள்ளது. முறையான காலநிலை நிலவியதால் உள்ளூர் அரிசிப் பாவனைக்குத் தேவையான இருபது லட்சம் மெற்றிக் தொன்னுக்கு மேலதிகமாக இரண்டு லட்சம் மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த அரிசியை உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளுக்கு விற்பனை செய்ய பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. தேசிய அரிசிப் பாவனையை அதிகரிக்கும் முகமாக அரசாங்கம் முன்வைத்துள்ள வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக அரிசிமாவை பல்வேறு உணவுப் பண்டங்களில் அதிகமாகப் பயன்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மேலதிக அரிசியைப் பாவனைக்கு எடுக்கும் வகையில் ஏழு முறைகளை அமுல்படுத்தியுள்ளது. இதன்படி, பாண் உட்பட ஏனைய பேக்கரி உற்பத்திகளுக்காக அரிசிமாவைக் கலக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, கோதுமை மாவில் 10 சதவீதம் அரிசிமாவைக் கலந்து பாண் மற்றும் பேக்கரி உற்பத்திகளை முறையாகத் தயாரிக்க முடியுமெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# பொருள்களின் விலைவாசிகள் ஏறிவிட்டதால் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குக!

## அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கம் பிரதமரிடம் வேண்டுகோள்

காரைதீவு,செப்.20

விலைவாசி ஏற்றத்தாலும் போக்குவரத்து செலவீனங்களாலும் அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ள அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் உடனடியாக சம்பள உயர்வை வழங்க வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜரொன்றை அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன், செயலாளர் எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு இம் மகஜரை அனுப்பிவைத்துள்ளனர்.

இத்தீர்மானம் கடந்த ஞாயிறன்று கல்முனை உவெஸ்லிக் கல்லூரியில் நடைபெற்ற இச்சங்கத்தின் அதிஉயர்பீட நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

மத்திய அரசிலிருந்து மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்டு பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஊழியர்களை மீண்டும் மத்திய அரசின் கீழ் கொண்டு வந்துள்ளனர். இதனால், அந்த ஊழியர்களுக்குப் பதவியுயர்வை வழங்குவதில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் அநீதியான போக்கே இதற்குக் காரணம். இவர்களது பதவியுயர்வுகள் முற்திகதியிடப்பட்டு வழங்கப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின்கீழ் கடமையாற்றும் அலுவலகப் பணியாளர் சேவையைச் சார்ந்த ஊழியர்களுக்கு 2002, 2003 ஆம் ஆண்டுக்கான பதவி உயர்வுகள் வகுப்பு II, I வழங்கப்படாமல் இருப்பதனால் நேர்முகப் பரீட்சை நடத்தி பதவியுயர்வுகள் வழங்கக் கோருதல்.

மேற்படி தீமானங்கள் பிரதமருக்கும், பொதுநிர்வாக அமைச்சருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் மகஜர் வடிவில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், அன்றைய அதியுயர் பீட நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் சில தெரிவுகளும் இடம்பெற்றன.

சங்கத்தின் புதிய செயலாளராக எஸ். ரவிச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் உப தலைவராக ஐ. எம்.இப்றாலெவ்வை, இணைச் செயலாளராக எஸ்.கோகுலராஜன் அதி உயர் பீட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக ரி.விக்கிரமசிங்கன், எம். எம்.வஹாப் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## பேராதனைப் பல்கலை ஜி.ஏ.கியூ. பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.20

பேராதனைப் பல்கலைக்கழக கலை முதற்தேர்வு வெளிவாரிப் பரீட்சைகள் இன்று 20ஆம் திகதி ஆரமபமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 15ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இந்த பரீட்சை, பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தினால் பிற்போடப்பட்டிருந்தது.

இப்பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் முன்னைய அனுமதி அட்டையைப் பயன்படுத்தியே பரீட்சைக்குத் தோற்றுமாறும் வெளிவாரி பரீட்சைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பரீட்சை யாழ்.பல்கலைக் கழகத்திலும் நடைபெறும்.

(எ-8)

## கிராமிய வங்கி சமாசத் தலைவர் தெரிவு

அரியாலை,செப்.20

யாழ். மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் புதிய தலைவராக சி.குமாரவேலு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமைக் காரியாலய பரிசோதகர் எஸ்.கணேசு தலைமையில் இடம்பெற்ற சமாசக் கூட்டத்திலேயே இத்தெரிவு இடம்பெற்றது.

புதிய தலைவரான குமாரவேல் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஆவார்.(ஐ-17)

# அலங்கார மீன் வளர்ப்பு: அழகுக்காக மட்டுமல்ல ஆரோக்கியத்துக்கும்தான்!

பொழுது போக்கிற்காகவும் அழகிற்காகவும் வீடுகளில் வளர்க்கப்படும் அலங்கார மீன்களால் மன அழுத்தத்தைப் போக்கி நமது ஆரோக்கியத்தைப் பேணமுடியும் என்று யாராவது இதுவரை நினைத்துப் பார்த்திருப்பார்களா?

சிலர் பொழுதுபோக்கிற்காக மீன் வளர்ப்பில் ஈடுபடுகின்றார்கள். அலங்கார மீன்களை இனப் பெருக்கம் செய்வோர் வியாபாரத்திற்காக அதில ஈடுபடுகிறார்கள். ஆனால், மீன் வளர்ப்பின்மூலம் நோயாளிகளை வதைக்கும் நோய்களை விரட்டியடிக்கலாம் என்று எவரும் இதுவரை அறிந்திருக்கவில்லை. பல வண்ணங்களிலும் அளவுகளிலும் உள்ள இந்த அலங்கார மீன்களின் அழகில் மயங்காதோர் யார்தான் உள்ளனர்?

இன்று மருத்துவ உலகில் பல புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன. பல நோய்களைக் குணமாக்குவதில் புதுமையான பல வழிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. உங்கள் வீட்டில் உள்ள மீன் தொட்டியின் முன்னால் இருந்து அதனுள் அழகாக நீந்திக் கொண்டிருக்கும் வண்ண மீன்களின் அழகை ரசியுங்கள். உங்கள் இதய நோய் குணமாகிவிடும் என்று இதய நோயாளிகளுக்கு வைத்திய நிபுணர்கள் இன்று ஆலோசனை வழங்குகிறார்கள்.

விஞ்ஞான ரீதியில் இது நிரூபிக்கப்படாவிட்டாலும் இதில் உண்மை இல்லாமல் இல்லை என்று வைத்திய நிபுணர்களும் சூழலியலாளர்களும் கூறுகின்றார்கள். 'கடல்வளங்களுக்கான சர்வதேச ஸ்தாபனம்' எனும் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கருத்துக் கூறுகையில்:-

"மீன் தொட்டியில் நீந்திக் கொண்டிருக்கும் மீன்களைப் பார்த்ததன் மூலம், சில மனநோயாளிகளும் இதய நோயாளிகளும் குறிப்பிடத்தக்க அளவு பயன் அடைந்திருக்கிறார்கள்'' என்று கூறினார். இத்தனியார் நிறுவனம் இலங்கையில் அதிகளவு கடல் வாழ் உயிரினங்களைச் சேகரித்து வைத்துள்ள பெரிய நிறுவனமாகக் கருதப்படுகின்றது. உலகில் பல வகையான அலங்கார மீன்கள் காணப்படுகின்றன. 'தங்கமீன்' (Gold Fish), 'கப்பீஸ்', பிளாற்றீஸ், 'குறாமீஸ்' எனச் சிறிய வகையானவையும் 'ஒஸ்காஸ்' கடலில் வாழும் அலங்காரமீன்கள் எனப் பெரிய வகையானவையும் உள்ளன. எத்தனை வகை மீன்கள் இருந்தாலும் அலங்கார மீன்களின் இராஜ்ஜியத்தில் தங்க மீனுக்கு (Gold Fish) என்றும் தனியிடம் உள்ளது. தங்க மீன்களில் பல வகை உள்ளதாலும் கண்ணைப் பறிக்கும் நிறங்களில் அவை இருப்பதாலும் தமது மீன்தொட்டிகளில் இவற்றை வளர்க்க எல்லோருமே ஆசைப்படுகிறார்கள். மீன்தொட்டியில் உள்ள மீன்களின் அசைவைப் பார்த்துக்கொண்டிருந்ததினால் தனது மனதை அமைதியடையச் செய்ய முடிந்தது என்று கூறும் நாளக்கா பெரேரா என்பவர் தனது தகப்பனார் இதயநோயால் பாதிக்கப்பட்டிருந்தபோது, வீட்டில் மீன்களை வளர்க்கும்படி ஓர் இதய மருத்துவ நிபுணர் தனக்கு அறிவுரை வழங்கியதாகக் கூறுகிறார். அவரது அறிவுரையின்படி பலவகையான தங்க மீன்களைத் தனது வீட்டில் வளர்த்ததாக அவர் மேலும் கூறினார். தொட்டியில் அழகாக அசைந்து கொண்டிருக்கும் மீன்களைப் பார்ப்பதால் மன அழுத்தம் நீங்குவதாகவும் கடுமையான இருதயக் கோளாறுகள் குறைவதாகவும் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு வகையான மீனும் வெவ்வேறு வகையான முறையில் தண்ணீரில் நீந்தும் தன்மையைக் கொண்டிருக்கும். சில மீன்கள் நீளமான வாலைக் கொண்டிருக்கும். இன்னும் சில மீன்களோ மெல்லிய உடலமைப்பைக் கொண்டிருக்கும். அவற்றின் வடிவத்திற் கேற்ப அவற்றின் அசைவுகளும் வேறுபடும். மீன்களின் வகையைப் பொறுத்துச் சில மீன்கள் வேகமாக நீந்தும். சில மெதுவாக நீந்தும் இயல்புடையன. மீன்களில் எத்தனை வகையிருப்பினும், அவற்றைப் பார்த்து இரசிப்பவர்களுக்கு அவை மகிழ்ச்சியையும் அமைதியையும் ஏன் ஆரோக்கியத்தையும் கூடக் கொடுக்கின்றன என்றால் அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

★



உதயன்

## பிரதமரின் ஒப்புதல்!

பொல்லைக்கொடுத்து அடிவாங்கும் நிலைபற்றிக் குறிப்பிடுவார்கள் அல்லவா? பாதுகாப்பு விடயங்களில் அப்படியான ஒரு நிலைதான் இங்கே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே ஏற்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளால் திருகோணமலை கடற்படைத்தளத்துக்கும் திருகோணமலைத் துறைமுகத்துக்கும் ஆபத்து. நாடு முழுவதற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. ரணில் அரசாங்கம் எல்லாவற்றையும் சும்மா பார்த்துக்கொண்டிருக்கிறது. இப்படி குற்றஞ்சாட்டி பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம் எழுதியிருந்தார்.

தம்மீது குற்றம் சுமத்திய ஜனாதிபதியையே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் வகையில் அவருக்குப் பிரதமர் இப்போது பதில் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

உங்களுடைய ஆட்சியில் நீங்கள் நிதிக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருந்தபோதுதான் நடக்கக்கூடாத பல காரியங்கள் நடந்தன என்று பிரதமர் தனது பதில் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஏ-9 பாதையினூடான 'ஜயசிக்குறு' நடவடிக்கை தோற்கடிக்கப்பட்டு, படையினர் விரட்டியடிக்கப்பட்டதுடன், வன்னி முழுவதையும் நாம் இழந்தோம். மாங்குளம், கிளிநொச்சி, பூநகரி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களையும் இழந்தோம். திருகோணமலை துறைமுகத்தின் முன்னே உள்ள சம்பூர் பகுதியில் இருந்து படைகளைத் தாங்கள் 1995இல் மீளப்பெற்றீர்கள். இக்காலகட்டத்தில்தான் விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்களை திருகோணமலைப் பிரதேசத்தினுள் கொண்டுவந்திருந்தனர்.

வடபகுதியில் எமக்கிருந்த வலுக்கோட்டையான ஆனையிறவை தாங்கள் பறிகொடுத்தீர்கள். 20 வருடகால யுத்தத்தில் இழக்கப்படாதிருந்த பகுதி இது. தாங்கள் ஆட்சிக் காலத்தின் இறுதியில், யாழ்ப்பாணத்திலிருந்த எமது படைகளை அங்கிருந்து அகற்றித் தருமாறு தாங்கள் இந்தியாவைக் கேட்டீர்கள். இறுதியில், கட்டுநாயக்கா விமான நிலையத்தினுள் ஆயுதபாணிகளின், ஊடுருவலுக்கும் நீங்கள் இடமளித்தீர்கள். சந்தேகத்துக்கிடமற்ற மேலாண்மையைக் கொண்டிருந்த எமது விமானங்களில் அரைவாசி அப்போது அழிந்தன.

இன்று அப்படியான ஆபத்தோ, அச்சுறுத்தலோ ஏதும் இல்லை. படையினர் போதிய வசதிகளுடன் எந்த நேரத்திலும் முன்னேறக்கூடிய விதத்தில் தயார்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். உளவுப் பிரிவும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

நான் திருகோணமலை நிலைமை பற்றிப் படைத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறேன். தேவை எழுமாயின் அவசரகால அடிப்படையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் நான் நன்றாக ஆலோசித்து வைத்திருக்கிறேன். இவற்றுடன் நாட்டின் முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும் அவற்றிற்குத் தேவையான வளங்கள் பற்றியும் நான் ஆராய்ந்துள்ளேன்.

நாம் யுத்த சூழ்நிலைக்கு வெளியே வந்துவிட்டோம். ஒரு சமாதான காலகட்டத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். 19மாத காலமாக மக்கள் தமது வாழ்வின் அடிப்படைகளைத் தேடிக்கண்டு, அன்றாட விவகாரங்களை அச்சமின்றிக் கவனித்து வருகிறார்கள். இதனைப் பல பொருளாதார நடவடிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

சமாதானம் எவற்றைப் பெற்றுத்தந்துள்ளது என்பதை நாட்டை சுற்றிப்பார்க்கும் எவரும் காண்பர். 2001இற்கு முனனிருந்த உங்கள் அரசின் காலத்துடன் ஒப்பிடும்போது இன்றைய காலகட்டம் இமயம் போன்ற வித்தியாசத்தைக் காட்டுகிறது என்று பிரதமர் தனது பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ள மற்றொரு முக்கிய விடயத்தையும் ஊன்றிக் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக இராணுவம், கடற்படை, வான்படை ஆகியவற்றுக்குத் தனித்தனியான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை எமது சொந்த வளங்கள், நிபுணத்துவங்கள் ஆகியவற்றுடன் எமக்கு ஆதரவு தரும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியுடன் நாம் சாதித்து வருகிறோம்.

தேவை ஏற்படும்போது, விரைந்தும் பயனுள்ள வகையிலும் உதவி தரக்கூடிய நட்புநாடுகளுடன் நாம் தொடர்ந்தும் உறவுகளைப் பலப்படுத்தி வருகிறோம். அண்மையில் கடல் ரோந்து நடவடிக்கைக்கென ஒரு கப்பல் அன்பளிப்பாகக் கிடைத்ததை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அமெரிக்க பசுபிக் கட்டளைப்பீடத்தின் அணி (PACOM) யினர் வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதியை தாங்கள் மேற்கோள்காட்டியிருக்கிறீர்கள். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை 2002 ஜூலையில் நான் நேரில் சந்தித்தபோதே இதற்கான வேண்டுகோளை விடுத்திருந்தேன்.

பசுபிக் கட்டளைப்பீடத்தின் அறிக்கை பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலையும் அதனை முறியடிக்கக்கூடிய சாத்தியமான நடவடிக்கைகளையும் கண்டறிந்து தெரிவித்தது. அதன் சிபார்சுகள் அவதானத்துடன் பரிசீலிக்கப்பட்டன. அவை குறித்து அமெரிக்க அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இப்பொழுது பின்பற்றப்பட்டு வருகிறது.

உண்மையில் நான் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்கு வெகு முன்னரே பிரதமர் பதவியேற்றதும் - இந்தியா சென்று பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்திருந்தேன். இந்தச் சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு விடயத்தில் எடுக்கப்படவேண்டிய சில நடவடிக்கைகளை நாம் தொடக்கிவைத்தோம். இம்முன்முயற்சிகள் எமது பாதுகாப்பு நிலைமையை வலுப்படுத்தியுள்ளன. இப்படிப் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

சமாதான முயற்சிகள் தொடரவேண்டும், அவை நல்ல பலனைத் தரவேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இலங்கை அரசு மற்றும் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் உண்மைச் சொரூபம் என்னவென்பதைத் தெளிவுபடுத்த இந்த 'ஒப்புதல்' வாக்குமூலம் போதுமல்லவா?

# சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் 320 தொழில் நிலையங்கள் இயங்குகின்றன

### நடவடிக்கைக்கு உள்ளூராட்சி மன்றங்கள் தயாராகின்றன

யாழ்ப்பாணம்,செப்.20

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இன்றி யாழ். குடாநாட்டில் 320 இற்கும் மேற்பட்ட சிறியளவிலான தொழில் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இது குறித்து சுற்றுச் சூழலியலாளர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உரிமம் பெறாது தொழில் நிலையங்களை நடத்துவது சட்டவிரோதமானது என மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆலோசகர் ஜே.ஜி.கீர்த்திரெட்ணா அறிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தீவிர நடவடிக்கை எடுக்க யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் தயாராகிவருகின்றன.

தொழில் நிலையங்களையும் நிறுவனங்களையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமம் பெறப்படுவது மிக அவசியமானது. தொழிலின் தன்மைக்கேற்பவும் அதனால் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும் கவனத்தில் எடுத்தே தொழில் நிலையங்களுக்கான அமைவிடம் தீர்மானிக்கப்படும்.

ஆனால், கடந்த போர்க்காலச் சூழலில் யாழ்.குடாநாட்டில் இந்த நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. இந்த நிலை தற்போதும் தொடர்கிறது.

அடுத்தமாதம் முதலாம் திகதியில் இருந்து இந்த விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

இதற்கென ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் 3 அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறவிரும்பும் உற்பத்தியாலை உரிமையாளர்கள் உள்ளூராட்சி சபை திட்டமிடற் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.(ம-185)

## போலியோ சொட்டுமருந்து வழங்கும் பணியை 'யுனிசெவ்' கண்காணிக்கும்

யாழ்ப்பாணம்,செப்.20

குடாநாட்டில் இன்று மேற்கொள்ளப்படவுள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வை 'யுனிசெவ்' அமைப்பு தீவிரமாகக் கண்காணிக்க உள்ளது. இதற்காக இரு குழுக்கள் செயற்படவுள்ளன.

இந்த ஆண்டு 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

இந்தப் பணி சரிவர நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும் சொட்டு மருந்தினைப் பெறுபவர்களின் எண்ணிக்கையையும் 'யுனிசெவ்' குழுக்கள் கண்காணிக்க இருக்கின்றன.

வழங்கப்படும் சொட்டு மருந்து குறிப்பிட்ட குளிர்த்தன்மையைக் கொண்டதாக இருக்கவேண்டும். அதன் குளிர்பதனநிலை குறைவடைந்தால் மருந்தின் செயற்றிறன் அற்றுப்போகும். எனவே குறிப்பிட்ட குளிர் நிலையில் வைத்து மருந்தினை வழங்குகின்றார்களா? என்பதை 'யுனிசெவ்' குழுக்கள் ஒவ்வொரு நிலையத்துக்கும் சென்று உறுதிப்படுத்தும். - என்று யுனிசெவ் அமைப்பின் யாழ். மாவட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ம-6)

## வலி. தென்மேற்கில் உற்பத்தியாகும் கீரை வகைகளில் நச்சுத்தன்மை

### அளவுக்கு மீறிய கிருமிநாசினிப் பாவனையால்

யாழ்ப்பாணம்,செப்.20

வலி.தென்மேற்கில் உற்பத்தி செய்யப்படும் கீரை வகைகளினால் உயிராபத்து ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுற்றுச் சூழல் தொடர்பான கூட்டத்தில் இந்த விடயம் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

நவாலி, அட்டகிரி, கட்டுடை, சங்குவேலி, மானிப்பாய் மற்றும் வேறு சில இடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொன்னாங்காணி, வல்லாரை, பசளி, கீரை போன்ற கீரை வகைகளுக்கு அளவுக்கதிகமான கிருமிநாசினிகள் தெளிக்கப்படுவதனால் அவற்றில் நச்சுத்தன்மை அதிகரித்து வருவதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால், இந்தக் கீரை வகைகளைப் பயன்படுத்துவோர் உயிராபத்தை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மாலையில் மஞ்சள் நிறமாக இருக்கும் பொன்னாங்காணி பயிருக்கு கிருமிநாசினி தெளித்ததும், அது காலையில் பச்சை நிறமாகவும் உயிரோட்டத்துடனும் காணப்படுகின்றது. கிருமிநாசினி விசிறப்பட்டு 24 மணி நேரத்தில் அவை அறுவடை செய்யப்பட்டு சந்தைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என்று கூட்டத்தில் கூறப்பட்டது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

(ம-185)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவரிடையில் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.20

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி நிலையம் சிறுவர்களிடையே ஆடல், பாடல், உடற்பயிற்சி, இசையும் அசைவும் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் அனைத்து முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் கலந்துகொள்ள முடியும் எனவும், ஒரு கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்து முன்பள்ளிகளும் ஒரே மாதிரியான நிகழ்வுகளை ஒழுங்கு செய்யவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு முன்பாக நடைபெறவுள்ளதால், பங்குபற்றும் முன்பள்ளிகள் தமது விண்ணப்பங்களை விரைவாக அனுப்பிவைக்கவேண்டுமென தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கேட்டுள்ளது.

(எ-8)

**நாளை**

புரட்டாதி 04

ஞாயிற்றுக்கிழமை

(21.09.2003)

திதி : தசமி

பிற்பகல் 1.02 வரை

நட்சத்திரம்: புனர்பூசம்

முற்பகல் 11.29 வரை

சுபநேரம்: 9.02 - 10.32

ராகுகாலம்: 4.32 - 6.02

(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நள்ளிரவுக்கு மேல் விழித்திருக்கும் ஒவ்வொரு மணித்தியாலமும் சவப்பெட்டியை மூடுகின்ற ஆணியாகும்.

### கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில்

## சீர்குலைந்த மின் இணைப்பு வழமைக்குத் திரும்பவில்லை

### மறியலில் ஈடுபட பொதுமக்கள் முஸ்தீபு

கொழும்புத்துறை,செப்.20

கொழும்புத்துறை கிழக்கு மற்றும் ஆனந்தன்வடலி வீதிப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒருவருடத்துக்கு மேலாகியும் இப்பகுதிகளுக்கான சீர்குலைந்த மின் இணைப்புகள் இதுவரை சீர்செய்யப்பட்டு மின்சாரம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

மேற்படி மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாததை அடுத்து, கொழும்புத்துறை கிழக்கு, கொழும்புத்துறை மத்தி மக்களும் சென்.றொசாறியன் சனசமூக நிலையம் உட்பட பொது அமைப்புகள் இணைந்து மறியல் போராட்டத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நகரப் பகுதியில் உள்ள மின்சார சபை அலுவலகங்களுக்கு முன்பாக இந்த மறியல் போராட்டங்களை நடத்தவும்-

மகஜர்களைக் கையளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாததால் இந்தப் பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளதாகவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மின்சாரமின்மை தடையாக உள்ளதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

மின்சாரம் இன்மையைப் பயன்படுத்தித் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டிவருவதாகவும் - பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. (எ-30)

## மோட்டார் சைக்கிளில் வந்து மூதாட்டியின் சங்கிலி அபகரிப்பு

### நல்லூர்ப் பகுதியில் வியாழனன்று சம்பவம்

கொழும்புத்துறை, செப்.20

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் முன்பாக - பருத்தித்துறை வீதியில் வைத்து மூதாட்டி ஒருவரின் மூன்றரைப் பவுண் எடையுள்ள சங்கிலி, மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தத் துணிகரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியால் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப மூதாட்டியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மறித்து கதை கொடுத்தனர் என்றும், அவ்வேளை அவர்களில் ஒருவர் மூதாட்டியின் சங்கிலியை அறுக்க, மோட்டார் சைக்கிள் அவ்விடத்தில் இருந்து மிக வேகமாக ஓடி மறைந்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

அண்மைக்காலமாக நல்லூர்ப் பகுதியில் இவ்வாறான மோட்டார் சைக்கிள் திருட்டுக் கும்பல்களின் கைவரிசை அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(எ-30)

### வேலையில்லாப் பிரச்சினை குறித்து

## உடற்கல்வி பட்டதாரிகள் அரச அதிபரைச் சந்திப்பர்

### புதனன்று செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.20

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கு உடன் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ் மாவட்ட உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத்தினர் யாழ். அரச அதிபரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி சந்திப்பு யாழ். செயலகத்தில் நடைபெறும் என உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் பி.தர்மகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 350 இற்கும் மேற்பட்ட உடற்கல்விப் போதனா ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ள போதிலும் இதுவரை வெற்றிடங்களை நிரப்புவதற்கான எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை என்றும் -

இதனால், கடந்த மூன்று கல்வியாண்டுகளில் யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவில் பட்டம்பெற்று வெளியேறிய 135 உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை. இதுதொடர்பாக வீண் காலதாமதம் காட்டப்பட்டு வருகிறது.

எனவே இது விடயமாக துரித நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார். (எ-185)

# சின்னஞ்சிறு விளம்பரம்


### பூக்கன்று விற்பனைக்கு

பாரிஜாதம், மஞ்சள் றெசினா, குறோட்டன், பாம்ஸ், முசந்தாஸ் (வெள்ளை, சிவப்பு), மஞ்சள் கொடிப்பூ, மினி எக்ஸ்சோறா (சிவப்பு, வெள்ளை), சைப்பிரஸ் நமது காலநிலைக்கு உகந்த றோசாக் கன்றுகளும் மற்றும பல புதிய இன பூக்கன்றுகளும் விற பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (ICRCஇற்கு அண் மையில்) T.P.6563 (22769)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (22779)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 150/=. சுத்தம் செய்யப்பட்டது 1Kg 225/= மொத்த மாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு. தொடர்பு- 1)மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2) பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய்.(22437)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள், Tetra SL பேடு, சேவல் குஞ்சுகள் 29.09.2003 பிற்பகல் விநி யோகிக்கப்படும் (முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறை கிளை யிலும் பதிவு செய்யலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முரு கேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தை யடி, நல்லூர்) (22778)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதனை அண்டிய பகுதி யில் வீடு வாடகைக்குத் தேவை. சகல வசதிகளுடனும் இருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு. விளம்பர இல. 2040, C/o உதயன், யாழ்ப் பாணம். (22660)

### வீடு விற்பனைக்கு

ஏழாலை தெற்கு, சூராவத்தை, பிரதான வீதியில் 4 பரப்புக் காணி யில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 111928, 021 222 5206 (22764)

K.K.S. றோட், உப்புமடப் பிள்ளை யார் கோவிலுக்கு அருகில் ஸ்ரேசன றோட், கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் வீடு, 5 பரப்புக காணியுடன் விற்பனைக்குண்டு. (தர கர்கள் தேவையில்லை) தொடர்பு: 071 234 7564. (22766)

### வகுப்புகள்

O/L கணிதம், ஆங்கிலத்தில் A,B,C, பெறுபேறடையவும் ஆண்டு 8முதல் 10 வரையும், ஆங்கிலம் A/L, GAQ பல்கலைக்கழகப் பரீட்சை களுக்கும் கற்பிக்கப்படும். தொடர்பு: 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.(22747)

### திருமண சேவை

1965, சதயம், செவ்வாய் 7இல், உயர் பதவி வகிக்கும் கனடா மண மகனுக்கு 30 வயதுக்குட்பட்ட B.Scக்கு மேல் படித்த மணமகள் வேண்டும். உள்ளூர், வெளியூர் மணமக்கள் தேர் வுக்கு தொடர்பு கொள்ளவும். துரை விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப பாணம். (22703)

### மணமகள் தேவை

பரணி, பாவம் 13, 33 வயதான B.Sc ஆசிரியருக்கு பொருத்தமான அரச உத்தியோக மணமகள தேவை. வீட்டுடன் சீதனம் எதிர்பார்க்கப்படும். ஜாதகம்புகைப்படத்துடனும் தொடர்பு: வி.ள.இல.2046, மே/பா உதயன்.(22748)

**COMPUTER TYPING**

தட்டெழுத்து, சுருக்கெழுத்து. ஆங்கிலம், MS Office, Page maker, Coreldraw, Photo shop.

**STCA கல்வியகம்**

149 (37), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(வைத்தீஸ்வரா கல்லூரிக்கு அண்மையில்)

கிளை நிறுவனங்கள் இல்லை.

(19-21-13-10) (22774)


# மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கில் 34அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்பு

மன்னார்,செப்.20

'மனித உரிமைகளும் அவை தொடர்பான சட்டங்களும்' எனும் கருப பொருளில் மன்னார் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையை மாவட்ட தகவல் அதிகாரி (CHA) பீற்றர் சிங்க ளேயர் தலைமையில் அண்மையில் நடத்தியுள்ளது.

இந்நிகழ்வு மன்னார் பொது நிலை யினர் பணியகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அரச,அரச சார்பற்ற, மதஸ்தாபனங்கள் உட்பட 34அமைப புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இன்றைய சமாதானச் சூழலில் இவ்வாறான பயிற்சிப் பட்டறைகள் பொதுமக்களுக்கும் அவர்களைச் சார்ந்த சமூக நல அமைப்புக்களுக் கும மனித உரிமையை நோக்கி நேர் வழியைக் காட்டுகின்ற யாவ ருக்கும் பயனுள்ள ஒன்றாக உணரப படுகிறது.

மேற்படி ஒன்றியமானது மன்னா ரில் மட்டுமல்லாது கொழும்பு மாவட் டம் உள்ளடங்கலாக 8 மாவட்டங் களிலும் இயங்கிவருவதும் குறிப் பிடத்தக்கது. இவ்வமைப்பின் பணி யானது மனித உரிமை மீறல்களை மக்களிடையே ஆய்வுகள் மூலம் மேற்கொண்டு அவர்களது பிரச்சினை களை எந்த மட்டங்களோடு பேசி நிவர்த்தி செய்ய முடியுமோ அவற்றை சட்டங்களின் அடிப்படையில் அணுகி வருகிறது.

நிகழ்வில் சட்டத்தரணிகள், மன்னா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக குழு அதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சட்டத்தரணி என்.ரவீந்திரன் அனைத்துலக மனித உரிமைகள் பிர கடனம், அடிப்படை மனித உரிமை கள், மனித உரிமை மீறல் நடவடிக் கைகள் என்பவற்றை மையமாகக் கொண்டு தமது உரையை நிகழ்த் தினார். அதில் அவர் இலவச சட்ட ஆலோசனை, வழக்குத் தாக்கல் செய் யும் முறை, உடல் உள பாதிப்பு ஏற படின் அதற்காக இலவச வைத்திய சிகிச்சை பெறும் முறை என்பவை பற்றி விரிவாக விளக்கிக் கூறினார்.

சட்டத்தரணி சுதர்சன் தனது உரை யில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர, மீள் வருவோர் தொடர்பான யூ.என். எச்.சீ.ஆரின் பணிகளை மையப்படுத்தி அவர்களுக்கான சலுகைகள் எவ்வாறு அமையவேண்டும் எனவும் பாதிப் பிற்கு உள்ளானவர்களின் வீடு, காணிப பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படும வழிவகைகள், பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள், அடையாள அட்டை என்பவற்றை மீளப்பெறுவதற கான சட்ட உதவிகள், சட்ட வலு வாக்கல் தொடர்பான விடயங்களை எடுத்துரைத்தார்.

மன்னார் மாவட்டத்தில் தற் போது நிலவிவரும் போதைவஸ்து புழக்கத்திற்கும் இந்தியப் படகு களின் அத்துமீறல் நுழைவிற்கும் தொடர்பிருக்கலாம் என்றும் இதனால நாள் ஒன்றிற்கு சராசரியாக 5 கிலோ கிராம் போதைப்பொருள்கள் மன்னா ஊடாக எடுத்துச் செல்லப்படுவதாக வும் கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. இது தொடர்பாகக் கருத்துக்கள் தெரிவித்த பலர் இவ் வாறான இந்தச் செயல்கள் ஆதார பூர்வமாக பிடிபட்டாலும் சட்டத்தை சார்ந்தவர்களது வாதத்திறமையா னது அவர்களை குற்றமற்றவர் களாக மாற்றுவதோடு மீண்டும் அவர்கள் அதையே தொடர்ந்தும் செய்வதற்கு மறைமுகமான அங்கீ காரம் வழங்குகிறது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஒருவர் உண் மையான குற்றவாளிகள் விடுவிக் கப்படுவதன் மூலமே சட்டத் தட் தரணிகள் பிரபல்யம் அடைகின்றனர் எனக் கருத்து தெரிவித்தார். (ம)

# கர்ப்பிணிகளைக் காக்க விரைந்த அம்புலன்ஸ் மோதி பெண் மரணம்!

## வெலிமடையில் சம்பவம்

பதுளை,செப்.20

ஆபத்தான நிலையில் இருந்த இரு கர்ப்பிணிகளை விசேட சிகிச்சைகளுக காக பதுளை அரசினர் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்ற அம்புலன்ஸ வாகனம் மோதி வயோதிபப் பெண் ஒருவர் கடந்த 17 ஆம் திகதி பலி யானார்.

வெலிமடையைச் சேர்ந்த 76 வயது டைய ஆமினா உம்மா என்பவரே மரணமானார்.

வெலிமடை மருத்துவமனையில் இருந்து கடுமையான நோயாளிகளான இரு கர்ப்பிணிகளுக்கு விசேட சிகிச்சை கள் அளிக்கும் பொருட்டு அம்புலன்ஸ வாகனம் மூலம் பதுளை அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச செல்லப பட்டனர். வெலிமடை நகர் ஊடாக அம்புலன்ஸ் வாகனம் வேகமாகச் சென்றபோதே மேற்படி வயோதிபப் பெண் மீது மோதியது. அப்பெண் வெலிமடை அரசினர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சொற்பவேளையில் மரணமானார்.

இது தொடர்பாக அம்புலன்ஸ் வாகன சாரதியை வெலிமடை பொலி ஸார் கைது செய்தனர். பிறிதொரு சாரதியினால் அம்புலன்ஸ் வாகனம் செலுத்தப்பட்டு கர்ப்பிணிகள் இரு வரும் பதுளை மருத்துவமனைக் குக் கொண்டு செல்லப்பட்டனர்.

### திலீபன் நினைவாக சிரமதானம்

தியாகி திலீபனின் 16ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி யாழ். பல நோ.கூ.சங்க ஊழியர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை சிரமதா னம் மேற்கொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் காலை சங்கத் தலைவர் சொலமன் சூ.சிறில் தலைமை யில் தலைமைப் பணிமனைப் பகுதி, வளாகம் மற்றும் வீதிகள் துப்புரவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (எ-30)




யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

**பரிசுத் தினம்**

**(60 ஆம் ஆண்டு)**

காலம்: இன்று (20-09-2003) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி

தலைமை: திருமதி சரஸ்வதி ஜெயராசா அவர்கள் (அதிபர்)

முதன்மை விருந்தினர்: திரு.கயிலாசபிள்ளை (அகில இலங்கை இந்துக் காங்கிரஸ் தலைவர்)

பரிசில் வழங்கல்: பிரதம விருந்தினர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(22773) (19-21-13-16)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம்மகிழ 27 - 12 - 1984

மனம்நெகிழ 10 - 10 - 2002

**திருமதி விநுஷா இராஜேஸ்வரன்**

திதி:- 20-09-2003

வாஞ்சைகள் தந்து நின்ற வண்ணமிகு பூவே
சோகமதில் எமை வீழ்த்தி சென்றதெங்கு கூறு
வானமதன் நிலவெனவே வாழ்விலொளி தந்தாய்
தேனமுதக் குரலாலே எம் செவி இனிக்கச் செய்தாய்
நிறைந்த முகம் இருக்க பார்விட்டுச்சென்றாயே
நெஞ்சினில் உனை நினைக்கும் நின்கணவனைப் பிரிந்தாயே
உடன்பிறப்பே சிரிப்பெல்லாம் உண்மைச் சிரிப்பல்ல
உறவுகளைப் பிரிந்ததனால் இனிமை எமக்கில்லை
எம்மோடு நீயில்லை இங்கு நாமழுகின்றோம்
நெஞ்சோடு துயர் சிதறல்லை நெருப்பினிலே வேகுகின்றோம்
எந்த நிலை வந்தாலும் உனைநாம் மறப்போமா?
உந்தன் ஆத்மா சாந்திபெற இறைவனையே நாம் தொழுவோம்.

பிரிவால் துயருறும்
கணவன் - இராஜேஸ்வரன்
மகள் - நிதுர்ஷனா
குடும்பத்தினர்

சல்லியவத்தை,
சமரபாகு,
வல்வெட்டித்துறை. (22777)


ttn

எழுத்துக் கவிஞர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

**ஊர் உலா**

தமிழ்த் தொலைக் காட்சி இணையத்திற்காக (ttn) 'டிஜிற்றல் மீடியா நெற்வேக்' நடாத்தும் 'ஊர் உலா' கவிதை நிகழ்ச்சியில் நீங்களே தோன்றி கவிக்கேற்ற காட்சிப் பின்னனியுடன் உங்கள் மன எண்ணங்களை வெளிப்படுத்துங்கள்.

**உங்கள் கவிதைகளை**

150 சொற்களுக்குட்பட்டதாக.....
இன்றைய சமாதான முன்னெடுப்புக்களை,
தாயக விடுதலை,எமது மொழி, கலைபண்பாட்டை
வெளிப்படுத்துபவையாகவும்,
உங்களூர்ச் சிறப்புப் பற்றியும்......
எழுதியனுப்புங்கள்.
உங்கள் பேச்சுவழக்கில்,காட்சிப்படுத்தலை
மையமாக வைத்து அமைந்திருத்தல் நன்று.
உங்கள் முகவரியுடன்

எமக்கு அனுப்பவேண்டிய முகவரி → 'ஊர் உலா'
'டிஜிற்றல் மீடியா நெற்வேக்'
23L, கோவில் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

முடிவுத் திகதி: 05.10.2003

தொலைபேசி இல. 021 222 3919

*பதில்:* அரசியல்தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு முன்னர் அப்படியான தனியான சபையைப் பற்றிச் சிந்திப்பது அரசியல் தீர்வை நோக்கிச் செல்வதில் குழப்பங்களை ஏற்படுத்தும் எனக் கருதுகிறேன்.

தமிழ் மக்களின் 50 ஆண்டு காலப் போராட்டத்துக்கும் இன்றும் அரசியல் தீர்வு எட்டப்படாத நிலையில் இரு சபைகளை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தவேண்டும் என்பது அடிப்படைக் கொள்கைகள் மீது குழப்பத்தை ஏற்படுத்தும்.

# புரிந்துணர்வு உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்யவேண்டும்!



**ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூர்த்தியடைகின்றன. புரிந்துணர்வு உடன் படிக்கையின் கீழ் இருதரப்புகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது.**

**இக்காலப் பகுதியில் நடந்தவைகள் என்ன, அவை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன பரிகாரத்தைத் தந்தன என்பன பற்றிய கருத்துக்களை தாங்கி வரும் செவ்விக்களம் இது.**

**பலரது செவ்விகள் இந்தப் பகுதியில் தொடராக வெளிவரவிருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பிரமுகரும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் செவ்வி இன்று இடம்பெறுகிறது.**

***கேள்வி:*** புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒன்றரை வருடங்கள் பூர்த்தியான நிலையில் குடாநாட்டு மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏதாவது ஏற்பட்டுள்ளதா?

*பதில்:* புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 18 மாதங்கள் கடந்து விட்டன. இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சம், மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்குவதுதான். ஆனால், அந்த மக்களின் இயல்பு வாழ்க்கை இன்னமும் சீராக்கப்படவில்லை.

இராணுவத்தால் விரட்டப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாமலும் தங்களது வீடு வாசல்களைப் பார்க்க முடியாமலும் தங்களுடைய தொழிலை மீள ஆரம்பிக்க முடியாமலும் உள்ளனர்.

இராணுவத்தால் தன்னிச்சையாக கிட்டத்தட்ட குடாநாட்டின் நிலப்பரப்பில் 30 சதவீதமான வளமான விவசாய நிலங்கள், வளம்மிக்க கடற்றொழில் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு வைத்திருப்பதே இதற்குக் காரணம். இதனால், அந்தப் பிரதேச மக்கள் தமது இயல்பு வாழ்க்கையைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

இந்தப் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக்குடியமர்த்த எடுத்த முயற்சிகள் வெற்றிகாணவில்லை. இதனால், மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டவில்லை.

இராணுவத்தின் தீவிரமான பேரினவாத உணர்வுகளுடன் மக்களின் மீளக்குடியமர்வுக்கு மறுப்புத் தெரிவிப்பதுடன், புதிய புதிய முகாம்களை அமைத்து ஒரு போருக்கு ஆயத்தம் செய்வதை நாம் காண்கின்றோம். இதனால், மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்படுவதையும் இராணுவக் கெடுபிடிகள் அதிகரிப்பதையும் பார்க்கும்போது இன்னமும் இயல்புவாழ்க்கை ஏற்படவில்லை என்றுதான் கூறமுடியும்.

சில தினங்களுக்கு முன் பாதுகாப்பு வலயங்களின் எல்லைப் பகுதிகளுக்கு சென்று பார்த்தேன். மீள்குடியமர்வுக்கு அனுமதி வழங்கிய சில பகுதிகளில் மக்கள் தமது வீடுகளைத் துப்புரவு செய்யச் சென்றபோது, படையினர் அவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர். விவசாயம் செய்து கொண்டிருந்த மக்களை விவசாயம் செய்யக்கூடாது என்று எச்சரித்துள்ளனர். இந்நிலை தொடரும் போது புரிநதுணர்வு உடன்படிக்கையின் கீழ் இயல்பு வாழ்க்கை திரும்பி விட்டதா எனபதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

## புரிந்துணர்வு உடன்படிக்கை

*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட கால எல்லைகளுக்குள் இயல்பு வாழ்க்கை ஏறபடாததனால் அந்த உடன்படிக்கை செயலிழந்ததாகக் கருதமுடியுமா?

*பதில்:* உடன்படிக்கையில் ஒவ்வொரு கால கட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்களில் இருந்து வெளியேறவேண்டும் என்று உடன்பாட்டில் கூறப்பட்டுள்ளபோதும் அது ஓரளவே நடந்துள்ளது. முழுமையாக அது நடக்கவில்லை. அப்படிப்பட்ட பெரும்பாலான இடங்களில் இருந்து இராணுவம் வெளியேறினாலும் புதிய புதிய முகாம்களை அமைததுள்ளனர்.

*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்களா?

*பதில்:* நிச்சயமாக மாற்றங்கள் செய்யவேண்டும். கடற்பிராந்தியத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதாக கண்காணிப்புக் குழுவினரே கூறியுள்ளனர். அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் கடல் தொடர்பாக உடன்பாடு ஏற்படவேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

ஏற்கனவே செய்யப்பட்ட உடன்படிக்கையில் மக்களை மீளக்குடியமர்த்தமுடியாத பாதுகாப்பு வலயம் என்று விவரிக்கப்பட்ட இடங்களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

இந்த உடன்படிக்கை மூலம் செய்யமுடியாத பல பிரச்சினைகள் உள்ளதால் உடன்படிக்கை மீளாய்வு செய்யவேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

## இடைக்கால சபை

*கேள்வி:* இடைக்கால நிர்வாக சபை அமைந்தால் மக்களின் இயல்பு வாழ்வுப் பிரச்சினைக்குத் தீர்வுகிட்டும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:* இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமையவேண்டும் என்ற அவசியத்தை நாம் பூரணமாக ஏற்றுக் கொள்கிறோம். விடுதலைப் புலிகளே அதன் பிரதான நிர்வாகிகளாக இருக்க வேண்டும் என்பதே எமது கருத்து. அதில் இரண்டாவது பேச்சுக்கே இடமில்லை.

அந்த நிர்வாக அமைப்புக்குள் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தையும் அங்கீகரிப்பது நியாயமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

ஓர் அரசியல் தீர்வை எட்டவேண்டியுள்ளது. அதுதான் அடிப்படையான அம்சம். நீண்டகால இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டுவதற்கு, அதாவது சிங்கள தேசத்துக்கும் தமிழ்த் தேசத்துக்கும் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய தன்னாட்சி அதிகாரம் மிக்க அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டியது அவசியம். அதற்கு அடிப்படையாக ஓர் அரசியல் தீர்வு எட்டியதற்குப் பின்னர் நிர்வாகம் அமையும் நிலையும் உண்டு.

ஆனால், அப்படியான அரசியல் தீர்வு எட்டுவதற்கு காலம் கடந்து கொண்டிருப்பதால், அதற்கு கால அவகாசம் தேவையாக இருப்பதால் சர்வதேச நாடுகள் தற்சமயம் வழங்கும நிதி உதவிகளை சரியாக வகையில் கையாள ஒரு கட்டமைப்புத் தேவை.

நிதி உதவிகளை கையாள்வது யார்? தொடர்ந்தும் பேரினவாத அரசு அதை நிர்வகிப்பதா? அல்லது போரினால் அரசியல் விடுதலைக்கு போராடிய, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கொள்ளப்பட்டிருக்கின்ற தமிழழ விடுதலைப் புலிகள் அதனை நிர்வகிப்பதா?

ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்குரிய இடைக்காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் புனரமைக்கவும் புனர்நிர்மாணம் செய்வதற்கும் இடைக்காலக் கட்டமைப்பு தேவையாக உள்ளது. அந்தக் கட்டமைப்பு தமிழ் மக்கள் கையில்தான் இருக்க வேண்டும். பேரினவாத அரசுகளின் கைகளில் அந்தக் கட்டமைப்பு இருக்கக் கூடாது. இது கடந்த கால வரலாறு தரும் படிப்பினையாகும்.

அரசியல் தீர்வு எட்டிய பின் முழுமையாக அந்தத் தீர்வை நிர்வகிக்க நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படும். அப்படியான நிர்வாகம் உடன் ஏற்பட வாய்ப்பு இல்லை.

இதில் மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்டவேண்டும். புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேறு ஒரு கட்டமைப்பும் இல்லாத நிலையில் அதிகார கட்டமைப்பு அவசியமாகின்றது. எதிர்கால அரசியல் தீர்வுக்கு அடிப்படையாக அது அமைய வேண்டும்.

**செவ்வி கண்டவர்**
**குகா**

***கேள்வி:*** இந்த இடைக்கால அமைப்பில் ஏனைய கட்சிகளுக்கும் இடம் அளிக்கவேண்டும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:* முஸ்லிம்கள் தனி இனக் கலாசாரத்தைக் கொண்டிருப்பதால் அந்தச் சபையில் அவர்களை அங்கீகரிப்பது நியாயமாக இருக்கும்.

கடந்த தேர்தலில் தெளிவான கருத்து ஒன்றை முன்வைத்தோம். 'இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தல் இறுதித்தீர்வு எட்டுவதற்கு வேறு கட்சிகளை அழைத்து, விடுதலைப் புலிகளை ஓரங்கட்டும் நிலைமையை அரசுகள் ஏற்படுத்துவதை இனி அனுமதிக்கக்கூடாது. விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் நடக்கவேண்டும். இதற்கு நாம் பக்கபலமாக இருப்போம்' என்று மக்களிடம் தெரிவித்து அதறகு ஆணை பெற்றுள்ளோம். எனவே எல்லோரும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும் என்று தேவையில்லை.

விடுதலைப் புலிகளே அந்தத் தீர்வை முன்வைக்கவேண்டும். அதற்கான பக்குவம் அவர்களுக்கு உண்டு. அவர்கள்தான் பேசவேண்டுமா? ஏனையவர்களும் பங்குபற்றவேண்டுமா? என்பது குறித்து ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் மட்டுமே பேச்சில் பங்குபற்றவேண்டும் என்று ஏற்கனவே மக்கள் ஆணை வழங்கிவிட்டனர்.

எனவே, அந்த நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகளே முடிவுகளை மேற்கொள்ளலாம். தேவை ஏற்பட்டால் எங்களுடன் கலந்துரையாடலாம்.

## முஸ்லிம்கள் நிலை

*கேள்வி:* வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களை உள்ளடக்கியதாக தனியான நிர்வாக சபை வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நோர்வே தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது குறித்து...?

முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை, நோக்கங்களை, தங்களைத் தாங்களே ஆழ்கிறார்கள் என்ற உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய அரசியல் கட்டமைப்பை வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தை மையமாகக் கொண்டுதான் பரிசீலிக்கப்படவேண்டும் என்றே கருதப்படுகின்றது. அவர்களின் பிரச்சினைகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது பரிசீலிக்கப்படவேண்டும். இந்த விடயத்தில் மாற்றுக் கருத்து ஏதும் இல்லை.

இன்றுள்ள நிலையில் பேச்சுக்கள் நடந்து, இடைக்கால நிர்வாக அமைப்பு ஏற்படவேண்டும் என்ற சூழல் உருவாகும் நேரத்தில், தங்களுக்கும் தனியான கட்டமைப்பு வேண்டும் என்று போராடுவது, அரசியல் தீர்வு முயற்சிகளைக் குழப்பும் சாத்தியம் உள்ளது. பேரினவாதச் சக்திகள் இதைப் பயன்படுத்தலாம். அரசியல் தீர்வு எட்டப்படும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸும் முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளும் அதில் பங்குபற்றி தமது இனத்தின் அரசியல் தீர்வு பற்றிப் பேசலாம்.

## புலிகள் - கூட்டணி முரண்பாடு

*கேள்வி:* விடுதலைப் புலிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் உருவாகியுள்ள முரண்பாடுகள் குறித்து......?


*பதில்:* இந்த விடயம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பிரச்சினை. கடந்த தேர்தலுக்குப் பின்னர் மககளிடம் பெற்ற ஆணையின்படி விடுதலைப் புலிகள்தான் பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டும் என்று தீர்மானித்து செயற்பட்டுவந்தோம்.

விடுதலைப் புலிகளுக்கும் எங்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்பட்டு நல்ல முறையில் அவர்களுடன் பேசிவந்தோம். கட்சியின் தலைவராக இருக்கும் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துவந்த கருத்துக்கள் மற்றும் அவரின் நடவடிக்கைகளால் புரிந்துணர்வில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

அவரது நடவடிக்கைகளும் அறிக்கைகளும் பேச்சுக்களும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் உருவாகிய புரிந்துணர்வை பாதித்துள்ளது என்பது உண்மைதான். கட்சி இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்காமல் முரண்பாட்டை நீக்க முடியாது.

தமிழ்த் தேசத்தில் அக்கறை உடையவராக இருப்போமானால் விடுதலைப் புலிகளுடன் உறவைப் பேணலாம். இன்றுள்ள சுமுக நிலையில்

(12ஆம் பக்கம் பார்க்க).



*கேள்வி:* அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்க படைத்தரப்பு மறுப்பது குறித்து தங்கள் கருத்து என்ன?

*பதில்:* விடுதலைப் போராட்ட வரலாற்றின் முக்கிய காலகட்டத்தில் இன்று நாம் நிற்கிறோம்.

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பது தந்தை செல்வா விட்டுச் சென்ற சொத்து. அந்தத் தாயகத்திலே தமிழ்பேசும் மக்களின் ஆட்சி அமையாதவிடத்து, அவர்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்படும் நேரத்தில், அவர்களை மீளக்குடியமர்த்தும் ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாத நேரத்தில், நூற்றுக்கு நூறு வீதம் சிங்களவர்களைக்கொண்ட அரசியல் இலக்கைக் கொண்ட - பேரினவாத எண்ணங்களைக் கொண்ட - இராணுவம் எமது மண்ணில் இருபபது ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்பதுதான் எமது திட்டவட்டமான கருதது.

ஆகவே, எமக்கு அரசியல் உரிமை கிடைப்பதற்கான போராட்டம் புதியவடிவம் பெற்று, பேச்சு இடம்பெறும் நேரத்தில் தமிழ் மக்களை மீளவும் தங்களது சொந்தப் பூமியிலே குடியேறவேண்டும் என்பதற்காக - எமது மண்ணில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும்.

தமிழ் மக்களின் பூமியில் தமிழரின் ஆட்சி ஏற்படும் வரையிலும் கூட, இராணுவம் எம்மை ஆக்கிரமித்து இருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்டால் தமிழ் மக்களின் பலமான தமிழரின் இராணுவம் இங்கு இருக்க வேண்டிய அவசியத்தை நாம் உணர்ந்திருக்கின்றோம். விடுதலைப் புலிகளின் போராட்டம் மூலம் அதை சர்வதேசம் அங்கீகரித்துள்ளது.

விடுதலைப் புலிகள் பேச்சு மேடையில் இருக்கின்ற போதிலும் சரி, எதிர்காலத்தில் தீர்வுகாணும் சந்தர்ப்பத்திலும் சரி ஜனநாயக ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் அவர்களை எந்த வகையிலும் பலவீனப்படுத்த எந்தவொரு கட்சியோ தமிழ் மகனோ நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பது எனது திட்டவட்டமான கருத்து.

மேற்குநாடுகளுடன் பேச்சு நடத்தி தமது இராணுவத்தை அரசு பலப்படுத்தி வருகின்றது. எனவே, இரு தரப்பும் சமபலத்துடன் இருக்கவேண்டியது அவசியம். தமிழ்மக்கள் தமது இராணுவ பலமாகவும் அரசியல் பலமாகவும் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தவேண்டும். அதற்கு, சகலரும் ஒன்றுபடவேண்டும் என வேண்டுகிறேன்.

# வியக்க வைக்கும் சீனப்பெருஞ்சுவர்



சீனப்பெருஞ்சுவர், உலகின் அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. சீனப்பெருஞ்சுவர் அல்லது 'பெரியகோட்டை' என அழைக்கப்படும் இந்தப் பெருஞ்சுவர், புராதன சீனமக்களின் மதிநுட்பத்திற்கும் திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சீனர்களின் வீரத்தையும் துணிவையும் பறைசாற்றும் ஒரு சின்னமாக, சீனமக்கள் இதைப் போற்றுகிறார்கள்.

வட சீனாவில் கிழக்கிலிருந்து மேற்குத்திசை நோக்கி ஆயிரம் கிலோமீற்றர்கள் நீளத்திற்கு நீண்டு செல்லும் இப்பெருஞ்சுவரின் அமைப்பானது, சீன இதிகாசங்களில் வரும் 'டிராகன்' எனும் பிரமாண்டமான மிருகமானது பரிய புல்வெளிகள், அழகான மலைத்தொடர்கள் மற்றும் வரண்ட பாலைவனங்களினூடாக ஊர்ந்து செல்வதுபோல் அமைந்துள்ளது.

கிழக்கே 'ஷாங்காய்' கணவாயிலிருந்து மேற்கே 'ஜியாஜு' கணவாய் வரை செல்லும் இந்த நீண்ட சுவரானது கேபிய், பெய்ஜிங், ஷங்ஸி, உட்புற மொங்கோலியா, நிங்ஷியா, ஷான்ஸி போன்ற நகரங்களை ஊடறுத்துச் செல்கின்றது.

சீனப்பெருஞ்சுவரை, தேசிய கலாசாரச் சின்னமாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. மேலும் 1987ஆம் ஆண்டு உலகின் கலாசாரச் சின்னமாக சீனப்பெருஞ்சுவர் பிரகடனப்படுத்தப்பட்டது.

வரலாற்றுக் குறிப்புகளின்படி, சீனப்பெருஞ்சுவரின் ஆரம்பம் கி.மு. ஏழாவது நூற்றாண்டு வரை பின்நோக்கிச் செல்கின்றது. கி, கியூக, வெய்ஜான், கியூஜு மற்றும் ஷாஓ போன்ற சிற்றரசர்கள் தமக்கிடையே போரிட்டுக்கொண்டிருந்த காலத்தில், தமது பாதுகாப்பிற்காகச் சீனாவின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள அவர்களது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களைச் சுற்றிச் சுவர்களை எழுப்பினர்கள். பின்னர் கி.மு.221ஆம் ஆண்டில், சீனா முழுவதையும் தனது குடையின் கீழ் ஆட்சி செய்த சக்கரவர்த்தி சின்ஷிகுவாங் என்பவர் சிற்றரசர்களால் கட்டப்பட்ட சுவர்கள் அனைத்தையும் இணைத்து ஒன்றாக்கினார்.

சக்கரவர்த்தி கின்ஷிகுவாங்கிற்கு பின்வந்த சக்கரவர்த்திகள் அனைவரும் சீனப்பெருஞ்சுவரை நிர்மாணிப்பதன் மூலம் தமது பலத்தை வெளிக்காட்டியதோடல்லாமல், எதிரிகளிடமிருந்து தமது இராச்சியத்தையும் பாதுகாக்கலாம் எனவும் எண்ணினார்கள். வடக்குத் திசையிலிருந்து வந்த நாடோடி இனங்களின் ஆக்கிரமிப்பைத் தடுப்பதில் ஆரம்ப காலத்தில் முக்கிய இடத்தை வகித்த இப்பெருஞ்சுவர், தற்போது உல்லாசப் பயணிகளைக் கவரும் சீனாவின் பிரதான இடமாக விளங்குகின்றது.

கின், ஹான் மற்றும் மிங் அரச வம்சத்தின் இச்சுவரை அமைப்பதில் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள். இவர்களில் மிங் அரச பரம்பரையின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. புராதன சீனக் கட்டடக் கலையின் சிறப்புக்களை இச்சுவரின் மூலம் அறிய முடிகிறது. மலைகளின் உயரத்திற்கேற்ப இச்சுவரானது உயர்ந்தும் தாழ்ந்தும் செல்கின்றது.

உள்ளூரில் கிடைத்த மூலவளங்களைக் கொண்டு கட்டப்பட்ட இச்சுவர், உள்ளூர் சூழ்நிலைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டது. உயரம், அகலம் மற்றும் கட்ட மூலப்பொருட்கள் என்பவை இப்பெருஞ்சுவரில் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. மேலும் இச்சுவர் அமைந்துள்ள பிரதேசங்களின் தன்மையைப் பொறுத்தும் இதில் வேறுபாடுகளை அவதானிக்கலாம்.

இடைவெளிக்கொன்றாகப் பல சமிக்ஞைக் கோபுரங்கள் இச்சுவரில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அபாயகாலங்களில் இவற்றில் தீ அல்லது புகை மூட்டுவதன் மூலம் தலைநகரில் இருந்த படைத்தளங்களுக்கு சமிக்ஞை வழங்கப்பட்டது. மேலும் இந்த அதிசயச்சுவரில் யுத்ததந்திரோபாய ரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் காவற்கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோபுரங்களில் காவலில் ஈடுபடும் ஒரு சிப்பாயால், மிகவும் தூரத்தில் வரும் பத்தாயிரத்துக்கும் அதிகமான எதிரிகளை சுலபமாக இனங்கண்டு தடுத்து நிறுத்திவிட முடியும். [illegible] போர் வீரர்களின் பாதுகாப்புக்கும் தங்குமிட வசதிக்குமென சுவரின் உச்சியில் வாயிற் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### திறந்த பகுதி

இப்பகுதி, 15ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிங் அரச பரம்பரையினரால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது பெய்ஜிங் நகருக்கு வடமேற்காக 60கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. பல்வேறு வியத்தகு கலாசாரங்களின் சங்கமத்திற்கும் இயற்கையின் அழகிற்கும் இப்பகுதி புகழ் பெற்றது. நீண்டு செல்லும் மலைத் தொடர்களில் கோடை காலங்களில் பூத்துக்குலுங்கும் மலர்களின் அழகு, கம்பீரமான இச்சுவருக்கு மேலும் அழகு சேர்க்கின்றது. இந்தப் பகுதியில் சுவர்கள் மிகவும் பலமாகவும் உயரமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சுவர்களின் சராசரி உயரம் சுமார் 7.8 மீற்றர்களாகும்.

ஒவ்வொன்றும் ஐந்நூறு கிலோகிராம் எடை கொண்ட பாரிய கருங்கற்களின் மேல் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இங்கு சுவரின் உச்சியில் அகலம் மிகவும் அதிகம். ஐந்து குதிரைகள் அல்லது பத்து காலாட்படை வீரர்கள் பக்கத் திசையில் ஒரே வரிசையில் செல்வதற்கு இந்த அகலம் போதுமானது. இங்கு நூறு மீற்றர் இடைவெளியில், அமைக்கப்பட்டிருக்கும் காவற்கோபுரங்கள் மற்றும் அரணைச் சுற்றி அமைக்கப்பட்ட இடங்களில், வில்வீரர்கள் தங்குவதற்கும் ஆயுதங்களைச் சேகரித்து வைப்பதற்கும் வசதியுண்டு.

### யூயோங் (கணவாய்)

இது இரு மலைகளை முகடுகளுக்கிடையிலான பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. பெய்ஜிங் நகரின் மையப் பகுதியிலிருந்து ஐம்பது கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் இப்பகுதி வடமேற்கு பெய்ஜிங்கிற்கு சிறந்த பாதுகாப்பு அரணாக விளங்குகின்றது. இம்மலைக் கணவாயினுள் 1268ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாக நம்பப்படும் பளிங்குக்கற்களாலான மேடை ஒன்றுள்ளது. தனக்குச் சாதகமான இந்த இடத்திலிருந்துதான், யுவான் அரச வம்சத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தி ரய்ஷு என்பவர் தனது எதிரிகளுடன் போரிட்டதாக நம்பப்படுகிறது.

### முத்தெய்ன்யூ பகுதி

இப்பகுதியில், கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப்பசேல் என்று அழகாகச் செழித்து வளர்ந்துள்ள புற்தரைகளையும் காடுகளையும் காணலாம். இங்கு சுவரிற்கு வெளியேயுள்ள பிரதேசம் செங்குத்தாகவும், உள்ளே உள்ள பகுதி படிப்படியாக இறங்குவதாகவும் அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் அபூர்வ வடிவிலான காவற்கோபுரங்கள் நெருக்கமாக அமைந்துள்ளன. மேலும் இப்பகுதியில் மனதைக் கவரும் ரம்மியமான பல இயற்கைக் காட்சிகளும் காணப்படுகின்றன.

1569ஆம் ஆண்டில் மிங் அரச வம்சத்தினரால் மீளமைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் சீனப்பெருஞ்சுவரின் இப்பகுதியானது தற்போது நல்ல நிலையிலுள்ளது.

### ஜின்ஷான்லிங் பகுதி

சீனப்பெருஞ்சுவரின் இப்பகுதி, கி.பி. 1378ஆம் ஆண்டு கட்டப்பட்டு, பின் மிங் வம்சாவளியைச் சேர்ந்த இரண்டு தளபதிகளால் மீளமைக்கப்பட்டது. இது பெய்ஜிங் நகரிலிருந்து 120 கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. இங்கு 60 மற்றும் 200 மீற்றர்கள் இடைவெளியில் வரிசையாகப் பல காவற்கோபுரங்கள் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. போர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இங்கு கடமையிலுள்ள போர் வீரர்கள் தமக்கிடையில் உதவிகளைப் பரிமாறிக் கொள்ளும் விதத்தில் இவை அமைந்துள்ளன. இப்பகுதியில் காணப்படும் குதிரைகள் விடுவிப்புச் சுவர்கள், கொத்தளங்கள், குழிவான அமைப்புடைய காவற்கோபுரங்கள், களஞ்சியப்படுத்தும் கோபுரங்கள் என்பன பார்வையாளரின் கவனத்தைக் கவரக் கூடியவை

### குபெய்க்கோப் பகுதி

யான்ஷான் மலைத்தொடரில் தெற்கு மற்றும் வடக்குப் பக்கமாக ஊடறுத்துச் செல்லும் பாதைக்கான பிரதானவழி இந்தப் பகுதியில்தான் ஆரம்பிக்கின்றது. வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் சுவரின் குறுக்கே பாயும் சாஓஹீ நதியும், சுவரைச் சூழவுள்ள மலைத்தொடர்கள் சுவரின் கைப்பிடிப்பகுதிகளுடன் ஒன்றாக இணைந்து செல்வதும் இப்பகுதியை சிறந்த ஒரு பாதுகாப்பரணாக்கியுள்ளது. இப்பகுதி யுத்ததந்திரோபாய ரீதியில் மிகவும் முக்கிய இடமாக இருந்ததினால், சீனாவின் சரித்திரத்தில் நடந்தேறிய முக்கியமான போர்கள் அனைத்தும் இப்பகுதியிலேயே இடம்பெற்றன

### குவாங்யா கணவாய்

இது 556ஆம் ஆண்டில், வடபாகத்தைச் சேர்ந்த கீ அரச பரம்பரையினரால் முதன் முதலாகக் கட்டப்பட்டது. சுவரிலிருந்து பல கிலோமீற்றா தொலைவிலிருக்கும் 23மீற்றர் உயரமான பீனிக்ஸ் காவற்கோபுரத்தினால் இப்பகுதியின் புகழ் ஓங்கியிருக்கிறது

- தாரணி -

காவற்கோபுரங்கள், படைவீடுகள், கொத்தளங்களுடன் கூடிய இந்தப் பகுதியின் முழு அமைப்பும் கம்பீரம், பயங்கரம், ஆபத்து, அழகு என்பவை ஒருசேர அமைந்ததாகக் காணப்படுகின்றது. இப்பகுதியின் தெற்குப் பக்கமாகச் சீனாவின் முதலாவது சீனப்பெருஞ்சுவர் அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

### சிமத்தாய்ப் பகுதி

முதன்முதலாக 550-577இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கட்டப்பட்ட இது பெய்ஜிங் நகரிலிருந்து 120 கி.மீ. தூரத்திலுள்ளது. சீனப்பெருஞ்சுவரின் கிழக்குப் பகுதிக்கான பிரதான பாதையின் முக்கிய வழியாக இந்தப்பகுதி அமைந்துள்ளது. சிமத்தாய் மலையின் வடபகுதியிலுள்ள மலை முகடுகளில் சில 40 செ.மீ. அளவுக்கு மிகவும் குறுகியதாக உள்ளன.

சீனப்பெருஞ்சுவரில் காணப்படும் கட்டடக்கலையின் சிறப்புக்களை இப்பகுதி வியக்கத்தக்கவகையில் எடுத்துக் காட்டுகின்றது. இப்பகுதியில் சுவர்கள், ஒற்றையாகவும் இரட்டையாகவும் நாற்பக்கவடிவிலும் காணப்படுவது ஒரு தனித்துவமான அம்சமாகும். இந்த சிமத்தாய்ப் பகுதியில் காணப்படும் பெய்ஜிங் மற்றும் தேவதை என அழைக்கப்படும் இரு பிரதான காவற்கோபுரங்களால், இப்பகுதி மேலும் புகழ்பெறுகிறது. இவற்றில் தேவதை காவற்கோபுரத்தில் காணப்படும் கலையம்சம் பொருந்திய அற்புதமான கட்டடக்கலை வேலைப்பாடுகள் காண்போர் மனதைக் கவரக்கூடியவை. தனது எஜமானுடன் காதல் கொண்ட மான் ஒன்று தேவதையாக மறுபிறப்பெடுத்து இக்கோபுரத்தில் வாழ்ந்ததாகக் கட்டுக் கதைகள் கூறுகின்றன.

### ஷன்ஹாய்க் கணவாய்

மிங் அரச பரம்பரையைச் சேர்ந்த புகழ்பெற்ற தளபதி ஒருவரால், இது 1381ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மலையடிவாரத்தில் அமைந்திருக்கும் இது கடற்பிரதேசத்தை அண்மித்ததாக உள்ளது. 'சொர்க்கத்தின் கீழுள்ள முதலாவது பாதை' என இது அழைக்கப்படுகிறது. இப்பகுதிக்கப்பால் லாவோலொங்கு எனும் இடத்தில் கடலைத் தொடும்வரை சீனப்பெருஞ்சுவரானது கிழக்கு நோக்கி நீண்டு செல்கின்றது.

### ஜியாயூக் கணவாய்

1372ஆம் ஆண்டு இவ்விடத்திலேயே கட்டப்பட்ட இந்தப் பகுதியுடன் மேற்குத் திசையில் நீண்டு செல்லும் சீனப் பெரும்சுவர் முடிவடைகின்றது. மிகவும் புகழ்வாய்ந்த பட்டு நூல் என்றழைக்கப்படும் வீதியில் இது அமைந்துள்ளது.

யுத்ததந்திரோபாய ரீதியில் இது மிக முக்கியமான இடம் என்பதால் 'பண்டைக்காலத்தில் இப்பிரதேசம் பாதுகாப்பு அரணாகச் செயற்பட்டது. கியுலியன் மற்றும் லொங்கூ மலைகளுக்கிடையில் அமைந்துள்ள இப்பகுதி மேற்கே கியுலியன் மலையின் அடிவாரம் வரை வியாபித்துள்ளது. தெற்கே, இது கேய்ஷன் மலையின் செங்குத்தான பகுதிவரையில் நீண்டதாகவுள்ளது.

இது எத்தனையோ சாம்ராஜ்யங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் சாட்சியாக விளங்குகிறது. எண்ணிலடங்காத கோடைப் பருவங்கள் வந்தன - போயின. பனிக்காலங்களில் பனி பொழிந்தது பின் அது உருகி ஓடியது. ஆயினும், இன்றும் இது தனது பழைய வசீகரத்தை இழக்காமல், தலைநிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றது.

நமது முன்னோர்களின் உன்னதப் படைப்பான இந்த அதிசயம், அதைக் காணும் எவரையும் தனது கம்பீரத்தாலும் வசீகரத்தாலும் கட்டிப் போட்டுவிடும் என்றால் அது மிகையல்ல.

★

# சனீஸ்வரனின் வாகனம் காகம் அது கற்றுத் தருகின்ற பாடம்!

இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான புரட்டாதிச் சனி இன்றாகும். அதனை முன்னிட்டு சனிபகவானின் வாகனமாகிய காகத்தின் சிறப்புப் பற்றி விளக்குகிறது இந்த ஆக்கம்.

புரட்டாதி மாதத்தில் இந்துக்கள் புனித விரதம் அனுஷ்டித்து சனிக்கிழமைதோறும் காகத்தை அழைத்து வணங்கி, உணவு படைப்பது வழமை.

நவக்கிரகங்களில் ஒன்றாகிய சனி பகவான் தரும் துன்பங்களில் இருந்து நாம் தப்பி நிம்மதியாக வாழ [illegible] நல்லெண்ணெய் விளக்கேற்றி நலம் அருள்வாய் என வேண்டுவது இயற்கை.

சனி பகவானது வாகனமெனக் கூறும் பறவை ஆகிய காகத்தின் பெருந்தன்மையினை இந்துக்கள் என்றோ உணர்ந்தே, விரத அனுஷ்டானங்களின்போதெல்லாம் காகத்தை அழைத்து உணவு படைப்பது வழமை. காகம் படையலை உண்டு தன் பார்வையில் வழங்கும் வாழ்த்தைப் பெற்று விரதத்தை நிறைவு செய்வார்கள் இந்துக்கள்.

எண்ணற்ற ஜீவராசிகள் நிறைந்திருக்கும் இப்பிரபஞ்சத்தில் தானே முதன்மையானவன் எனச் சொல்லிக்கொள்கிறான் மனிதன்.

ஆனால், மெஞ்ஞான நெறி உணர்ந்த முன்னோர்கள் சாதாரண பறவை ஆகிய காகத்திடமே நாம் கற்கவேண்டியவை நிறைய உண்டு எனச் சொல்லியுள்ளார்கள்.

*'காலை எழுந்திருத்தல், காணா*
*மலே புணர்தல்'*
*மாலை குளித்து மனை புகுதல்*
*- சால*
*உற்றாரோடு உண்ணல், உற*
*வாடல் இவ்வாறும்*
*கற்றாயோ காக்கைக் குணம்?'*

என்ற பாடல் வரிகள் [illegible] மனிதர்கள் கற்கவேண்டிய பண்பாட்டைப் பாடுகின்றன. அதிகாலையிலேயே காகம் நித்திரையால் எழுந்திருக்கும்; காகம் [illegible] மறைவாக - நாகரீகமாக - காணாமலே புணர்தல்; தினமும் காகம் தனது உணவை அலைந்து தேடி உண்டுவிட்டு தன் இருப்பிடம் போகும்போது ஆற்றிலோ குளத்திலோ தண்ணீர் ஊற்றிலோ குளித்து தூய்மையாகச் செல்லுமாம்; காகம் பிறர் வீட்டில் தங்காது எப்போதும் தனக்குரிய இடத்தை நாடி அயலிடை புகாது - தன் மனையிடை புகும் வழமை உடையதாம்.

தான் உண்ணுகின்ற உணவை தனியே உண்ணாது, உற்றாரோடு உண்டு, உறவாடி மகிழ்கின்ற இத்தகைய பெரும் தன்மைகளைக் காக்கையிடம் ஆறறிவு படைத்த மனிதன் கற்கவேண்டும் என ஆன்றோர்கள் எவ்வளவு ஆழமாகச் சொல்லியுள்ளார்கள். காகத்தின் உயர்ந்த குணங்களை வாழ்நாளில் மனிதன் கண்டு போற்றிப் பின்பற்றவேண்டும் என்பதை தமிழ் ஆகமமாகிய திருமந்திரத்தில் திருமூலர் மிகச் சிறப்பாக விளக்குகிறார் -

*'ஆர்க்கும் இடுமின்; அவர் இவர்*
*என்னன் மின்;*
*பார்த்திருந்து உண்மின்; பழம்*
*பொருள் போற்றன் மின்;*
*வேட்கை உடையீர்! விரைந்து*
*ஒல்லை உண்ணன் மின்;*
*காக்கை கரைந்துண்ணும்*
*காலம் அறிமினே'*

என்று இப்பாடலின் அரிய பல பொருளை விரித்து நோக்கின் காகம் எமக்குத் தரும் வாழ்க்கை பற்றிய உபதேசம் விளங்கும்.

*'ஆர்க்கும் இடுமின்; அவர் இவர் என்னன் மின்'*

- எவர், எமக்கு முன் பின் தெரியாதவர் வந்தாலும் பசித்து வந்தவர்களுக்கு உணவு கொடுங்கள்.

*'பார்த்திருந்து உண்மின்'*

- யாராவது பிறர் வந்தபின் - அவர்களோடு - விருந்தினர்களோடு - உண்ணுங்கள்.

*'பழம் பொருள் போற்றன் மின்'*

- பல நாள்களாகத் தேடிய பொருளை பயன் தக்க வகையில் பிறருக்குக் கொடுத்து உதவுங்கள், அதனை வைத்து வெறுமனே பாதுகாக்காதீர்.

*'வேட்கை உடையீர்! விரைந்து ஒல்லை உண்ணன் மின்'*

- பசி வரும் வேளைகளில் கூட அவசரம் கொள்ளாது மற்றவரின் வருகையை எதிர்பார்த்து உண்ண வேண்டும்.

*'காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே'*

- காகம் தான் உண்ணும்போது தன் இனத்தைக் கரைந்து கூப்பிட்டு எல்லோரும் சாப்பிடுங்கள் என்று அழைத்துண்ணும் பண்பைப் பாருங்கள்.

மேற்குறித்த பாடலில் திருமூலர் காகத்தின் மேன்மையைக் கூறி மனிதனை காகத்திடம் அறியவேண்டிய அறத்தை விளக்குகிறார். உண்மையிலேயே சாதாரண சிறிய பறவையாகிய காகத்திடம் கூட எவ்வளவு உயர்ந்த நாகரிகங்களை எமது இந்துக்கள் அறிந்து போற்றி வாழ்ந்துள்ளார்கள் என்பதனை எம் வளரும் சந்ததி அறியவேண்டும்.

ஆறு.திருமுருகன்

அன்பு, இன ஒற்றுமை, பண்புடைய வாழ்வு இவை இன்றைய உலகுக்கு - எம் இனத்துக்கு - அவசியமானவை.

தன் இனத்தில் ஒரு காகத்துக்கு துன்பம் வருமானால் எல்லாக் காகங்களும் கூடி அழுது துன்பத்தில் கலந்து துயர் தெரிவிக்கும் காட்சியை நாம் காண்கிறோம்.

எனவே, புரட்டாதி மாதத்து புண்ணிய விரத காலத்தில் காகத்தின் மகத்துவத்தை அறிந்து எம் வாழ்வைப் புனிதப்படுத்துவோமாக!

★

ஜனாதிபதி கூட்டிய கூட்டத்தில்

# பரந்த முன்னணி பற்றிய பேச்சுக்களுக்கு விசேடகுழு நியமிப்பதெனத் தீர்மானம்

அரசுக்கு எதிரான சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து முன்னணி ஒன்றை அமைப்பது பற்றிய பேச்சுகளுக்கான அடிப்படையை வகுக்க விசேட குழுவொன்றை நியமிப்பதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. இக்குழு இன்னும் இரு வாரங்களில் நியமிக்கப்படும்.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மாலை 4.30 மணியளவில் ஆரம்பமான இக்கூட்டம் சுமார் 5 மணிநேரம் நீடித்தது.

முன்னணி அமைப்பதற்காக ஜே.வி.பியுடன் மட்டுமன்றி, அரசுக்கு எதிரான சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்த வேண்டுமென்று இக்கூட்டத்தில் ஜனாதிபதி வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

பரந்த முன்னணி ஒன்றை அமைத்து எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன் அரசு ஒன்றை அமைப்பதாகவும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் அரசு அமைத்த பின்னரே நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

ஜே.வி.பி. இல்லாமல் தேர்தலில் வெற்றிபெறவோ, அரசு அமைக்கவோ முடியாது என்று எந்த ஓர் எம்.பியும், தொகுதி அமைப்பாளரும் கூறக்கூடாது. அவ்வாறு கூறுவோர்மீது நடவடிக்கை எடுக்க நேரிடும். சுதந்திரக் கட்சிக்கு தனித்து எழுந்து நிற்கக்கூடிய சக்தி இருக்கிறது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கருத்தைக் கொண்டிருக்கும் ஜே.வி.பி. அது தொடர்பாக தன்னைவிடக்கும் மாற்று யோசனை என்ன என்பதை விளக்கவேண்டும்.

திருகோணமலை, கொழும்பு ஆகியவற்றின் பாதுகாப்பு பெரும் நெருக்கடிக்கு உள்ளாகலாம்.

\- இவ்வாறு ஜனாதிபதி அக்கூட்டத்தில் கூறினார்.

# பிரதமரின் படத்துடன் சுவரொட்டி; சிவப்பு வானை தேடுகிறது பொலீஸ்

கொழும்பு,செப்.20

கொழும்பு நகரின் பல்வேறுபகுதிகளிலும் பிரதமரின் படத்துடன் சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலீஸார் குறிப்பிட்ட சுவரொட்டிகளை ஏற்றிச்சென்றதாகக் கருதப்படும் சிவப்பு நிற வானைத் தேடி வருகின்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதியவண்டே தாம் சிவப்பு நிற வானைத் தேடிவருவதாகக் கூறினார்.

சுவரொட்டிகளை ஒட்டியவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் குற்றவியல் பிரிவுப் பணிப்பாளர் சரத்லுகோட தலைமையிலான அணியினர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் இதுவரை 30இற்கும் அதிகமானவர்களை விசாரணை செய்துள்ளனர். இவர்களுள் சிலர் கொள்ளுப்பிட்டி பொலீஸ் பகுதியில் வசிப்பவர்கள்.

சுவரொட்டிகளை அச்சிட்டு வெளியிட்டவர் வரையறுப்பிலும் அவரைக் கைதுசெய்வதற்கேற்ப விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சரத்லுகோடவுக்குப் பணிப்புரைகள் விடுத்துள்ளதாகப் போதியவண்டே தெரிவித்தார்.

# அமைச்சர்களுக்கு எதிரான கொலைச் சதியை அம்பலப்படுத்திய கைதியைக் கொல்ல நாவல நிஹால் இருதடவைகள் முயன்றார்

## நீதிவான் நீதிமன்றில் இரகசியப் பொலீஸார் தெரிவிப்பு

காணி அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன, வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க இருவரையும் கொலை செய்வதற்கு கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் உருவாக்கப்பட்ட சதித்திட்டத்தை சிறைக்கைதியான அஜித் நிசாந்த அம்பலப்படுத்தியதை அடுத்து அவரைச் சிறைச்சாலையில் வைத்தே கொலைசெய்ய நாவல நிஹால் இரண்டு தடவைகள் முயற்சி செய்தார்.

\- இவ்வாறு நேற்றுமுன்தினம் நீதிவான் நீதிமன்றில் இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்.

நாவல நிஹால் என அழைக்கப்படும் டெனால்ட் நிஹால் செனவிரட்ண என்பவரும், அஜித் நிசாந்த என்பவரும் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அமைச்சர்கள் இருவரையும் கொலைசெய்ய நாவல நிஹால் திட்டமிட்டதை சிறைச்சாலையில் இருந்த [illegible] அஜித் நிசாந்த அம்பலப்படுத்தினார் [illegible] ஒன்று பெறப்பட்டதாகவும் இரகசியப் பொலீஸ் உதவி அத்தியட்சகர் சேகர தெரிவித்துள்ளார்.

இக்கொலைத் திட்டம் குறித்து அஜித் நிசாந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார் எனவும் [illegible] தெரிவித்தார்.

நாவல நிஹால் [illegible] கொலைசெய்ய முயற்சி [illegible] தெரிவித்துள்ளார்.

[illegible]

இரகசியப் பொலீஸார் [illegible] தெரிவித்தனர்.

[illegible]




தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய உற்சவத்தின்போது ஆலய வளாகத்தில் திறந்துவைக்கப்பட்ட காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையின் நடமாடும் கிளையில் முதல் கணக்கை ஆரம்பித்த வாடிக்கையாளரொருவருக்கு கணக்குப் புத்தகத்தை இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். நடராஜலிங்கம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் காங்கேசன்துறை கிளையின் முகாமையாளர் எஸ்.சிவபாலனும் காணப்படுகின்றார். (படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)

மழை காலத்துக்கு முன்

# நலன்புரி முகாம்களின் கொட்டில்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

மழைகாலம் நெருங்கி வருவதனை அடுத்து யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் நலன்புரி முகாம்களிலுள்ள தற்காலிக கொட்டில்களை புனரமைத்துக்கொடுக்கும் நடவடிக்கையை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் மேற்கொண்டுள்ளது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் ஆகிய பிரிவுகளிலுள்ள பன்னிரண்டு நலன்புரி முகாம்களிலேயே இக்கொட்டில்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் 89 நலன்புரி முகாம்கள் இயங்கிவருகின்றன. இம்முகாம்களில் 2 ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 238 பேர் உள்ளதாக அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. (ம-9-3)

# பெரும்போகத்துக்கான விதைநெல் வன்னியில் இருந்து எடுத்து வரப்படும்

## மாவட்ட பொருண்மிய பொறுப்பாளர் தெரிவிப்பு

வலிகாமம் தெற்கு,செப்.20

பெரும்போகத்துக்குத் தேவையான நல்லின விதைநெல்லை பெற விரும்பும் விவசாயிகள் தத்தம் பகுதி கமநல கேந்திர நிலையங்களூடாக பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்துடன் தொடர்புகொள்ள வேண்டும். இவ்வாறு தொடர்புகொள்பவர்களுக்கு வன்னியில் இருந்து நல்லின விதை நெல்லை எடுத்துவந்து வழங்குவோம்.

யாழ்ப்பாண மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் எஸ்.ஞானவேல் மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் விவசாய சம்மேளனங்களின் கலந்துரையாடல் அண்மையில் செ. இலகுநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ஞானவேல் மேலும் தெரிவித்ததாவது:

பெரும்போக நெல்விதைப்புக்கான காலம் நெருங்கி வருகிறது. விவசாயிகள் நல்லின நெல்லை விதைத்து கூடிய விளைச்சலைப் பெற வேண்டும். நெல் வயல் நிலங்களைத் தரிசாக விடக்கூடாது. அப்படி தரிசாக விடப்படும் நிலங்களை அப்பகுதியில் விவசாயம் மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கு விவசாய சம்மேளனங்கள் எடுத்து வழங்கி யாழ். மாவட்டத்தின் நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

நீர்ப்பாசனத் திணைக்களங்கள் குளவாய்க்கால்களை விவசாய சம்மேளனங்கள் ஊடாகத் துப்புரவு செய்துகொடுக்க வேண்டும்.

பெரும்போக காலத்தில் கால்நடைகளை, கால்நடை வளர்ப்போர் கட்டிவைத்து பராமரிக்கவேண்டும்.

இம்முறை விதை உருளைக் கிழங்கினை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர விவசாயத் திணைக்களமே நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியார் எடுத்து வருவதை அரசு தடை செய்ய வேண்டும்.

சுன்னாகம், மருதனார்மடம், திருநெல்வேலி பகுதிகளிலுள்ள பொதுச் சந்தைகளில் விவசாயிகள் கொண்டு செல்லும் மரக்கறி உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. இந்தச் சந்தைகளை பிரதேச சபைகள் தனியாருக்கு குத்தகைக்குக் கொடுப்பதனால் ஏற்படும் சிக்கல் இதுவாகும்.

விலைத் தளம்பல் காரணமாக பாவனையாளர்கள் மரக்கறிகளுக்கு கூடுதல் விலைகள் கொடுக்கவேண்டியேற்படுகிறது. பிரதேச சபைகள் எதிர்காலத்தில் இச்சந்தைகளில் பொதுத் தராசுகளை வைத்து தமது ஊழியர்கள் மூலம் சந்தையை நடத்தவேண்டும் - என்றார்.

நெல்லின் உத்தரவாத விலை 13 ரூபா 50 சதத்தில் இருந்து 20 ரூபாவாக கூட்டப்படவேண்டும். உத்தரவாத விலை குறைவாக இருப்பதால் முழுநேர விவசாயிகள் - நெற்செய்கையை நம்பி வாழும் விவசாயிகள் பாதிப்படைகிறார்கள். இவர்களுக்கு அரசு மானியம் வழங்கவேண்டும்.

வெள்ளம், வரட்சி காரணமாக விவசாயிகள் பாதிப்படைகிறார்கள். அண்மையில் இடம்பெற்ற காற்றினால் பாதிக்கப்பட்ட வாழைத்தோட்ட செய்கையாளர்களுக்கு நஷ்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை. விவசாயிகள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் கூட்டத்தில் எடுத்துக்கூறினார்.

உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் க.சோதிநாதனும் உரையாற்றினார். (எ-152)

# உடுவில் கல்விக் கோட்டத்தில் திருமுறை விழா ஏற்பாடுகள்

வலி.தெற்கு,செப்.20

உடுவில் கல்விக் கோட்டத்தில் இவ்வருடம் நடைபெறவுள்ள கல்விக் திருமுறை விழாவுக்கான முன்னாயத்த நடவடிக்கைகளை உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ. அரிய நாதன் மேற்கொண்டு வருகிறார்.

தேவார பண்ணிசை, புராணம், தொண்டுநிலை செயன்முறை போட்டிகளைச் சைவ பாடசாலைகளிடையே நடாத்தி பரிசுகள் வழங்கவும், ஆறுமுக நாவலர், சமயகுரவர்களை முன்வைத்து வைகறைத்திருமுறை விழாவை நடத்தவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பாடசாலை மட்டங்களில் தேவார திருமுறை, புராணம், பிரார்த்தனைத் தொண்டுநிலை செயன்முறை போட்டிகளை நடத்தி, சிறப்பாக செயற்படும் மாணவர்களை கோட்ட மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்ற செய்யுமாறும்.

கோட்டப் போட்டிகளில் பாடசாலை மற்றும் மாணவர்களின் விண்ணப்பங்களை ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறும் கோட்டப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (எ-157)

# உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நிர்வாகசேவை அலுவலரை நியமிக்குக!

## சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.20

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளை நியமனம் செய்யுங்கள்.

\- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண சனசமூக அபிவிருத்தி அலுவலர் சங்கம் மாகாண ஆளுநரைக் கோரியுள்ளது.

சிரேஷ்ட அடிப்படையில் அதிகாரி ஒருவரை மேற்படி பதவிக்கு நியமனம் செய்வதன்மூலம் உண்மையான நிர்வாகத்தை நடத்தமுடியாது.

பட்டதாரி தகைமையைக் கொண்ட இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளை நியமிப்பதனூடாகவே பெறுமதிமிக்க நிர்வாகத்தை நடத்தி மக்களுக்குச் சேவையாற்றமுடியும்.

எனவே, புதிய நியமனம் பெற்று தற்போது பயிற்சிபெற்று வரும் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரிகளை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களாக நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று மாகாண சனசமூக அபிவிருத்தி அலுவலர் சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-185)

# வேம்படி மாணவிக்கு ஜனாதிபதி விருது

வேம்படி மகளிர் கல்லூரி மாணவியான பொ.சுதிராவ் ஜனாதிபதி சாரண விருதினைப் பெற்றுள்ளார்.

இன்று சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் கலந்துகொள்வதற்கென மேற்படி மாணவி கொழும்பு பயணமாகியுள்ளார்.

மாவட்ட சாரணிய ஆணையாளர் மற்றும் யாழ். கட்டாய சாரண ஆணையாளரின் மேற்பார்வையில் மாணவி விசேட பயிற்சிகளைப் பெற்றிருந்தார். (6)

# படகில் இந்தியாவுக்குச் செல்லவிருந்த 5 இலங்கையர் தலைமன்னாரில் கைது

## உடனிருந்த இந்தியப் பிரஜையும் கைதானார்

இந்தியாவுக்கு சட்டவிரோதமாகச் செல்லவிருந்த ஐந்து இலங்கையர் கடந்த புதன் இரவு தலைமன்னார் கடலில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களுடனிருந்த ஓர் இந்தியரும் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட ஆறு பேரும் அவர்கள் பயணம் செய்த படகுடன் நேற்றுமுன்தினம் காலை தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கையர்களை இந்தியாவுக்குக் கூட்டிச் செல்ல ஒருவரிடம் 30 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் வரை அறவிடப்பட்டிருப்பதாக விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

இதற்கிடையே, இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போதைப் பொருள்களைக் கடத்திவர முயன்ற மூன்று இலங்கையரும், இரு இந்தியர்களும் தனுஷ்கோடியில் வைத்து இந்திய சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும், சுமார் 22 வயதினர்கள் எனவும் கூறப்பட்டது.

## வன்னியசிங்கம் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.20

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், கோப்பாய்த தொகுதியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான கோப்பாய் கோமான் கு.வன்னியசிங்கத்தின் 44ஆம ஆண்டு நினைவு விழாவும் திருமதி கோமதி வன்னியசிங்கத்தின அஞ்சலி நிகழ்வும் நாளை ஞாயிற்றுக கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்வி யங்காடு வன்னியசிங்கம் பொதுப் பணிமன்ற மண்டபத்தில் யாழ். பல் கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேரா சிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமை யில் நடைபெறும். (ம-173)

## பரிசளிப்பும் கலைவிழாவும்

யாழ்ப்பாணம்,செப்.20

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா வும், கலைவிழாவும் எதிர்வரும் 22ஆம திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் பொ.கணேஸ்வரலிங கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

உடுவில் கோட்ட உதவிக் கல்விப பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் இந்த விழாவில் பிரதம விருந்தினராகவும்-

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு சிறப்பு விருந்தின ராகவும் கலந்துகொள்வர். (எ)

## நவாலி வயல்களில் விதைப்புக்கு ஆயத்தம்

நவாலி,செப்.20

நவாலி ஆனைக்கோட்டை கல்லுண டாய் பகுதி வயல்களில் நெல் விதைப புக்கான ஆயத்த வேலைகளில் விவ சாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

வயல்களில் குப்பை பறிப்பவர் களும், குப்பை சிந்தி உழுபவர்களும், வரம்பு கட்டுபவர்களுமாக அனைத்து விவசாயிகளும் வயலில் வேலை செய் வதைக் காணமுடிகிறது. (எ-100)

## பயிற்சி கருத்தரங்கு

கைதடி,செப்.20

கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழகம் வாரந்தோறும் நடத்திவரும் ஐ.சி.ஈ. சாதாரண மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் விஞ்ஞான பாடத்திற்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் இதில் கலந்துகொண்டு பயன்பெறு மாறு கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழகச் செயலாளர் த.பாஸ்கரன் கேட்டுள்ளார். (எ-75)

## மின்னிமின்னி ஒளிரும் தெருவிளக்குகள்

சங்கானை,செப்.20

சங்கானையில் இருந்து சித்தன் கேணிப் பகுதி வரை இலங்கை மின் சார சபையினால் பொருத்தப்பட்ட தெருவிளக்குகளில் சில மின்னி மின்னி எரிந்தும், சில ஒரேயடியாகச் செயலிழந்தும் காணப்படுகின்றன.

இதனால் இரவு நேரத்தில் இந்த வீதியூடாகப் பயணம் செய்யும் பாத சாரிகளும், வாகனம் செலுத்துநர் களும் பெரும் சிரமத்தை எதிர்நோக் குவதாகவும் - கூறப்பட்டது. (எ-29)


### கார் விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள வோக்ஸ் வாகன் 2 ஸ்ரீ பிந்திய தொடர் இலக்கம் உடன் விற்பனைக்குண்டு.

**திருவள்ளுவர் அச்சகம்**
(யாழ். மாநகரசபைக்கு அண்மையில்)
நல்லூர்.
தொ.பே. 222 2181

(22771) (21-15-13)

### வேலையாள் தேவை

* பெயின்ரிங் வேலை, வெல்டிங் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும்
* பெண்களுக்கான தையல் வேலை தெரிந்தவர்களும் தொடர்புகொள்ளவும்.

*கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.*

**சிற்றி காமன்ற்,**
535, பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தி.
(பெற்றோல் நிரப்பு நிலையம் அருகில்)
T.P.: 0777 - 886108

(21-13-15)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 19 09 1931

இறைவன் அடியில் 21 08 2003



## அமரர் பொன்னையா பாலசிங்கம்

(ஓய்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீர் தந்தையே! கண்ணில் நீரோ மறையவில்லை
எம் நெஞ்சங்களில் உங்கள் முகம் என்றுமே அழியாது!

166/3,
சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

கீழ்வரும் பயிற்சிநெறிகள் எமது நிறுவனத்தில் 22-09-2003 இல் ஆரம்பமாகின்றன.
ஆண்டு 10 வரை படித்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**Certificate Craft Courses**
(தமிழ் மொழி மூலம்)

- Mechanical Craftsman Practice (லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி)
- Electrical Wiring & Installation Practice (மின் இணைப்பும் நிர்மாணமும்)
- Automobile Technology (மோட்டார் வாகன தொழில்நுட்பம்)
- Radio & T.V. Servicing (றேடியோ ரீ.வீ.பழுது பார்த்தல்)
- Foundry Practice (உலோக வார்ப்பு தொழில்பயிற்சி)
- Air-Conditioning & Refrigeration (குளிரூட்டுதல் பயிற்சி)

காலம்: ஒரு வருடம் (முழு நேரம்)

Facilities: Library, Hostel, Sports

Application Forms are available at JCIT, Vaddukoddai and Undergraduate Department, Jaffna College, Hospital Road, Jaffna.

Director
**Jaffna College Institute of Technology Vaddukoddai.**

Email: jcit @ sltnet.lk Tel.No: 070-21.3139

(21-15-13) (சி-30270)


# 13ஆம் ஆண்டு நினைவலைகள்

## வீரவேங்கை கண்ணன்
### (கனகசபாபதி பரமானந்தன்)

வீரஜனனம்: 27-06-1973 வீரமரணம்: 20-09-1990

காரை மண்ணில் 'கண்ணன்' எனும் பெயர்கொண்டு
கருத்துடன் களத்தினில் போராடினாய்
தமிழீழ மண்ணைக் காத்திட வென்று
தலைவனின் வழியில் தடம்பதித்தாய்
ஆறுதல் கூற நீயிருப்பாய் என்றிருக்க
அன்றோ கோட்டையில் கொடி ஏறிடும் வேளை
தமிழ் மண்ணிற்கு உன் உயிரை வித்திடச் செய்தாய்
ஆண்டுகள் பலவானாலும் ஆனந்தன் நினைவுடன்
வேண்டுகிறோம் ஈழத்துச் சிதம்பரத்தானை அடைக சாந்தி!

நீலிப்பந்தனை,
காரைநகர். (21-15-13)

என்றும் உன் நினைவுடன்:
தாய். சகோதரங்கள். உற்றார். உறவினர்கள்.

(சி-30248)

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு வள்ளியம்மை

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் 21-09-2003 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். இவரின் துக்க அனுஷ்டிப்பு நிகழ்வு கரவெட்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாலுவரவை, குருக்கள் பகுதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.**

**சி.வீரகத்தி** (சகோதரன்)

**(மரண அறிவித்தலின் முழுவிவரம் - 14-09-2003 உதயனில் பிரசுரமாகியது)**

(21-15-13) (22749)

## இரத்தினம் பாக்கியநாதன்

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 7ஆம் வட்டாரம் புங்குடுதீவையும் கனடாவையும் வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் பாக்கியநாதன் அவர்கள் 14-09-2003 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் திருமதி அன்னம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சௌந்தரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தெய்வானைப் பிள்ளையின் (கோமளம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவரான ஸ்ரீரங்கன் மற்றும் சசிகாந் (காந்தன் VMR), ஜெயக்குமார், தினேஷ்குமார், சிந்துஜா, பரந்தாமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருநாவுக்கரசு, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் துரைராஜா, சரஸ்வதி, சரோஜினி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவரான கார்த்திகேசு மற்றும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்றவரான பாக்கியம் மற்றும் கந்தையா, இரத்தினம், பரிமளம், ஆறுமுகம், இராஜேஸ்வரி, கங்காதேவி, செல் லத்துரை, ஜெயசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் மகேஸ்வரி, காலஞ் சென்றவரான குமாரசாமி மற்றும் விசுவலிங்கம், புவனேஸ்வரி, குமாரசாமி, தருமலிங்கம், இராசலட்சுமி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-09-2003 புதன்கிழமை கனடாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
**திருமதி தெய்வானைப்பிள்ளை**
(கோமளம் - மனைவி)

**T.P.416 - 5368812** (19-21-15-13) கனடா (22765)

## நாகலிங்கம் ராசநாதன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ராசநாதன் அவர்கள் 24-06-2003 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் நாகலிங்கம் - இராசமணி தம்பதியரின் செல்வப் புத்திரனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் றூபறாஜ், றயுக்கா, றோகானி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் லில்லிராசமலர், ராணி றட்ணமலர், இராயகுலம், ரட்ணகுலம், காலஞ்சென்ற ரவீந்திரகுலம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ராதிகா, ரஞ்சிகா, றட்ணிகா, இராயக்கோன், றமேஸ்கோன், ராஜ்மோகன் ஆகியோரின் ஆசை மாமனாரும் சஞ்சே, திவ்யா, யென்சி, ரான்சி, கவின், றூபினி, ரோகினி, றதினி, கிறிசாந், பிரகாஸ், பேட்டி, ரொசானி, ரொனால்ட், றபேக்கா ஆகியோரின் அமிர்தம் போன்ற பேரனும் ரவிசாலினி, ரவிசங்கர், ரவிசாருகி ஆகியோரின் பெருமைமிக்க பெரியப்பாவும் ராஜி, யூட், சுபா, றொசி, றோஷான், றொபின் ஆகியோரின் சிறப்புமிக்க சித்தப்பாவும் வெண்டக்கோன், மரியநாயகம், தவமலர், ரோனா இமல்டா, றோஸ் ஆகியோரின் மாண்பு மிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருமதி வெண்டக்கோன்**
(சகோதரி)

**466/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(19-21-15-13) (22772)




உலகப் புகழ் பெற்ற L.G
தொலைக்காட்சிப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட



LG Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766




தமிழகப் பொலீஸாரின் ஊழல் மகாத்மியங்கள் உலகறிந்த விடயந்தான். புதிய செய்தி பொலீஸாரின் குடும்பங்களுக்கான உணவுப் பங்கீட்டு அட்டைகள் ரத்துச் செய்யப்பட்டதாகும். இவை இரண்டையும் இணைத்து நேற்றைய தினமலர் நாளிதழில் வெளியான கேலிச் சித்திரம்.

**********************

# சமைக்கத் தெரியாத கணவன்

போர்த்துக்கல் நாட்டில் விவாகரத்து நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் அங்கு 27 ஆயிரத்து 960 பேர் விவாகரத்துச் செய்துள்ளனர். அதற்கு முன்னைய ஆண்டைவிட இது 46.8 சதவீதம் அதிகம். கணவனை மனைவி விவாகரத்துச் செய்வதற்கு முக்கிய காரணம் கணவனுக்கு சரியாக சமைக்கத் தெரியவில்லை. அல்லது சமையலுக்கு மனைவியுடன் ஒத்துழைக்கவில்லை என்பது தான்.

மனைவி விவாகரத்து செய்து கொண்டபின், தனியாக இருக்கும் கணவன் மேலும் கஷ்டப்படாமல் இருக்க சமையல் செய்வது எப்படி, வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்வது எப்படி என்று கற்றுக் கொடுக்க அங்கு ஏராளமான சமையற் கலைப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றனவாம்.

# நாய்களை நீராட்டுவதில் சாதனை!

ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 12 மாணவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 848 நாய்களைக் குளிப்பாட்டி புதிய உலக சாதனை படைத்துள்ளனர்.

ஹொலண்ட் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் 715 நாய்களைக் குளிப்பாட்டி ஏற்கெனவே உலக சாதனை படைத்திருந்தனர். இப்போது ஆஸ்திரேலிய பல்கலைக்கழக மாணவர்கள் அந்த சாதனையை முறியடித்துள்ளனர்.

புதிய உலக சாதனை படைக்க உதவிய நாய்களின் உரிமையாளர்களுக்கு பல்கலைக்கழகத்தின் கால்நடை அறிவியல் மன்றத்தின் இயக்குநர் ஜென்னி சர்ச்சில் நன்றி தெரிவித்துள்ளார்.



***

# அக்கரைச் சீமையிலே...

தொகுப்பு : மதுமதி

# 6 ஆண்டுகள் மனைவியின் உடலை பாதுகாத்த அமெரிக்கர் கைது!

அமெரிக்காவில் உள்ள அரிசோனா மாநிலத்தில் 6ஆண்டுகளுக்கு முன் இறந்த தனது மனைவியின் உடலை பழைய குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாத்து வந்தார் எட்வின் ரவ்லெட் என்ற 75 வயது முதியவர்.

இறந்தபோன மனைவி மீண்டும் உயிர்பெறுவார் என்ற அவரது நம்பிக்கையே இதற்குக் காரணம்.

ரவ்லெட்டின் மகள் மூலம் கிடைத்த தகவலையடுத்து பொலீஸார் அவரது வீட்டுக்கு சென்றனர். வீட்டில் நாற்றமெடுக்கும் சூழ்நிலையில் 10 பூனைக்குட்டிகள் சுற்றிவந்தன. வீட்டின் பின்புறத்தில் மனைவியின் உடலோடு, இறந்து போன 10 பூனைக்குட்டிகளும் கீழே விழுந்து கிடந்த குளிர்சாதனப் பெட்டியில் உறைந்து கிடந்தன.

இதையடுத்து ரவ்லெட் கைதுசெய்யப்பட்டார். பூனைகளை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துவதாகத் தெரிவித்த ரவ்லெட், அறிவியல் உதவியால் தனது மனைவி ஒரு நாள் உயிர் பெற்று எழுவார் என்ற நம்பிக்கையில் மனைவியின் உடலை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாத்து வந்ததாகத் தெரிவித்தார். ஊனமுற்றவரான ரவ்லெட்டின் மனைவி மர்சியா ரவ்லெட், 1997 டிசெம்பர் 15 இல் மூச்சுத் திணறலால் உயிரிழந்திருந்தார்.

# 50 பேர் வசிக்கும் தீவில் முதல் குழந்தை பிறந்தது

பசுபிக் தீவுகளில் ஒன்றான பிட்கெய்னில் மக்கள் தொகை இப்போது 49 இலிருந்து 50 ஆக உயர்ந்துவிட்டது. மக்கள் தொகையை அரை சதத்துக்கு உயர்த்தி விட்ட புதிய வரவு எமிலி ரோஸி என்ற சிசு.

17ஆண்டுகளில் இங்கு முதலாவதாகப் பிறந்த குழந்தை என்ற பெருமைக்குச் சொந்தமாகியுள்ள இக்குழந்தையின் பெற்றோர் நதீன் கிறிஸ்டியன் -ரண்டால் ஆகியோராவார். தீவிலுள்ள மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குச் சற்று முன்னதாக குழந்தை பிறந்தது. தாயும், குழந்தையும் நலமாக உள்ளனர்.

இத்தகவலை கலிபோர்னியாவின் பசுபிக் யூனியன் கல்லூரியில் பிட்கெய்ன் தீவு ஆய்வு மையத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹெர்பெர்ட்.போர்டு தெரிவித்தார். பிட்கெய்ன் தீவில் 1930 களில் மக்கள் தொகை 233 ஆக இருந்ததாம். பின்னர் படிப்படியாகக் குறைந்து இப்போது பிறந்த சிசுவுடன் சேர்தது 50 பேர் ஆகியுள்ளது.


இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள கடியடொலா கிராமத்தில் இடம்பெறும் 'நாகபஞ்சமி' வழிபாடு பிரசித்தமானது. சமீபத்தில் இடம்பெற்ற அந்த விழாவில் நாகபாம்பை பெண்ணொருவர் வழிபடும் சிலிப்பூட்டும் காட்சி.....



# நேபாள அழகி

நேபாள அழகிப் போட்டி தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது. இதில் பிரீதி சுகோலா நேபாள அழகியாக வெற்றி பெற்று முடிசூட்டிக்கொண்டார். கூட்டத்தினைப் பார்த்து அவர் கை அசைத்த காட்சி. அடுத்து நடைபெற இருக்கும் உலக அழகி போட்டியில் (மிஸ் வேர்ல்டு) நேபாளத்தின் சார்பில் பிரீதி கலந்துகொள்வார்.






பலஸ்தீனப் போராளிகளால் இஸ்ரேலும், காஷ்மீர்ப் போராளிகளால் இந்தியாவும் அடிமேல் அடிவாங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவ்வேளை 'தினமணி' நாளிதழ் வெளியிட்ட கேலிச்சித்திரம்.

# 3 நூற்றாண்டுகளை கண்ட மூதாட்டி மரணம்!


தமிழகத்தில் உள்ள ராசிபுரம் அருகே மூன்று நூற்றாண்டுகளைக் கண்ட மூதாட்டி சமீபத்தில் காலமானார்.

வெண்ணந்தூரை அடுத்துள்ளது காணாம்பாளையம். இங்குள்ளவர் செல்லப்பகவுண்டர் (வயது 65). இவர் ஒரு விவசாயி. இவரது தாய் முத்தாயி அம்மாள். 1888ஆம் ஆண்டு பிறந்த இவருக்கு தற்போது வயது 115.

மூன்று நூற்றாண்டுகள் கண்ட முத்தாயி அம்மாள் கடந்த 5ஆம் திகதி திடீரென உயிரிழந்தார். அவரது கணவர் அத்தியப்பகவுண்டர். 1947 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். இவர்களுக்கு 2மகன்கள், 2மகள்கள். தற்போது செல்லப்பகவுண்டர், பெருமாயி அம்மாள் என்ற 63 வயது மகள், பேரன், பேத்திகள், கொள்ளுபேரன், கொள்ளுபேத்திகள் எனப்பல உறவுகள் இவருக்கு உண்டு.



அமெரிக்காவில் மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்டு விளைவிக்கப்பட்ட உணவுப்பயிர்களை டிராக்டர்கள் மூலம் அழிக்கிறார்கள். மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட விளை பொருள்களால் தமது உடல் நலத்துக்குக் கேடு விளையலாம் என்று அங்கு அதிகமக்கள் கருதத் தொடங்கியுள்ளதாலேயே இவ்வாறு இப் பயிர்கள் அழிக்கப்படுகின்றன.




# சீனாவில் இலவசமாகத் தந்தாலும் முத்தம் வாங்க ஆள் இல்லை!

இலவச மோகம் சீனாவில் இல்லை என்று தெரிகிறது. இலவசமாக இளம் பெண்கள் முத்தம் தந்தாலும் அதை வாங்க அங்கு ஆள் இல்லையாம்.

மத்திய சீனாவில் தெரு முனை ஒன்றில் இருந்த கடையில் புதிதாக அறிமுகமான பாக்கு வாங்கினால், 5பெண்களின் இலவசமுத்தம் பரிசாகக் கிடைக்கும் என்று சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதனால் கடையில் கூட்டம் அலைமோதும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது.

முத்தம் தர 5 பெண்கள் காத்திருந்தனர். ஆனால், வந்ததோ ஒரே ஒரு இளைஞர் மட்டுமே. நொந்து போன விளம்பர நிறுவனத்தார் பாக்கு விற்பனை மேம்பாட்டுக்கான இத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டனர். இச்செய்தி சௌத் சைனா மார்னிங் போஸ்ட் இதழில் வெளியாகியுள்ளது.

# புரிந்துணர்வு......

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளைப் பலவீனப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளில் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் யாருமே ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல.

விடுதலைப் புலிகளுடன் உள்ள முரண்பாட்டை நீக்கத் திட்டவட்டமான நடவடிக்கைகளை கட்சிக்குள் எடுப்பதன் மூலம்தான் புரிந்துணர்வு அடிப்படையில் எமது மக்களின் நலன்களுக்காக ஒன்றுசேர்ந்து செயற்படமுடியும். இதற்கான நடவடிக்கைகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுக்கவேண்டும்.

*கேள்வி:* கட்சிக்குள் நிலவும் உட்கட்சி மோதலுக்கு முடிவு எட்ட ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா?

*பதில்:* அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கட்சியின் நிலைமையை மாற்றி அமைப்பதற்கு கட்சியின் செயலாளர் நாயகத்துக்கு பாரிய பொறுப்பு உண்டு. அவர் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எனது கருத்து. கட்சித் தலைமைக்கும் கட்சியின் நிர்வாகத்துக்கும் இடையிலான கட்சி மோதல்களை தீர்ப்பதில் பல அபிப்பிராயங்கள் உள்ளன. விரைவில் இதற்கு தீர்வு கிட்டும் என நம்புகிறேன்.

தமிழ் மக்களின் நன்மைகருதி கூட்டணியை சரியான பாதையில் நடத்திச் செல்வதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கான வலுவும் பக்குவமும் கட்சிக்குள் உள்வாங்கப்படுகின்றது என்பதைக் கூறவிரும்புகிறேன்.

### பிரதமர் - ஜனாதிபதி முரண்பாடு

*கேள்வி:* பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நிலவும் முரண்பாடுகள் சமாதான முயற்சிகளை எந்த வகையில் பாதிக்கும் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:-* சென்ற தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கள மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். "விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் இந்த நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும்" என்று அந்த ஆணை மூலம் சிங்கள மக்கள் தமது விருப்பத்தை வெளியிட்டிருந்தனர்.

துரதிஷ்டவசமாக நாட்டின் வரலாற்றை நாம் எடுத்துக்கொண்டால், ஆளும்கட்சி எடுக்கும் முடிவுகளுக்கு எதிர்க்கட்சிகள் எதிராகவே நிற்கும் நிலை தொடர்ந்து வந்துள்ளது. அதைவிட தீவிரவாத, இனவாத போக்குகளைக் கடைப்பிடிப்பதும் பேரினவாத சக்திகள் ஒன்றிணைந்து தீர்வுக்கு எதிராகச் செயற்பட்டு அந்தத் தீர்வை முறியடிப்பதுதான் வரலாறு.

இன்றைய அரசமைப்பின்படி இரண்டு அதிகார மையங்கள் உள்ளன. ஒன்று நிர்வாக ஜனாதிபதி என்ற மையம். மற்றையது, சட்டங்களை இயற்றும் நாடாளுமன்ற மையம். நாடாளுமன்றத்தில் ஒரு கட்சியும் நிர்வாக ஜனாதிபதி பீடத்தில் மற்றொரு கட்சியும் இருககின்றன. அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நாட்டில் எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினையை சிங்கள தேசத்தில் கட்சிகள் ஒன்றுபட்டு நோக்கவில்லை. இந்த விடயத்தில் அவை போட்டி போடுகின்றன. இந்நிலை வருத்தத்துக்குரியதும், பேராபத்தை விளைவிக்கக்கூடியதுமாகும்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் சர்வதேச சமூகம் தமிழர் பிரச்சினைத் தீர்வில் அக்கறையாக இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை ரணிலும் சந்திரிகாவும் முறையாகப் பயன்படுத்தவேண்டும். விடுதலைப் புலிகள் இதை உணர்ந்துசெயற்படுகின்றார்கள்.

ஆனால், சந்திரிகா அன்றாடம் தெரிவித்துவரும் கருத்துக்கள், இநத ஆட்சியைக் கவிழ்த்துவிடும் நோக்கம் கொண்டவையாக உள்ளன.

இன்று விடுதலைப் புலிகள் அர்ப்பணிப்புடன் - மனசுத்தியுடன் - செயற்படுவதை ஜனாதிபதியின் நடவடிக்கைகள் முறியடிக்கும் நிலை காணப்படுவதையிட்டு அஞ்சுகின்றோம். பெரும்பான்மையான சிங்கள மக்களும் சந்திரிகாவின் இந்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வார்கள் என நான் நினைக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகா குமாரதுங்கவும் ஒன்றுபட்டு தீர்வு ஒன்றை எட்டுவதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும். அப்படி சந்திரிகா ஒன்றுபடாவிட்டால் ரணிலும் விடுதலைப் புலிகளும் பேசித் தீர்வைப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். அந்தத் தீர்வு மீது மக்கள் கணிப்பீடு நடத்தலாம்.

சந்திரிகா எதிர்ப்பாக இருந்தாலும் சிங்கள மக்கள் வழங்கிய ஆணைப்படி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பிரதமர் முன்வரவேண்டும்.

*கேள்வி:-* வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் இடம்பெறும் பேச்சுகளில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் முரண்பாடான கருத்துக்களை முன்வைப்பதாகத் தகவல்கள் வெளியாகின்றன. அது ஏன்?

*பதில்:-* முரண்பாடான - தன்னிச்சையான - கருத்துக்களைச் சிலர் தெரிவிப்பதால்தான் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. எதிர்காலத்தில் அவர்கள் தவிர்க்கப்பட்டேயாகவேண்டும் என்பதில் நாம் திட்டவட்டமாக உள்ளோம்.

கூட்டமைப்பினர் வெளிநாட்டு பிரதிநிதிகளைச் சந்திக்கும் போது, பக்குவம் அடைந்தவர்களாகச் செயற்படுகிறார்கள் என்பது மக்களின் அபிப்பிராயம். ஆனால், மக்களின் விருப்புக்கு மாறாக சிலர் தன்னிச்சையாக செயற்படுகின்றனர். தமிழ்க் கூட்டமைப்பில் குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியில் பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் தன்னிச்சையாகப் பேசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அண்மையில் ஜப்பான் சிறப்புத் தூதரைச் சந்தித்த சமயம் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன. முரண்பாடுகள் வராமல் சம்பந்தப்பட்டவர் தவிர்த்திருக்கவேண்டும். சர்வதேச பிரதிநிதிக்கு முன்னால் வாதாட்டம் செய்வது நல்லதல்ல.

அன்றைய பேச்சில் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் பின்நோக்கி நகர்த்தப்படவேண்டும் என்பதும் மக்கள் தமது சொந்த இடத்தில் குடியமர்த்தப்படவேண்டும் என்பதும் ஆராயப்பட்டது. அந்த விடயத்தில் ஆனையிறவை இழுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. உயர்பாதுகாப்பு வலயத்துடன் ஆனையிறவு சம்பந்தப்படவில்லை. ஆனையிறவுப் பிரச்சினை இப்போது எழுப்பத்தேவையில்லை. ஏனெனில் மக்கள் அங்கு குடியமர்ந்துள்ளனர்.

ஆனையிறவு விவகாரத்தை ஜப்பான் தூதர் முன் இழுத்துவிட்டதன் மூலம் அரசுக்கு ஒரு செய்தியைச் சொல்வதாகவே இருந்தது. பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படமுடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவம் வெளியேற, ஆனையிறவை காட்டியமை அரசுக்கு சந்தர்ப்பத்தைத் தீவிரவாதிகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கியிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

அந்தப் பெயரையே பாவித்திருக்கக்கூடாது. ஏனெனில் மிகப் பெரும் தியாகம் செய்யப்பட்டு இராணுவம் விரட்டியடிக்கப்பட்டு மீட்கப்பட்ட வரலாற்றைக் கொண்ட மண் அது.

இராணுவத்தை ஆக்கிரமிப்புப் படை என நாம் கருதும்போது, அவர்களுககு சந்தர்ப்பம் அளிக்கும் கருத்து எதையும் நாம் கூறக்கூடாது.

நூற்றுக்கு நூறுவீதம் சிங்கள இராணுவம், அரசியல் நோக்கம் கொண்ட இராணுவம், பேரினவாத இலக்குகளைக் கொண்ட இராணுவம் எமது மண்ணில் இருந்து வெளியேற வேண்டும் என்பதுதான் எமது இலக்கு. அதுதான் தமிழ் மக்களின் விடுதலையின் இலக்கு. அதை இலக்காக வைத்துப் பேசவேண்டுமே தவிர, அவர்களுக்கு எதைக் கொடுக்கவேண்டும் என்று பேசத் தேவையில்லை. அதுவும் ஆனையிறவைக் கொடுக்கவேண்டும் என்று கருத்துக் கூறக்கூடாது.

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் ஆனையிறவைப் பற்றிப் பேசியது கொள்கைத் தவறு. தனி மனித பேச்சு எமது இலட்சியத்தைப் பாதிக்கும் எனக் கூறவிரும்புகிறேன்.

எமது மூத்த தலைவர்கள் உருவாக்கிய தமிழ்த் தேசியத்தின் கொள்கைகளை அறிந்துகொள்ளாதவர்கள் தமிழர் பிரச்சினையை அணுகுவதுதான் இன்றைய நிலைக்குக் காரணம்.


ஆனையிறவு முகாம் பற்றிக் கருத்துக் கூறி பாதுகாப்பு வலயம் தொடர்ந்து இருக்கட்டும் என மறைமுகமாக ஆனந்தசங்கரி கூறுவது போல் அது உள்ளது. இது ஒரு, பெரும் பாரதூரமான அடிப்படை குளறுபடி. தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக்கே முரணான கருத்து இது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டுமென்று சொல்வதற்கு என்ன காரணம் கொண்டும் ஆனையிறவைக் கொடுக்கவேண்டி வருமே என்று அடையாளம் காட்டியிருக்கக்கூடாது. பேரினவாதச் சக்திகளுக்கு ஊக்கம் அளிப்பதாகவே இது இருக்கும். ★

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 - 04 - 1933



மறைவு 22 - 08 - 2003

வல்வெட்டித்துறை, காட்டுவளவைச் சேர்ந்த

## அமரர் அப்பாத்துரை யோகீஸ்வரர்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உள்ளூராட்சித் திணைக்களம்)

தொண்டமனாறு விநாயகர் சனசமூக நிலையத்தின் போஷகரும், தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக T.U.S.C. போஷகரும், விநாயகர் மின் அமைப்பு பொறுப்பாளரும், தொண்டமனாறு பிள்ளையார் தேவஸ்தான திருப்பணிச் சபை நிர்வாகியுமான

**திரு. கண்ணன் அவர்களின்**

அன்புத் தந்தையார் அ. யோகீஸ்வரர் அவர்களின் அந்தியேட்டி நாளை (21. 09. 2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல செல்வச்சந்நிதி முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் ஐயனார்கலட்டி, பருத்தித்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நாளை காலை 7.00 மணிக்கு நடைபெறும்.

பிள்ளையார் கோயிலடி,
தொண்டமனாறு.
(22790) (24-15-19)

விநாயகர் மின் அமைப்பு இளைஞர்கள்,
தொண்டமனாறு விநாயகர் ச.ச. நிலையம்,
தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்
(T.U.S.C.).

---

# தேவை

மிக்சர் கம்பனிக்கு வேலையாள்கள் (பெண் பிள்ளைகள்) தேவை.

தொடர்பு:
**A.K. பாபா மிக்சர்**
77, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(22786) (24-15-19)

---

# திலீபன் நினைவூர்தி இன்று கோப்பாயில்

வலி.வடக்கு,செப்.20

தியாகி திலீபனின் 16 ஆவது நினைவு தினத்தின் 6 ஆம் நாளான இன்று திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய நினைவூர்தி கோப்பாய் பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியில் வைத்து கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் தெல்லிப்பழை, உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களிடம் இருந்து ஊர்தியைப் பொறுப்பேற்பர்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், கோண்டாவில் கிழக்குச் சந்தி, இருபாலை, கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி ஆகிய இடங்களை ஊர்தி சென்றடையும்.

இரவு 7 மணியளவில் அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் பொதுக் கூட்டம் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிப் பகுதியில் இந்த ஊர்திப் பவனி இடம்பெறும். (எ-86)

---


**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின்**
**60 ஆம் ஆண்டு மணிவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்**

கல்விச் சேவையில் அகவை அறுபது அடையும் கல்லூரித் தாய் மேலும் புகழடைய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பாக மனமார வாழ்த்துகிறேன்.

செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(22793) (24-12-19)

---

# கண்ணீர் அஞ்சலி



ஊரெழு மேற்கைச் சேர்ந்த

**உயர்திரு. சுப்பையா சபாரத்தினம்**

அவர்கள் 11. 09. 2003 வியாழக்கிழமை அமெரிக்காவில் இயற்கை எய்தியமையையிட்டு மனம் வருந்துகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஊரெழு வீரகத்தி விநாயகரின் பாதங்களைப் பணிகின்றோம். பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

82/02, குறுக்கு வீதி, நல்லூர்.
(24-15-12) (சி-30278)

பிரிவால் துயருறும்:
அ.தனபாலசிங்கம் குடும்பம்.

---

# நல்லூர் வணிகர் கழகம்

**1) பாதுகாப்பு ஊழியர்கள் தேவை**

நல்லூர் வணிகர் கழகத்தின் கல்வியங்காடு, திருநெல்வேலி வர்த்தக நிலையங்களுக்கு இரவுப் பாதுகாப்பு ஊழியர்கள் உடனடியாகத் தேவை.

ஆரம்பச் சம்பளம் மாதமொன்றுக்கு 3,500/- (மூவாயிரத்து ஐந்நூறு)

நேரில் சமுகமளிக்கவேண்டிய விவரம்:

காலம்: 22.09.2003

நேரம்: மு.ப. ப.நே. 9.00 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிவரை

இடம்: நல்லூர் வணிகர் கழகப் பொருளாளர், விநாயகர் களஞ்சியம் கல்வியங்காட்டுச் சந்தி, கல்வியங்காடு

**2) முக்கிய அறிவித்தல்**

நல்லூர் வணிகர் கழக வர்த்தகர்களுக்கு,

அன்புடையீர்!

மருந்தகம், உணவகம், மிதிவண்டி திருத்தகம், தொலைத்தொடர்பகம், அரைக்கும் ஆலைகள் தவிர்ந்த ஏனைய பல்பொருள் வர்த்தக நிலையங்கள் யாவும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் முழுநாளும் முழுமையாகப் பூட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (22791) (24-19-15)

கிருஸ்ணானந்தமூர்த்தி
தலைவர்,
நல்லூர் வணிகர் கழகம்.

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 - 04 - 1933



மறைவு 22 - 08 - 2003

## அமரர் அப்பாத்துரை யோகீஸ்வரர்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், உள்ளூராட்சித் திணைக்களம்)

வல்வெட்டித்துறை, காட்டுவளவைச் சேர்ந்த அமரர் அப்பாத்துரை யோகீஸ்வரர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு கப்பர்மடம் அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிரியைகள் முற்பகல் 11 மணிக்கு 59, ஐயனார், கலட்டியிலுள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

59, ஐயனார் கலட்டி,
பருத்தித்துறை. (22788) (24-19-15)

- குடும்பத்தினர்.

# பொலித்தீனுக்குப் பதிலீடான பொருள்களின் கண்காட்சி

## அடுத்த மாத இறுதியில் பனை அபிவிருத்திச் சபை நடத்தும்

யாழ்ப்பாணம்,செப்.20

பொலித்தீன் பாவனைப் பொருள்களுக்குப் பதிலீட்டுப் பொருள்களைப் பாவிப்பது குறித்த விசேட கண்காட்சி ஒன்றை பனை அபிவிருத்திச் சபை ஒழுங்குசெய்துள்ளதாக சபையின் தலைவர் பொ.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை அபிவிருத்திச் சபையின் 25ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பனை அபிவிருத்திச் சபை மாபெரும் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இக்கண்காட்சி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதிமுதல் 23ஆம் திகதிவரை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இக்கண்காட்சி, பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் சார்ந்து அமையும்.

பொலித்தீன் பாவனையிலிருந்து விலகி அதற்கான பனை உற்பத்தி சார்ந்த பதிலீட்டுப் பொருள்களைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் -

பொலித்தீன் பாவனையால் ஏற்படும் தீமைகளை விளக்கி பொலித்தீன் பாவனையை நிறுத்த வேண்டுமென்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் -

பிரத்தியேகமான ஒரு பகுதி கண்காட்சியில் அமைக்கப்படவுள்ளது.

மூன்று நாள்கள் இடம்பெறும் இக்கண்காட்சி மற்றும் வெள்ளி விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துசமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் கலந்துகொள்வார்.

இவ்விழாவில் பனை அபிவிருத்திச் சபையில் நீண்டகாலம் கடமையாற்றுகின்ற 5 பணியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வெள்ளிவிழாவை முன்னிட்டு பனை அபிவிருத்திச் சபையில் கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்வது தொடர்பாக பயிற்சி பெறுவோர் மற்றும் பயிற்சியளிப்போரிடையே போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை -

பனை வள ஆராய்ச்சி தொடர்பான மாநாடொன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொண்டு கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர் - இப்படி பொ.சிவபாதம் தெரிவித்தார். (ம-9)

## போக்குவரத்துச் சபையின்

# தலைமையகம், 9 பிராந்திய சபைகளை முழுமையாக மூடுவதற்குத் தீர்மானம்

## நஷ்டத்தில் இயங்குவதே காரணமாம்!

கொழும்பு,செப்.20

பெரும் நஷ்டத்தில் இயங்கிவரும் மத்திய போக்குவரத்துச் சபையின் நாரஹென்பிட்டியிலுள்ள தலைமையகத்தையும் ஒன்பது பிராந்திய சபைகளையும் முற்றாக மூடிவிடுவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும், மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் சாரதிகள் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை மீள அமைப்பது எனவும் அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் அடங்கிய கடிதம் திறைசேரிச் செயலாளரால் போக்குவரத்து நெடுஞ்சாலை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வடக்கு பிராந்திய போக்குவரத்துச் சபை, மத்திய பிராந்திய போ.வ.சபை, வடமேற்குப் பிராந்திய போ.வ.சபை, தென்பிராந்திய போ.வ.சபை, ஊவா பிராந்திய போ.வ.சபை, வடமத்திய பிராந்திய போ.வ.சபை, கிழக்குப் பிராந்திய போ.வ.சபை, சப்பிரகமுவ பிராந்திய போ.வ.சபை, கொழும்பு தெற்கு பிராந்திய போ.வ.சபை ஆகியனவே முற்றாக மூடவுள்ள சபைகளாகும்.

கொழும்பு புறக்கோட்டையில் உள்ள மத்திய பேருந்து நிலையத்தை ஒரு நிறுவனமாக மாற்றி போக்குவரத்து அமைச்சின் கீழ் அந்த நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவது எனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகவும் -

மூடப்படவுள்ள போக்குவரத்துச் சபையின் தலைமையகம் மற்றும் 9 பிராந்திய சபைகளில் பணியாறும் சுமார் 3 ஆயிரம் ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் - கூறப்பட்டது.

சேவையில் ஈடுபடும் பேருந்துக்கள் பயணம் செய்யும் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் மூன்று ரூபா நஷ்டம் ஏற்படுத்துவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (எ)

# கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை மீண்டும் அடுத்த வாரம்

## பாதை சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்

கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை அடுத்தவாரம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என ரயில்வே திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கல்குடாப் பகுதியில் சில சிலிப்பர் கட்டைகளும், இரண்டு தண்டவாளங்களும் இனம்தெரியாதோரால் கழற்றப்பட்டிருந்ததை அடுத்து ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

இதனைச் சீர்செய்யும் பணிகள் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. இப்பணிகள் பூர்த்தி அடைந்ததும் அடுத்த வார இறுதிக்குள் மீண்டும் கொழும்பு - மட்டக்களப்புக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

1996 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்ட கொழும்பு - மட்டக்களப்புக்கான ரயில்சேவை ஏப்ரல் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அந்த ரயில் தடம்புரண்டதைபடுத்து ஏப்ரல் 16 ஆம் திகதி சேவை இடைநிறுத்தப்பட்டது.

மீண்டும் பாதைகள் செப்பனிடப்பட்டு 1.7.2003 முதல் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இனம்தெரியாதோர் சிலிப்பர் கட்டைகளைக் கழற்றி சேதமாக்கியதால் 6.7.2003 அன்று ரயில் சேவை மீண்டும் இடைநிறுத்தப்பட்டது. வாழைச்சேனை வரையே ரயில் சேவை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மணல் விநியோக நடைமுறை அறிவிப்பு

வடமராட்சி, செப்.20

வடமராட்சி கிழக்கு மணல்காட்டில் அள்ளப்படும் மணல், வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத்தால் வாரந்தோறும் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை புலோலி லக்சாபுரம் வீதியில் உள்ள உபய கதிர்காமத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.

மணல்காட்டுப்பகுதியில் மணல் அள்ளுவதற்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் அனுமதியளித்ததையடுத்து மணல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மணல் பெறுவோர் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத்தில் இலவசமாக விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்து பருத்தித்துறை தும்பளையில் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பித்து அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளவேண்டும்.

சண்டிலிப்பாய், சங்கானை, பிரதேச செயலர் பிரிவுகளுக்கு திங்கட்கிழமையும், தெல்லிப்பளை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு செவ்வாய்க்கிழமையும் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு புதன்கிழமையும், கரவெட்டி, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு வியாழக்கிழமையும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்கு வெள்ளிக்கிழமையும் மணல் பெறுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

திங்கட்கிழமைகளில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவினரும், செவ்வாய்க்கிழமைகளில் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவினரும் புதன்கிழமைகளில் தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவினரும் வியாழக்கிழமைகளில் யாழ்ப்பாணம், நல்லூர், பிரதேச செயலர் பிரிவினரும், வெள்ளிக்கிழமைகளில் கரவெட்டி, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவினரும் அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்து மணலைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை - அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், ஞாயிறு தவிர்ந்த எல்லா நாள்களிலும் மணலைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)

# மக்கள் முகம்



சாவகச்சேரி, சரசாலை தெற்கைச் சேர்ந்த நாகன் ஏரம்பு சமாதான நீதிவானாக நீதியமைச்சினால் நியமனம் செய்யப்பட்டு, அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவனும், பிரபல சோதிடருமான இவர் சமூக சேவையாளருமாவார். (எ-31)

* * *



வலி.வடக்கு பிரதேச சபை அலுவலகத்தில் எழுதுநராகக் கடமையாற்றிய செல்வி சுபாஜினி கந்தையா அகில இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி இலங்கை நிர்வாக சேவை தரம் II வகுப்பு II இற்கு 01.09.2003 முதல் உள்ளீர்க்கப்பட்டுள்ளார். தற்போது நிர்வாக சேவை முகாமைத்துவ பயிற்சிக்காக பொது நிர்வாக உள்நாட்டு மறுசீரமைப்பு அமைப்பின் முகாமைத்துவ பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்காக இவர் கொழும்புக்குச் சென்றுள்ளார். (ஐ-150)

* * *



சரசாலை வடக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நிலஅளவை அத்தியட்சகர் தம்பிஐயா சுபநாயகம் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற தலைவராகவும் தென்மராட்சியில் பல்வேறு பொது அமைப்புகளில் முக்கியமான பதவிகளை வகித்த இவர், ஒரு சமூக சேவையாளருமாவார். (எ-117)

* * *




சித்தன்கேணியைச் சேர்ந்த டாக்டர் சி.சதாசிவம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக பணிபுரிந்து இளைப்பாறிய இவர், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். லயன்ஸ் கழக வலையத் தலைவராகவும் இவர் சேவையாற்றி வருகின்றார். (எ-135)

* * *



பண்டத்தரிப்பைச் சேர்ந்த அருள்பிரகாசம் அருள்லீலிநாயகம் யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில், அண்மையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். புனித அந்தோனியார் ஆலய நிர்வாக சபை உறுப்பினரான இவர் தனியார் கல்வி நிலைய ஆங்கில ஆசிரியருமாவார்.(எ-135)

* * *



வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில் சாலை முகாமையாளராகக் கடமையாற்றிய செ.நல்லதம்பி போக்குவரத்துச் சபையில் 34 வருட சேவையினைப் பூர்த்தி செய்து கடந்த 6 ஆம் திகதி இளைப்பாறியுள்ளார்.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், தனது கல்வியை யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் மேற்கொண்டார். பட்டதாரியான இவர், 1969 இல் திருகோணமலைச் சாலையில் சாலைப் பரிசோதகராக நியமனம்பெற்று, தொடர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய சாலைகளில் உதவி முகாமையாளராகவும் வ.பி.போ சபையின் தலைமை அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றினார். (எ)

* * *



சாவகச்சேரி, சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கணபதிப்பிள்ளை சிவசங்கரநாதன், யாழ். மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இந்து இளைஞர் பேரவை உறுப்பினராகவும், சரசாலை இந்து இளைஞர் பேரவை ஆலோசகராகவும், சரசாலை தெற்கு கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும், பணியாற்றும் இவர் சமய சொற்பொழிவாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.(எ-117)

* * *



பண்டத்தரிப்பைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் எட்வேர்ட் பங்கிராஸ், யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் 23.07.2003 அன்று சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், பண்டத்தரிப்பு சென்.ஜேம்ஸ் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரும், சென்.ஜேம்ஸ் ஐக்கிய நாணய சங்கத் தலைவரும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொருளாளரும், பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஓய்வுபெற்ற பிரதம லிகிதருமாவார். மற்றும் பல பொது நிறுவனங்களில் நிர்வாக உறுப்பினராகவும் இவர் இருந்து வருகிறார். (ம-135)

# கால்நடை வளர்ப்பில் மக்களின் ஆர்வம் குறைந்து வருகின்றது

## குடாநாட்டின் அண்மைய கணக்கெடுப்பிலிருந்து தகவல்

யாழ்ப்பாணம்,செப்.20

குடாநாட்டு மக்கள் மத்தியில் கால்நடை வளர்ப்பில் நாட்டம் வெகுவாகக் குறைந்துவருகிறது. இதனால் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து செல்கிறது. கோழி வளர்ப்பில் மட்டுமே சற்று அதிகரிப்பு தெரிகிறது.

யாழ். செயலகத்தில் இயங்கும் புள்ளி விவரக்கிளையின் அண்மைக்கால கணக்கெடுப்புப்படி இத்தகவல் தெரியவந்துள்ளது.

1995 ஆம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் காணப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கையின் அளவு இடப்பெயர்வின் பின்னர் மிகவும் குறைவடைந்தது.

இதற்கு 1995 ஆம் ஆண்டின் பின் குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தங்கள் இடப்பெயர்வுகள் முதலானவை காரணமாக இருந்தாலும் மக்கள் மத்தியில் கால்நடை வளர்ப்பில் ஏற்பட்டுள்ள நாட்டமின்மையே பிரதான காரணமென தெரிவிக்கப்படுகிறது.

கால்நடைகளின் வளர்ப்பு விகிதம் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக குறைந்துகொண்டே செல்கின்றது.

1995 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 80 மாடுகளும், 81 ஆயிரத்து அறுநூற்று 52 ஆடுகளும், இரண்டு லட்சத்து 33 ஆயிரத்து நானூற்று 99 கோழிகளும் வளர்க்கப்பட்டதாக பதிவுசெய்யப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டு 65 ஆயிரத்து தொளாயிரத்து 55 மாடுகளும் 38 ஆயிரத்து ஐந்நூற்று எழுபது ஆடுகளும், ஒரு லட்சத்து 12 ஆயிரத்து தொளாயிரத்து 89 கோழிகளும் வளர்க்கப்பட்டுள்ளதாகப் பதியப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டு 64 ஆயிரத்து இருபத்தைந்து மாடுகளும், 33 ஆயிரத்து 151 ஆடுகளும், இரண்டு லட்சத்து 57 ஆயிரத்து 35 கோழிகளும் வளர்க்கப்பட்டு வருவதாகப் பதியப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட தகவல்களைக் கொண்டு கோழி வளர்ப்பைத் தவிர ஏனைய கால்நடை வளர்ப்பு விகிதம் குறைவடைந்து செல்வதையே காணமுடிகின்றது. (ம-12)

## லயன்ஸ் பிரதிநிதிகள் இலங்கை வருவர்

தென்மராட்சி,செப்.20

சர்வதேச லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டாக்டர் ஜா சுப் லீயும் சீமாட்டி கைங் ஜாவும் அடுத்த மாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் இவ்வருடம் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நலனோம்புத் திட்டங்களை இவர்கள் பார்வையிடுவர் எனக் கூறப்பட்டது. (எ-117)

# இலங்கை – இங்கிலாந்து கிரிக்கெட் போட்டிகள்: ஒளிபரப்பு உரிமை விவகாரம் சூடுபிடிக்கிறது!

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாவதற்கு இன்னும் 8 வாரங்களே உள்ள நிலையில், இப்போட்டிகளை ஒளிபரப்பும் உரிமை தொடர்பான மோதல் சூடுபிடித்துள்ளது.

இப்போட்டிகளை ஒளிபரப்பும் உரிமை விடயத்தில் 'தாஜ்' தொலைக்காட்சி சேவை. 'வேர்ல்ட் ஸ்போர்ட்ஸ் குரூப் - நிம்பஸ்' ஆகிய இரு நிறுவனங்களுக்கும் வெவ்வேறு கிரிக்கெட் நிர்வாகிகளால் விற்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்விரு நிறுவனங்கள் 'ஸ்ரீ லங்கா கிரிக்கெட்' ஆகியவற்றுக்கிடையே முக்கோண மோதலொன்று நடைபெறுகிறது.

இலங்கையில் நடைபெறும் போட்டிகளை வெளிநாடுகளில் ஒளிபரப்பும் உரிமை தொடர்பாக 2001ஆம் ஆண்டு நிம்பஸ் நிறுவனத்திற்கு ஸ்ரீ லங்கா கிரிக்கெட் (அப்போதைய இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை) வழங்கியது. திலங்க சுமதிபால சபைத் தலைவராக இருந்த போது மூன்று வருடகாலத்துக்கான இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2001ஆம் ஆண்டு மார்ச் மாதம், திலங்க சுமதிபால தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பின் பதவியேற்ற இடைக்கால நிர்வாகக் குழுவினர், நிம்பஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு, தாஜ் நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தம் செய்தனர்.

இத்தீர்மானத்திற்கு எதிராக நிம்பஸ் நிறுவனம் வழக்குத் தொடுத்தது. இதனால், நிம்பஸ் நிறுவனத்திற்கு கிரிக்கெட் சபை 1.1 கோடி டொலர் (சுமார் 110 கோடி ரூபா) நஷ்ட ஈடு வழங்குமாறு சிங்கப்பூர் நீதிமன்றமொன்று உத்தரவிட்டது.

கடந்த ஜூன் மாதம் மீண்டும் கிரிக்கெட் சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திலங்க சுமதிபால, மேற்படி நஷ்ட ஈட்டை குறைப்பதற்கு நிம்பஸ் நிறுவனத்துடன் பேச்சு நடத்தி வருகிறார். அதேவேளை போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையை மீண்டும் நிம்பஸ் நிறுவனத்துக்கே வழங்கவும் தீர்மானித்துள்ளார்.

ஒளிபரப்பு உரிமை தாஜ் நிறுவனத்துக்கு தவறாக வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு (இடைக்கால நிர்வாகக் குழுவினர்) கிரிக்கெட் சபையின் சார்பில் இதைச் செய்யும் அதிகாரமில்லை. அதனால் இந்த ஒப்பந்தம் செல்லுபடியானதல்ல.

இவ்விவகாரம் நீதிமன்றத்திற்குச் செல்லும் முன்னரே கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கலைக்கப்பட்டு விட்டது. நாளாந்த பணிகளை கவனிப்பதற்காகவே அமைச்சர் அவர்களை நியமித்தார்.

- இவ்வாறு திலங்க சுமதிபால கூறுகிறார்.

எனினும் தம்மை இனங்காட்ட விரும்பாத, தாஜ் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் "எமது நிறுவனத்துக்கும் கிரிக்கெட் சபைக்குமான ஒப்பந்தம் தற்போதும் செல்லுபடியாகத்தக்கதே" என செய்தி நிறுவனமொன்றிடம் கூறியுள்ளார்.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

# 17000 ஓட்டங்களை கடந்தார் டெண்டுல்கர்

முதல்தரப் போட்டிகளில் 17 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தவர்கள் பட்டியலில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரும் சேர்ந்துள்ளார்.

மும்பை - ரெஸ்ட் ஒவ் இந்தியா அணிகள் மோதும் இராணி கிண்ண கிரிக்கெட் போட்டி சென்னையில் நடக்கிறது. இந்தப் போட்டியில் டெண்டுல்கர் 50ஓட்டங்கள் எடுத்தபோது முதல்தரக் கிரிக்கெட்டில் 17 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர்கள் வரிசையில் சேர்ந்தார்.

இந்திய வீரர்களில் கவாஸ்கர், ஹசாரே, விஸ்வநாத், வெங்சர்க்கார் ஆகியோர் மட்டுமே இதற்கு முன்பாக 17 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளனர்.

348 போட்டிகளில் கவாஸ்கர் 25 ஆயிரத்து 834 ஓட்டங்கள் எடுத்து பட்டியலில் முதலிடத்தை தக்கவைத்துள்ளார். இதில் 81 சதம், 105 அரை சதம் அடங்கும். டெண்டுல்கர் 198 போட்டிகளில் 17ஆயிரத்து 44ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 55 சதம் மற்றும் 79அரைச் சதங்கள் அடங்கும். இந்த 5வீரர்களில் அதிக ஓட்ட சராசரி சாதனையை டெண்டுல்கர் தக்கவைத்துள்ளார்.

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.20

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கானை கல்விக் கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினரா வலிகாமம் கல்வி வலய நிதி உதவியாளர் ஆர்.தவராசா கலந்துகொள்ளவுள்ளார்.

இன்றைய ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**14 வயதுப் பிரிவு**

★ அராலி கிழக்கு அமெரிக்கன் தமிழ் கலவன் பாடசாலை எதிர் அராலி இந்துக்கல்லூரி.

**16 வயதுப் பிரிவு**

★ வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் அராலி இந்துக்கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

(ம-5-86-29)

# மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்டம் இன்று அமெரிக்காவில் ஆரம்பமாகிறது

மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று அமெரிக்காவில் ஆரம்பமாகவுள்ளது.

12 நாடுகள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன. இவற்றில் 4 நாடுகள் ஆசியாவைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனத்தினால் ('பீ'பா) 4ஆவது தடவையாக இச்சுற்றுப் போட்டி நடத்தப்படுகிறது.

முதலாவது மகளிர் உலகக்கிண்ணப் போட்டி 1991ஆம் ஆண்டு நவம்பர் 16 முதல் 30ஆம் திகதி வரை சீனாவில் நடைபெற்றது. 12 நாடுகள் அத்தொடரில் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் நோர்வே அணியை 2-0 கோல் விகிதத்தில் தோற்கடித்து அமெரிக்கா அணி சாம்பியனாகியது.

இரண்டாவது மகளிர் உலகக் கிண்ணத் தொடர் 1995ஆம் ஆண்டு சுவிடனில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் சுவடன் அணியை நோர்வே அணி 8-0 கோல்களால் வென்றது.

மூன்றாவது உலகக்கிண்ணத் தொடர் 1999ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்றது. அத்தொடரின் இறுதிப்போட்டியில் சீன அணியை பெனால்ட்டி முறையில் 5-4 விகிதத்தில் வென்று இரண்டாவது தடவையாக சாம்பியனாகியது.

4ஆவது உலகக் கிண்ணத் தொடர் சீனாவில் நடைபெறவிருந்தது. எனினும், சார்ஸ் நோய் அச்சுறுத்தல் காரணமாக இத்தொடர் அமெரிக்காவுக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை தகுதிகாண் போட்டிகளில் 98 நாடுகள் பங்குபற்றின. இவற்றிலிருந்து 12 அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

முதலாவது போட்டியில் நோர்வே, பிரான்ஸ் அணிகள் மோதவுள்ளன. இலங்கை நேரப்படி இன்று இரவு 11 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகவுள்ளது.

# பரபரப்பான போட்டியில் பாக். அணி வெற்றி

பங்களாதேஷுடனான நான்காவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ராவல்பிண்டி நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 8விக்கெட் இழப்பிற்கு 222 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 34ஓவர்களில் 3விக்கெட் இழப்பிற்கு 135 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. எனினும், யூஸுப் யுஹானா ஆட்டமிழக்காமல் 94 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்றார்.

49 ஆவது ஓவரில் மோர்ட்டஸா 8 ஓட்டங்களைக் கொடுத்தார். பைஸ்பா வீசிய இறுதி ஓவரில் பாகிஸ்தானுக்கு 7ஓட்டங்கள் தேவைப்பட்டன.

யுஹானா முதல் 3 பந்து வீச்சுகளில் 5ஓட்டங்களைப் பெற்றார். அதன்பின் அப்துல்ரஸாக் ஓட்டமொன்றைப் பெற்று, ஓட்ட எண்ணிக்கையைச் சமப்படுத்தினர். 5ஆவது பந்துவீச்சில் யுஹானா பௌண்டரி ஒன்றை அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். 131 பந்துவீச்சுகளில் 94 ஓட்டங்களைப் பெற்ற அவர், சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

இத்தொடரில் பாக். அணி 4-0 விகிதத்தில் முன்னணியில் உள்ளது. இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். மாவட்ட பாடசாலை 14 வயது அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டம் இன்று சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலனும் சிறப்பு விருந்தினராக வர்த்தக வங்கி யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.ரவீந்திராவும் கலந்துகொள்வர். (ம-3)


**தேவை**

யா/ மகாஜனக் கல்லூரியில்
1. ஆங்கிலம். 2. கணனி
கற்பிப்பதற்கு ஆசிரியரும்
ஆங்கில, தமிழ் தட்டச்சுத் தெரிந்த இலிகிதரும் தேவை.
தகுதியானோர் எதிர்வரும் 27.09.2003ஆம் திகதிக்கு
முன்னர் சுயவிவரம் உள்ளடங்கிய விண்ணப்பத்துடன்
அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தெல்லிப்பழை. (22799) (31-11-17) - பொ.சுந்தரலிங்கம். அதிபர்.



**சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் சிறுவர் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா**

| | | |
|---|---|---|
| ❖ காலம் | :- | 2003 ஒக்ரோபர் 01 |
| ❖ செயற்படு இடம் | :- | (யாழ்ப்பாணம் / முல்லைத்தீவு / கிளிநொச்சி / மன்னார் / வவுனியா மாவட்டங்கள் உள்ளடங்கலாக) ➥ கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானம், (மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்கள் உள்ளடங்கலாக) ➥ கல்லடி சிவானந்தா வித்தியாலய மைதானம் |

*விளையாட்டு நிகழ்வுகள்*

*குழு விளையாட்டு*

1. கரப்பந்து - ஆண்கள் (17 வயதுக்குட்பட்டோர்)
2. வலைப்பந்து - பெண்கள் (17 வயதுக்குட்பட்டோர்)
3. உடற்பயிற்சி கண்காட்சி (இசையும், அசைவும்) - (2 நிமிடம்

❋ மேற்படி செய்யப்பெறும் முதல் மூன்று நிலைக்குரிய அணிகளுக்கு சிறப்பு பரிசில்களும், கலந்துகொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பெறும். தங்களது இல்லத்தின் பிள்ளைகளின் ஆற்றலை வெளிக்கொண்டுவரும் முகமாகவும் சர்வதேச சிறுவர் தினத்தன்று எமது பிரதேசத்தில் சிறுவர்களைப் பாதுகாத்து, மதிக்கப்படும் நிலையை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் நிகழ்வாகவும் அமைய தங்களது இல்ல சிறுவர்களின் விளையாட்டு மூலம் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
தங்கள் இல்லம் பங்கு கொள்ள விரும்பும் குழு விளையாட்டு விவரங்களை இல்ல நிர்வாக இயக்குநர் உறுதிப்படுத்தி அனுப்புதல்வேண்டும்.

❖ விண்ணப்ப முடிவு திகதி - 22.09.2003

அனுப்ப வேண்டிய முகவரி:

நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர்,
தலைமைச் செயலகம்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
கண்டி வீதி, கிளிநொச்சி.

மேலதிக விவரங்களுக்கு - 021-222-3947.

(22800) (31-11-17)



நாடக இரசிகர்களை மகிழ்வூட்ட
மீண்டும் மேடையேறுகிறாள்

**"ஆளப்பிறந்தவள்"**

[கற்பனை வரலாற்று நாடகம்]

இடம் :- பாஷையூர் மைதானம்
காலம் :- இன்று (20-09-2003)
நேரம் :- இரவு 8மணி
பிரவேசம் :- இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(22797)(11-17-31)



**லொறி உரிமையாளர் கவனத்திற்கு**

பருத்தித்துறை இறங்குதுறையில் இன்று
(20.09.2003) சனிக்கிழமை கப்பலிலிருந்து
பொருள்கள் இறக்கப்படும்.
பொருள்களை ஏற்றச் சமுகமளிக்கவும்.

**ஈஸ்வரபகவான் & கம்பனி**
91, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
T.P. No.: 021-222 2350.

(C-30281) (11-17-21)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கொழும்புத்துறையைச் சேர்ந்தவரான
**உயர்திரு. செல்லையா சண்முகசுந்தரம்**

அவர்கள் கடந்த 15.09.2003 அன்று யாழ். நீதிமன்ற நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கொழும்புத்துறை கடற்றொழில் சங்க முன்னாள் தலைவராகவும் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய பஞ்சகர்த்தராகவும் சனசமூக நிலைய முன்னாள் தனாதிகாரியாகவும் கூட்டுறவுச் சங்க பொதுச்சபை உறுப்பினராகவும் இருந்து சிறந்த சமூக சேவையாளராகத் திகழ்கின்றமையால் இவரது சேவைகள் மேன்மேலும் சிறந்தோங்க வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கைதடி நாவற்குழி, தெற்கு.

(22796) (31-11-17)

- ஸ்ரீ கதிர்காம முருகன், பஜனைக் குழுவினர்.

## சுகாதார சேவை ஊழியர் போராட்டம் :

# தென்பகுதியில் உள்ள மாற்று ஏற்பாடு இங்கில்லாததால் நோயாளர் அவதி!

யாழ்ப்பாணம்,செப்.20

சுகாதார சேவை ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தத்தால் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றும் நோயாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகினர். தென்பகுதி வைத்தியசாலைகளில் மாற்று ஏற்பாடாகப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் அந்த வைத்தியசாலைகளில் பணிகள் ஓரளவு மேம்பட்டுள்ளன. ஆனால், யாழ். மருத்துவமனையில் மாற்று ஏற்பாடுகளுக்கு வாய்ப்பில்லாததால் நேற்று மூன்றாவது நாளாக நோயாளிகள் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

இதேசமயம், சுகாதாரச் சேவை ஊழியர்கள் ஆரம்பித்திருக்கும் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்த காசல் வீதி மகப்பேற்று வைத்தியசாலை ஊழியர்களும் நேற்று முதல் வேலை நிறுத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நாடு முழுவதிலும் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேலைநிறுத்தினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் பெரும்பாலான சேவைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலைகளின் அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களில் மேலும் சிலர் நேற்றுக் கடமைக்குத் திரும்பினர் எனவும் அமைச்சு தெரிவித்தது.

எவ்வாறாயினும், தற்காலிக சமயாசமய ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினாலும் அமைச்சின் சுற்றறிக்கையின்படி அவர்களைக் கடமை செய்ய அனுமதிக்க முடியாதிருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் 700 சமயாசமய ஊழியர்களைப் பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த ஊழியர்களுக்குப் பதிலாக புதிய ஊழியர்களைச் சேவையில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பின் பேச்சாளர் கூறினார்.

(ஒ-173)

# அபா கொஸ்தா கொலை சூத்திரதாரி பம்பலப்பிட்டி பகுதியில் கைதானார்!

### இறக்குவானை பகுதியில் மறைந்து வாழ்ந்திருக்கின்றார்

கொழும்பு, செப்.20

நீர்கொழும்பு, மல்வத்த ஆலயத்தின் குருவானவரான வண.அபாகொஸ்தா கொலை தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டு வந்த கொலை சூத்திரதாரி கடந்த புதனன்று பம்பலப்பிட்டியில் கைதுசெய்யப்பட்டார்.

சாள்ஸ் அந்தனி என்னும் இச் சந்தேக நபர் நீர்கொழும்புப் பகுதியில் ஹெரோய்ன் விற்பனை, ஜெக்பொட் சூதாட்டம் உட்படப் பல சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பவர் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

இவருக்குப் பாதுகாப்பு வழங்கினர் எனக் கூறப்படும் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும், ஜா எல பகுதியைச் சேர்ந்த ஒரு வர்த்தகரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கொலைச் சூத்திரதாரியான சந்தேக நபர் வங்கியொன்றில் பணம் பெற இரத்தினபுரியில் இருந்து பம்பலப்பிட்டிக்கு வருகிறார் என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே கொழும்பு குற்றப் புலனாய்வுப் பொலீஸாரால அவரைக் கைதுசெய்ய முடிந்தது.

அபா கொஸ்தா குருவானவரின் கொலையை அடுத்து இச்சந்தேகநபா இறக்குவானைப் பகுதியில் உள்ள தோட்ட சுப்பிரிண்டன் ஒருவரின் இல்லத்தில் மறைந்திருந்துள்ளார். கைது செய்யப்பட்ட ஜா எல வர்த்தகரே சந்தேக நபரை தோட்ட சுப்பிரிண்டனிடம் அறிமுகம் செய்திருக்கிறார்.

குறிப்பிடட்ட தோட்ட சுப்பிரிண்டனையும் பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தவிருக்கின்றனர்.

2001 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி நடந்த இக் கொலை தொடர்பாக கடந்த ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வென்னப்புவ பகுதியில் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலையடுத்தே கொலைச்சூத்திரதாரி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

## சனசமூக நிலைய நிர்வாகிகள் சந்திப்பு

சண்டிலிப்பாய்,செப்.20

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து சன சமூக நிலையங்களின் நிர்வாக சபையினருக்குமான சங்கமம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாக சபையினரை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமம் கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதம் வலிகாமம் கோட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-135-185)

# தமிழர்களது போராட்டத்தை ஒருபோதும் மு.காங்கிரஸ் கொச்சைப்படுத்தியதில்லை

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

மட்டக்களப்பு,செப்.20

எந்தச் சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியதில்லை.

இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

நேற்று வாழைச்சேனை அல் நூர் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைப்போராட்டத்திற்கு குறுக்கே நின்று, அவர்களது அபிலாஷைகளைக் கொச்சைப்படுத்துகின்ற ஒரு தலைமைத்துவமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் ஒரு போதும் செயற்பட்டதில்லை.

அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் தயாராகவுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்துச் சமுகங்களுக்கும் அவற்றிக்குரிய உரிமைகளைப் பகிர்ந்தளிக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது. இந்த விடயத்தில் பக்குவமாகவும், நிதானமாகவும் அரசாங்கம் செயற்படுவதே சிறந்த வழி.

சமூகங்களுக்கிடையே அடக்குமுறையைப் பிரயோகிப்பதன் மூலம் எதனையும் சாதித்துவிட முடியாது.

தமிழ், முஸ்லிம் சிங்கள மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துவதன் மூலமே இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க முடியும்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பு விடயத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை அனைத்துத் தரப்பினருமே மீறியுள்ளதால் கிழக்கில் பல அசம்பாவிதச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் மனதில் சுதந்திரவேட்கையும், சுயாட்சி பற்றிய சிந்தனையும் வலுவடைந்துள்ளது.

இதனால், ஏற்றநடவடிக்கைகளை அரசு எடுப்பதன் மூலம் நாட்டை பிரிவினையிலிருந்து பாதுகாக்க முடியும் என்றார் அவர். (ஒ-12)

## சிறுவர் தின போட்டிகள்

சர்வதேச சிறுவர் தினம், முதியோர் தினம் ஆகியவற்றையொட்டி தென்மராட்சி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கவிதை, கட்டுரைப் போட்டிகள் இன்று காலை 9.00 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலக அனுசரணையுடன் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(எ-117)

## சைவ நெறி போட்டிகள் யாழ். இந்துவில்

யாழ்ப்பாணம்,செப்.20

இன்று காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த நல்லூர் கல்விக் கோட்ட மட்டத்திலான சைவ நெறிப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே, போட்டி நடுவர்கள் அனைவரையும் யாழ். இந்துக்கல்லூரிக்கு வருகை தருமாறும் அவர் கோட்டுள்ளார். (எ-ஜ-10)

# அமைச்சர் நூர்தீன் மசூருக்கு எதிராக பிரதமரிடம் ரிசாத் எம்.பி.முறைப்பாடு!

### நடவடிக்கையின்றேல் ஆதரவை விலக்கிக்கொள்வாராம்

புத்தளம்,செப்.20

வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தனது சிறப்புரிமைகளை மீறியும், கௌரவத்தை மீறும் வகையிலும் செயற்படுவது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் (மு.கா) தெரிவித்தார்.

இது தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்காது போனால் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாகவும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தான் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளை வேண்டுமென்றே அமைச்சர் நூர்தீன் மசூர் தடுத்து வருகிறார் எனவும், மக்களுக்கு சேவை செய்யவேண்டிய சேவைகளை முடக்கி வருகிறார் எனவும் தெரிவித்த அவர், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி என்றவகையில் இது தனக்கு அபகீர்த்தியை உண்டாக்குவதாகவும் கூறினார்.

நூர்தீன் மசூர், அமைச்சர் என்ற முறையில் சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடித்து தனது பணிகளை முடக்குவதாகவும், பிரதமரிடம் இருந்து தனக்கு நீதி கிடைக்காது போனால் அரசுக்கு வழங்கும்ஆதரவை விலக்கிக் கொள்வேன் எனவும் ரிசாத் பதியுதீன் மேலும் தெரிவித்தார்.

## சமுர்த்தி வங்கி மிருசுவிலில் திறப்பு

தென்மராட்சி,செப்.20

தென்மராட்சி கிழக்கு வலயத்திற்கான சமுர்த்தி வங்கி நாளை மறுதினம் திங்கட்கிழமை மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள தனியார் வீடொன்றில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் வட வலயத்திற்கான சமுர்த்தி வங்கி வரணியிலும், மேற்கு வலய சமுர்த்தி வங்கி கைதடியிலும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி தெற்கு வலயத்திற்கான சமுர்த்தி வங்கி விரைவில் சாவகச்சேரியில் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

# நீர்கொழும்புக் கடலில் எண்ணெய்ப் படலம்!

கொழும்பு,செப்.20

கொழும்பு துறைமுகத்துக்குச் சமீபமாக கடலின் மேற்பகுதியில் பெரும் எண்ணெய்ப்படலம் ஒன்று காணப்படுகிறது. அப்படலம் கரையை நோக்கி நகர்ந்து வருவதாக கப்பல்களில் இருந்து கிடைத்த வானொலித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நான்கு கடல்மைல் தொலைவில் இந்த எண்ணெய்ப் படலம் காணப்படுகிறது. நீர்கொழும்பு கடல் பிரதேசத்தில் காணப்படும் இப்படலம் குறித்து விசேட கடற்படைக்குழு ஒன்று நேரில் சென்று ஆராய்ந்து வருகிறது.


### 30ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



**அமரர் சதாசிவம் சொக்கலிங்கம்**

தோற்றம் 11.08.1926 — மறைவு 22.08.2003

நாளை (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்திய மதிய போசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*96, இராஜேஸ்வரி வீதி,*
*நாயன்மார் கட்டு* (22801) (11-17-31)

— குடும்பத்தினர்.

### நன்றி நவில்கின்றோம்

20.08.2003 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்த அமரர் திருமதி பாக்கியலட்சுமி பேரம்பலம் (ஆசிரியர்) அவர்களின் இல்லத்தில் 24.08.2003 அன்று நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவர்க்கும் மற்றும் அன்னார் சுகவீனமுற்ற காலத்தில் வைத்திய சிகிச்சை வழங்கிய யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதிமார் மற்றும் சகஉத்தியோகத்தர்களுக்கும் அன்னார் மறைந்த துயரச் செய்தி கேட்டு நேரிலும், செய்தி மூலமாகவும் அனுதாபச் செய்திகளையும், பல உதவிகளையும் வழங்கிய அன்பர்கட்கும் அன்னாரின் குடும்பத்தின் சார்பாக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் 16.09.2003 செவ்வாய்க்கிழமை கீரிமலையில் நிகழ்ந்த அந்தியேட்டிக்கிரியைகளிலும் 18.09.2003 அன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழ்ந்த வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*தலையாழி,*
*கொக்குவில்.* (22802) (20-11-17-31)

திரு.வை.பேரம்பலம் குடும்பம்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### லக்ஷ்மி சினிமா இணுவில்

இன்று முதல்
M.G. R., ஜெயலலிதா, M.N. நம்பியார், நாகேஷ் இன்னும் பலர் நடிப்பில்
**ராமன் தேடிய சீதை**
(ரீல்ஸ்)
(பு.நே.): 11.00, 3.00, 7.00 (22759)

### நாகம்ஸ் சுன்னாகம்

அஜித், ஜோதிகா, பிரியங்கா, விவேக் நடித்த
**ராஜா**
தினசரி: 11.00, 3.00
வெள்ளி சனி, ஞாயிறு
1.00, 4.00, 7.00.
(ரீல்ஸ்)
(C/29908)

### ராஜா யாழ்ப்பாணம்

22ஆம் திகதி வரை
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த
**[illegible]**
காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
23ஆம் திகதி முதல்
**ராமச்சந்திரா**

### நிர்மலா

விஜயகாந்த், ப்ரீதா நடித்த
**தர்மா**
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**ULTRA FORCE 2**
தினம் 1.45 (பு.நே.)


### மரண அறிவித்தல்

**சின்னையா விநாயகலிங்கம்**

தம்பையப்புலம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் RDS அருகில் அம்பாள்குளம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா விநாயகலிங்கம் 18.09.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் ஞானகலையின் அன்புக் கணவரும், சவுந்தரராஜன், நிலாமதி, குமாரராஜன் (லண்டன்), மகேந்திரராஜன், கேசவராஜன், சுபாஜினி (ஜேர்மனி), குகராஜன் (போராளி-கனியன்), உஷா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலையில் தகனக்கிரியைக்காக அம்பாள்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*RDS அருகில்,*
*அம்பாள் குளம்,*
*கிளிநொச்சி.* (22804)(11-17-31)

தகவல்:
குடும்பத்தினர்.

# 'பொடா' சட்டத்தில் கைது செய்யப்பட்ட 'நக்கீரன்' கோபாலுக்கு பிணை அனுமதி

சென்னை,செப்.20

• தமிழக அரசால் 'பொடா' சட்டத்தில் கைதான 'நக்கீரன்' ஆசிரியர் ஆர்.ஆர்.கோபாலுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று பிணை அனுமதி வழங்கியது.

தமிழகத்தில் பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள வைகோ. உட்பட்ட 42 பேரில் முதன்முதலாக இவருக்கே பிணை அனுமதி கிட்டியுள்ளது.

உரிமம் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்ததாகவும் தடைசெய்யப்பட்ட தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுக்கு ஆதரவாகத் துண்டுப் பிரசுரம் வைத்திருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு பொடா சட்டத்தில் கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி கோபால் கைது செய்யப்பட்டார்.

சென்னை பூந்தமல்லி பொடா சிறப்பு நீதிமன்றத்தில் கோபால் மீதான வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த நீதிமன்றத்தில் பிணை கோரி கோபால் தாக்கல் செய்த மனு கடந்த ஒகஸ்ட் 4 ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது. அதையடுத்து உயர் நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார்.



இந்த மனுவை விசாரித்த இரு நீதிபதிகளைக் கொண்ட அமர்வு, கோபால் மீதான குற்றச்சாட்டுக் குறித்து உயர் பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ள விளக்கங்களில் பலமுரண்பாடுகள் காணப்படுவதாகக் கூறி கோபாலுக்கு பிணை அனுமதி வழங்கியது.

கோபால் 25 ஆயிரம் ரூபா சொந்தப் பிணையிலும் அதே தொகைக்கு இருநபர்கள் பிணையிலும் விடுவிக்கப்படுவதாகவும் -

எழும்பூர் பெருநகர குற்றவியல் நடுவர் மன்றத்தில் தினமும் முற்பல் 11 மணிக்கு ஆஜராகி அவர் கையெழுத்திட வேண்டும் என்றும் -

சென்னையைவிட்டு அவர் வெளியே செல்லக்கூடாது என்றும் -

நீதிபதிகள் தெரிவித்தனர்.

'பொடா'ச் சட்டத்தின் கீழ் கைதான 'நக்கீரன்' கோபாலுக்கு பிணை அனுமதி கிடைத்திருப்பதால், தமிழக அரசால் இதே 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வைகோ, பழ.நெடுமாறன், சு.ப.வீரபாண்டியன் போன்ற ஈழத்தமிழர் ஆதரவாளர்களுக்கும் பிணை அனுமதி கிடைக்க வாய்ப்பு உண்டென நம்பப்படுகிறது.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற ஒன்றே இந்தியாவின 'பொடா' சட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

# டக்ளஸ், சித்தார்த்தன் ஹெல்கிசனுடன் சந்திப்பு

கொழும்பு,செப்.20

கொழும்பு வந்திருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசனை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினரை சந்தித்து பேசினர்.

கொழும்புக்கான நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் அழைப்பின் பேரில் தூதரின் இல்லத்தில் கடந்த புதனன்று இச்சந்திப்பு இடம்பெற்றதாக ஈ.பி.டி.பி. விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி. குழுவினருடன் புளொட் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், ஸ்ரீஸ் கந்தராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

## மதிப்பீட்டு பரீட்சை

தென்மராட்சி,செப்20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் தரம் 6 மாணவர்களுக்கான தமிழ், கணிதம் ஆகிய பாட செயற்றிட்ட முதலாவது மதிப்பீட்டுப் பரீட்சைகள் அந்தந்தப் பாடசாலைகளில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## சிறுவன் ஒப்படைப்பு

மட்டக்களப்பு,செப்.20

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் சேரவந்த சிறுவன் ஒருவன் 'யுனிசெவ்' பிரதிநிதி முன்னிலையில் நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

களுவாஞ்சிக்குடி தமிழீழ அரசியல் துறைப்பிரதேச அலுவலகத்தில் வைத்து 13வயதான இச்சிறுவன், யுனிசெவ் பிரதிநிதி கிறிஸ்ரபா எறபா முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டான். (ஒ-12)

## சமாதானப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு கனடிய அரசு முழு ஆதரவு வழங்கும் என்று தூதர் அங்கு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே எவ்வளவு விரைவாகப பேச்சு ஆரம்பிக்கின்றதோ அவ்வளவு விரைவில் நாட்டில் சமாதானம் தோன்றும். இதனை புலிகளின் தலைவர்களிடம் வலியுறுத்தினேன் என்று தூதா ஹேமன் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஐ-12)

## கொழும்பைத் தாக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் அவர்கள் இருவரும் நேற்றுக் காலை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இத் தகவல்களைத் தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு மேலும் கூறியதாவது:-

தாக்குதலுக்கென கொழும்பில் தாஸ், திருகோணமலையில் காந்தி, மட்டக்களப்பில் கீர்த்தி ஆகியோரின் தலைமையில் புலிகள் இப்பொழுதே தயாராகி வருகின்றனர். பொட்டு அம்மானால் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆயிரத்து 500 விசேட படையணியினர் கொழும்பில் நிலைகொண்டுள்ளனர். இவர்களுடன் தீவிர பயிற்சிகளைப் பெற்ற தற்கொலைப் போராளிகளும் வந்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவின் மூலமாகவும் எமது கட்சியினால் அமர்த்தப்பட்டுள்ள இரகசிய புலனாய்வாளர்கள் மூலமும் இத் தகவல்களைப் பெற்றிருக்கிறோம். கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல இப்பொழுது கொழும்பிலும் புலிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன் புலிகளின் உளவுப் படையினர் நாடாளுமன்றம், மாதிவெல நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்கள், அமைச்சுகள் மற்றும் அரச ஊடக கேந்திர நிலையங்கள் என்பனவற்றுக்குச் சென்று பூகோள ரீதியான அவற்றின் அமைப்பு முறைகளைத் தயாரித்துள்ளனர். மேலும், கொழும்பிலுள்ள எல்லாத் தபால் பெட்டிகளையும் மையமாக வைத்து புகைப்படங்கள் எடுக்கப்பட்டு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த விவரங்கள் அனைத்தும் மட்டக்களப்பில் இருக்கும் நம்பி என்பவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவரே புலிகளின் தகவல் சேகரிப்பு மையத்துக்குப் பொறுப்பானவர். இவர் மூலமாகவே சகல தகவல்களும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இதற்கான சகல சான்றுகளும் எம்மிடம் இருக்கின்றன.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியினதும் எதிர்க் கட்சியினதும் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கிறார்; ஆபத்து இல்லை என்று பிதற்றுகிறார்.

- இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஆலோசனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீண்டும் ஆரம்பிக்காமல் தடுக்கக்கூடிய அளவுக்கு நீண்டதாக இருக்காது என்றும் ஹெல்கிசன் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது மனித உரிமை மீறல்கள், கண்காணிப்புக் குழுவின் உத்தரவுகளுக்குப் பணிய மறுப்பது போன்ற விடயங்களும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் ஹெல்கிசன் கூறினார்.

## மீள்குடியமர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனவைப்பெற்ற குடும்பங்களுக்கு, கொடுப்பனவைப் பெற்ற திகதியிலிருந்து முதல் ஆறு மாத காலத்துக்கு அரசு நிவாரணம் வழங்கும். அடுத்த ஆறு மாதங்களுக்கு உலக உணவுத் திட்டம் நிவாரணம் வழங்கும். அதன்பின, அக்குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படும் என்று அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார். (ஒ-3)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவித்து மக்களை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும்.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் உள்ள பிரதான கல்லூரிகளான மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி உட்படப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத் தொகுதி, எரிபொருள் நிலையம், பருத்தித்துறை தபாற்கந்தோர் உட்பட அங்கிருக்கின்ற இரண்டு பிரதான கோயில்கள் முதலானவற்றையையும் தடைகளகற்றி மக்கள் சென்றுவரக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித்தருமாறு கேட்டிருந்தேன்.

மருதங்கேணியின் அம்பன், குடத்தனைப் பகுதியில் உள்ள பொது இடங்களையும் மக்கள் பாவனைக்கு விட்டுக்கொடுக்குமாறும் கேட்டிருந்தோம்.

இவற்றிற்கு இராணுவம் மறுத்துவிட்டது. குறிப்பாக, யாழ்பிராந்திய இராணுவத் தளபதி இதற்கு முற்றுமுழுதான மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

நியாயமான கோரிக்கைகளையே நாம் முன்வைத்துள்ளோம். ஏறக்குறைய 13 ஆண்டுகளுக்கு மேலாக அகதி முகாம்களில் வாழும் மக்களை இன்று காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய மக்களின் சொந்த இடங்களில் இராணுவம் வசிக்கும்போது மக்கள் அல்லலுற்று அலைந்து திரிவதை மக்கள் பிரதிநிதிகளாக இருந்து நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இராணுவத்தின் தடைகளையும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

- இவ்வாறு அமைச்சர் அப் பேட்டியில் தெரிவித்தார். (ஐ-12)


BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
(சரளமாக உரையாட)
சிங்களம்
By:லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 21-09-2003
Sun.3.30 p.m.
(Sat.Sun.3.30 p.m.)
(22770)(12-11-10)

வணிகக் கல்வி
PAPER CLASS
A/L DAY-2003
திங்கள், வெள்ளி:7.30 - 8.30
BY:S.யசோ
BEACON யாழ்நகர்.
(12) (22775)

இன்றைய வெளியீடு
VCD SONG
திருடா திருடி
திவான்
95/= மட்டுமே
வியாபாரிகளுக்கு
விசேட கழிவு வழங்கப்படும்.
மூர்த்திவீடியோ &
எலக்ரோனிக்ஸ்
மானிப்பாய்.
T.P.: 021 - 2884
(சி 30276)(12)

CHEMISTRY
DIAS B.Sc. (Hons)
★ அலகு ரீதியான முழுமையான மீட்டல் வினா விடை
74, Palaly Rd., Thirunelvely.
104/4, Cross Rd. Athiyady.
(22054) (29-11-14)

புலமைப்பரிசில்-2003
பரீட்சை 49இல்
★ஆ.யேனுகானந்-194
★த.அனோஜன் - 192
★ர.சிந்துஜன் - 191
அடுத்த பரீட்சை -21.09.2003
ஞாயிறு காலை 8.30
தரம் 5 புலமைப்பரிசில் 2003 (DEC)
வினாவிடை வகுப்பு
[புதியபாடத் திட்டத்தைத் தழுவி]
ஆரம்பம்- 27.09.2003 சனி காலை 8.00 மணி.
★குறிப்பிட்ட சில அனுமதிகள் மட்டும்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.
(22803) (29-11-14)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
வெப்பவியல்
Sat,sun-6-7(p.m)
ஆரம்பம்: 20.09.2003 (இன்று)
ஒளியியல் (A/L2005)
(அலைகளும் அதிர்வுகளும்)
Mon,Fri-6-7(a.m)
ஆரம்பம்: 22.09.2003
BY:கருணாநிதி
(22805)(29)

சக்தியின் உதயம்
ஹினோடே
உங்களுக்கு
மிற்சுயியைத் தந்த
டோக்கியோ சிமெந்து நிறுவனம்
வழங்கும்
ஹினோடே
இலங்கை மக்களின் நம்பிக்கையை
மேலும் வலுப்படுத்தி கட்டட
நிர்மாணத்துறையில்
புத்தொளி பரப்புகிறது
HINODE CEMENT
ORDINARY PORTLAND CEMENT
MADE IN SRI LANKA
Tokyo Cement Company (Lanka) Ltd.
Net Weight 50kg
சக்தியின் முன்னணியில்
பொறிக்கப்பட்டது

யாழ்நகரில் மேசைத் தொலைபேசி விற்பனைக்கு....!
P.C.T.C
கவர்ச்சிகரமான விலையில் மேசைத் தொலைபேசிக்கு யாழ். நகரில் முதற்தர நிறுவனம்.
பவர் செல்லுலர்.
185, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் அருகில்.
I.DD இணைப்புகள் ஸ்ரீலங்கா தொலைபேசி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்கள் வழங்கப்படும்.
உத்தரவாதம் உண்டு.
தொடர்புகளுக்கு:0777 242416,0712 - 399220
0712 - 381125;
E-mail: Power@ cl.lk
யாழ்நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம்.
(C/30273)

L த சாரிகா லேணர்ஸ்
எமது சட்ட ரீதியாக அங்கீகாரம்பெற்ற A தரம் உடைய சாரதிப் பயிற்சிக் கல்லூரியில் சகலவிதமான வாகனங்கள் செலுத்துவதற்கும் சிறந்த முறையில் பயிற்சி அளித்த, சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் இம்மாத இறுதிக்குள் கனரக வாகனங்களுக்குரிய செயல் முறைப் (ரயல்) பரீட்சை யாழ். நகரிலேயே நடைபெறும் என்பதை யாழ். மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.
பஸ்நிலையம் முன்பாக,
இல.38,கந்தப்பசேகரம் வீதி,
(H.N.Bank இற்கு பின்னால்)
யாழ்ப்பாணம்.
(19318) (29-11-14)
தலைமைக்காரியாலயம்
இல.108, புதிய பஸ்நிலையம்,
வவுனியா.
T.P.:024-23515


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.